விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-3530)

# வலம்புரி

Valampurii

E-mail : valampurii@sltnet.lk
valampurii@yahoo.com

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 தை 10 ஞாயிற்றுக்கிழமை (24.01.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 036

# சர்வதேசத்தின் பங்களிப்பு

# விசாரணைகளில் அவசியம்


புதிய ஆட்சியிலும் குற்றங்கள் தொடர்பு

## ஜனாதிபதி மைத்திரிக்கு யஸ்மின் சூக்கா பதில்



(கொழும்பு) இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட உள்ளூர் விசாரணைப் பொறி முறைகள் நீண்ட காலமாக தோல்வியடைந்த வரலாறு உள்ள நிலையில், சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் நீதி நடைமுறையில் நம்பிக்கை வைப்பதற்கு சர்வதேசத்தின் பங்களிப்பு அவசியம் என சர்வதேச உண்மைகள் மற்றும் நீதி வேலைத்திட்டம் என்ற அமைப்பின் நிறைவேற்று இயக்குநர் யஸ்மின் சூக்கா வலியுறுத்தியுள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## திடீரென ஏற்பட்ட நில வெடிப்பு!



### அச்சுவேலி நவக்கிரியில் பெரும் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி நவக்கிரியில் நேற்றைய தினம் திடீரென நிலவெடிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் வீடு ஒன்று கடும் சேதமாகி உள்ளதோடு, வீட்டு காணியிலும் வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

இப்பகுதியில் முதன் முதலாக 15 ஆம் பக்கம் பார்க்க....

## கற்பாறைகளின் கீழிறக்கமே நிலவெடிப்புக்கு காரணம்

### பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை கருத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். அச்சுவேலி நவக்கிரிப்பகுதியில் நேற்று ஏற்பட்டிருந்த திடீர் நிலவெடிப்புக்கு நிலக்கீழ் சுண்ணாம்பு கற்பாறைகளின் கீழ் இறக்கமே காரணமாக அமைந்துள்ளதாக தமது ஆய்விலிருந்து அறிய முடிவதாக வாழ்நாள் பேரா 15 ஆம் பக்கம் பார்க்க....

## பேரவையால் தயாரிக்கப்படும் வரைபை த.தே.கூட்டமைப்பு பரிசீலிக்கத் தயார்

### சம்பந்தனின் கருத்தை தமிழ் மக்கள் பேரவை வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவையால் தயாரிக்கப்படும் தீர்வுத் திட்ட வரைபு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தரப்படுமாயின் தாம் அதை பரிசீலிக்க தயாராக இருப்பதாக கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வெளியிட்டிருந்த கருத்தினை தமிழ் மக்கள் பேரவை வரவேற்றுள்ளது.

இது தொடர்பில் அவ் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ் மக்கள் பேரவை 15 ஆம் பக்கம் பார்க்க....

## சீமெந்து பிளாற் வீழ்ந்ததில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழப்பு

### கூலி வேலையில் ஈடுபட்டவேளை துயரம்



15 ஆம் பக்கம் பார்க்க....

## பாணுக்குள் கஞ்சா; கொடுத்தவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலைக்குள் இருக்கும் கைதி ஒருவருக்கு பாணிற்குள் கஞ்சா வைத்து கொடுக்க முற்பட்ட நபரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் மானிப்பாய் - 15 ஆம் பக்கம் பார்க்க....

## 'ஒற்றையாட்சி கோட்பாட்டை ஏற்கமுடியாது'

### சம்பந்தரின் கருத்துக்கு தென்பகுதி தலைமைகள் எதிர்ப்பு!




(கொழும்பு)

ஒற்றையாட்சிக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், அதி உச்ச அதிகாரப் பகிர்வை உள்ளடக்கிய சமஷ்டி முறை மூலமே தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் 15 ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி – பிரதமர் முக்கிய பேச்சு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் எதிர்வரும் 4 ஆம் திகதி முக்கியமான பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

சிவில் அமைப்புக்கள் மற்றும் 15 ஆம் பக்கம் பார்க்க....

## போர்க்குற்ற விசாரணை நீதிபதி இன்று இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுக்கும் இலங்கை அரசாங்கத்தின் உள்ளகப் பொறிமுறைக்கு உதவுவதற்காக ஜப்பானின் போர்க்குற்ற விசாரணை நீதிபதியான மோட்டூ நுகுசி இலங்கைக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்யவுள்ளார்.

பொறுப்புக்கூறல் தொடர்பில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் 15 ஆம் பக்கம் பார்க்க....

## இந்திய போர்க்கப்பலை பார்வையிட்டார் மைத்திரி

(கொழும்பு)

ஐஎன்எஸ் மைசூர் என்ற நாசகாரி ஏவுகணைப் போர்க் கப்பலுடன் மூன்று நாள் நல்லெண்ணப் பயணத்தை மேற்கொண்டு கொழும்புத் துறை 15 ஆம் பக்கம் பார்க்க....



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நாடாளுமன்ற உறுப்பினராக எம்.எஸ்.தௌபீக் நியமனம்

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசுக்குரிய தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு முன்னாள் துணை அமைச்சர் எம். எஸ். தௌபீக் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் தேர்தல் ஆணையாளரால் வெளியிடப்பட்டுள்ளது.



ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவுப் ஹக்கீமின் சகோதரரான ஏ. ஆர். ஏ ஹபீஸ் தனது பதவியை இராஜினாமா செய்ததன் காரணமாக ஏற்பட்டிருந்த வெற்றிடத்திற்கே கட்சித் தலைமையினால் அவர் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

ஐக்கிய தேசிய கட்சிக்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசுக்குமிடையிலான தேர்தல் கூட்டு உடன்படிக்கையின்படி ஐ. தே. கட்சியினால் இரு தேசிய பட்டியல் நாடாளுமன்ற இடங்கள் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு வழங்கப்பட்டிருந்தன.

இந்தப் பதவிக்கு யாரை நியமிப்பது என்பது தொடர்பில் அப்போது கட்சிக்குள் கருத்து முரண்பாடுகள் நிலவின.

கட்சியின் பொதுச் செயலாளரான ஹசன் அலி மற்றும் முன்னாள் அமைச்சரான சேகு பசீர் தாவூத் ஆகியோருக்கு கிடைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அவர்களது ஆதரவாளர்கள் மத்தியில் தீவிரமாக காணப்பட்டது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான அமைச்சர் ரவுப் ஹக்கீம் கட்சி தலைவர் என்ற ரீதியில் தனக்குரிய அதிகாரத்தின் பேரில் இறுதி நேரத்தில் அவரது சகோதரரான ஏ. ஆர். ஏ ஹபீஸ் மற்றும் சட்டத்தரணி எம். எச். எம். சல்மான் ஆகியோரை அப்போது பரிந்துரை செய்திருந்தார்.

தற்காலிக நடவடிக்கையாக தனது அதிகாரத்தின் கீழ் எந்த நேரத்திலும் பதவி விலகக் கூடியவர்களாகவும் நம்பிக்கைக்குரியவர்கள் என்ற அடிப்படையிலும்தான் இருவரையும் அவர் நியமித்திருந்தாக அவ்வேளை கூறப்பட்டிருந்தது.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் எம்.எஸ்.தௌபீக் மீண்டும் போட்டியிட்டிருந்த போதிலும் விருப்பு வாக்குகள் அடிப்படையில் தெரிவாகும் வாய்ப்பை இழந்திருந்தார்.

இந்நிலையில் மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகியுள்ள எம்.எஸ். தௌபீக் நாளை மறுதினம் செவ்வாய்கிழமை நாடாளுமன்றம் கூடும் போது பதவிப் பிரமாணம் செய்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கிடையே இந்தப் பதவி இப்போது தௌபீக்கு கொடுக்கப்பட்டமை குறித்தும் கட்சிக்குள் கருத்து முரண்பாடு நிலவுவதாக கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன. (செ-12)

# ஈழ அகதிகளுக்கு இடமில்லை அவுஸ்.

(சிட்னி)

தமிழ் நாட்டில் இருந்து அவுஸ்திரேலிய செல்லும் ஈழ அகதிகள் யாரும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டார்கள் என்று அவுஸ்திரேலிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தென்னிந்தியாவுக்கான அவுஸ்திரேலியாவின் துணைத்தூதர் சேன் கெல்லி இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் இருந்து செல்லும் அகதிகள் யாரும் ஐக்கிய நாடுகளின் அகதிகள் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட அகதிகள் இல்லை.

எனவே அவ்வாறான அகதிகள் யாரையும் ஏற்றுக் கொள்ளும் நிலையில் அவுஸ்திரேலிய இல்லை என்று அவர் தெரிவித்துள்ளார். (செ-12)


## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் உடனடி வேலைவாய்ப்பு

இலங்கையில் பிரசித்தி பெற்ற நிறுவனங்களுக்கு பயிற்சியுள்ள, பயிற்சியற்ற ஆண், பெண் பாதுகாப்பு உத்தியோகத்தவர்கள் தேவை.

- வயது: 18 - 55 வருடங்கள்
- சம்பளம் : ரூபா. 35,000/- + OT

தங்குமிடம் இல்லை, சாப்பாடு இலவசம்.

தேவைப்படும் பிரதேசங்கள்: யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, திருகோணமலை.

தொடர்புகளுக்கு: **0765 412260**

(இ-3356)

**PEOPLES BANK**
#145/161, PETTAH, COLOMBO -12.


## மரண அறிவித்தல்

### தர்மலிங்கம் கணேசலிங்கம்

**(கமநல சேவை உத்தியோகத்தர் - வேலணை)**



முதலாம் வட்டாரம் வேலணை கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் கணேசலிங்கம் அவர்கள் கடந்த 23-01-2016 சனிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் தர்மலிங்கம் தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், தயாநிதியின் அன்புக் கணவரும், கவிவர்ணன், தமிழினி, டிலானி, ரதிவர்ணன், காலஞ் சென்ற சசிவர்ணன் ஆகியோரின் அன்புத்தந்தையும், இராசையா இலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், சித்திரா, சிவநேசன், லலிதா (பிரான்ஸ்), யோகானந்தன், லோகநாதன் (பிரான்ஸ்), தவமணி புஸ்பராணி (ஜேர்மனி), கலாநிதி, காலஞ்சென்ற ரகுநாதன், இராஜகுமார் (பிரான்ஸ்), பாஸ்கரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 24-01-2016 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வேலணை கிழக்கு,**
**வேலணை.**

தகவல் :-
குடும்பத்தினர்

(3388)


## வாடகைக்கு

வர்த்தகக் கட்டிடம் வாடகைக்கு உண்டு. தரை மாடி 3000 ச.அடி முதலாம் மாடி, 3 வீடுகள், (3362)

438, கே.கே.எஸ் றோட், கோண்டாவில்.
0777350088, 0718484967

வீட்டில் வந்து தையல் மிசின் அனைத்தும் திருத்திக் கொடுக்கப்படும்.
1 மிசின் திருத்த 600/-

தொடர்புகளுக்கு: (3384)
**0770258694**

## ALL OUT
Pest Control Service



**கறையான் தொல்லையா?**

உங்கள் கட்டடங்களை உத்தரவாதத்துடன் பாதுகாத்து கொடுக்க நாங்கள் இருக்கின்றோம்.

(3385)

தொடர்புகளுக்கு :
ந.ரூபகாந்த்
077 151 5897, 021 499 3200

## வேலையாள் தேவை

சிற்றுண்டிசாலைக்கு ஆண் வேலையாள் ஒருவர் தேவை. 25 வயதிற்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

**மாருதம்**
(யாழ் இந்து அருகில்)
T.P : 0772269237
0772761161

(3386)

பரீட்சைக்குரிய வெற்றித் திருநாள்

## தைப்பூச திருநாள்



இன்று
**இலவசமாக**
தரம் - 05,04
மாணவர்களுக்கு

## கொழும்பு எக்ஸ்பிரஸ்

புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை நடைபெற உள்ளதால் தமிழ் மொழி மூலம்

**2016-ம், 2017-ம்**

ஆண்டு பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் அனைவருக்கும் இன்று பரீட்சை இலவசமாக நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன். பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கும் தொலைபேசி மூலம் பதிவு செய்யும் மாணவர்களுக்கும் இனி நடைபெறும் பரீட்சைகளுக்கு **30%** சலுகை வழங்கப்படும்.

பரீட்சை நடைபெறும் இடம்:

## யாழ்கல்லூரி

| | |
|---|---|
| ஆறுகால்மடம் | கேணியடி, |
| பொன்னையா லேன், | கொக்குவில் மேற்கு, |
| ஆனைக்கோட்டை, | கொக்குவில், |
| யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணம். |
| 0775937166 | 0778448763 |

குறிப்பு :

- ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 8.00 - 10.00, 9.00 - 11.00, 10.00 - 12.00 மாலை 2.00 - 4.00, 3.00 - 5.00, 4.00-6.00 மேற்குறிப்பிட்ட பரீட்சை நேரங்களில் ஒன்றை தெரிவு செய்து தங்கள் பிள்ளையை பரீட்சைக்கு அனுப்பி வைக்கவும்.
- கூடிய புள்ளி எடுக்கும் 10 மாணவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசுகள் வழங்கப்படும். (சி-3543)


## காணவில்லை



நல்லூர் சட்டநாதர் கோவிலடியைச் சேர்ந்த
**கந்தையா இராசரத்தினம்**
(பொன்னண்ணை)
என்பவரை 23.01-2016 (சனிக்கிழமை) நேற்று அதிகாலை முதல் காணவில்லை.
இவரை கண்டவர்கள் கீழுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தயவுடன் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு**
**077 8610280**
**077 4897320**

(3387)

# சகல சட்டங்களையும் கட்டுப்படுத்த விரைவில் புதிய சட்டம் அறிமுகம்

அனைத்து சட்டங்களையும் கட்டுப்படுத்தக் கூடிய புதிய சட்டமொன்றை அறிமுகம் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அபிவிருத்திப் பணிகளை இலக்காகக் கொண்டு இந்த சட்டம் அறிமுகம் செய்யப்படவுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

நாட்டின் அபிவிருத்திப் பணிகளை துரிதப்படுத்துவதே இந்த சட்டத்தின் நோக்கமாகும் என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறெனினும் இந்த புதிய சட்டம் அறிமுகம் செய்யப்பட்டால் நாட்டில் தற்போது அமுலில் உள்ள அனைத்து சட்டங்களையும் பின்தள்ளி, புதிய சட்டம் அமுலாகக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு ஏனைய சட்டங்களை கட்டுப்படுத்தும் நிலைமை ஆரோக்கியமானதல்ல என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உதாரணமாக மின்சாரம், முதலீடு, புகையிரதம் போன்ற துறைகளில் தற்போது காணப்படும் சட்ட திட்டங்கள், நியமங்கள் ஆகியனவற்றை தேவையான வகையில் மாற்றியமைக்க புதிய சட்டத்தின் ஊடாக நிறுவப்படவுள்ள அபிவிருத்திக்கான முகவர் நிறுவனத்திற்கு அதிகாரமுண்டு.

இந்த முகவர் நிறுவனத்தில் அரசியல்வாதிகள், அதிகாரிகள், ஓய்வுபெற்ற அதிகாரிகள் மற்றும் முன்னணி வர்த்தகர்கள் அங்கம் வகிப்பார்கள் என கொழும்பு ஊடகம் தெரிவித்துள்ளது. (இ)

# ஆஸி நோக்கி படகில் சென்ற 1,200 அகதிகள் உயிரிழப்பு

## இலங்கையர்களே அதிகம் எனத் தகவல்

அவுஸ்திரேலியாவுக்கு செல்வதற்காக ஆபத்தான படகு பயணங்களை மேற்கொண்ட அகதிகளில் ஆயிரத்து 200 பேர் உயிரிழந்துள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளதாகவும் இவர்களில் பெரும்பாலானோர் இலங்கை தமிழ் அகதிகள் என தென்னிந்தியாவுக்கான அவுஸ்திரேலிய துணைத் தூதுவர் ஷீன் கெலி தெரிவித்துள்ளார்.

இந்த மரணங்கள் 2008ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நடந்திருக்கலாம் எனவும் அவர் கூறியுள்ளார். அவுஸ்திரேலியாவில் குடியேற விசா இன்றி படகுகள் மூலம் வரும் எவருக்கும் அங்கு குடியேறும் சாத்தியமில்லை.

படகுகள் மூலம் நீண்ட ஆபத்தான பயணத்தை மேற்கொண்டு வரும் மக்கள் அவுஸ்திரேலிய கடலில் இருந்து பாதுகாப்பாக அப்புறப்படுத்தப்படுவார்கள் அல்லது பிராந்தியத்தில் உள்ள வேறு நாடு ஒன்றுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். இவர்களை அவுஸ்திரேலியாவில் மீள்குடியேற்றுவது மாறறு வழியாக இருக்காது. 2008 ஆம் மற்றும் 2013 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் கடல் வழியாக அவுஸ்திரேலியாவை அடைய முயற்சித்த ஆயிரத்து 200 பேர் உயிரிழந்துள்ளனர்.

2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் மேற்கொள்ளப்படும் எல்லை இறையாண்மை நடவடிக்கையின் கீழ் உயிரிழப்புச் சம்பவங்கள் எதுவும் நடக்கவில்லை எனவும் ஷீன் கெலி மேலும் தெரிவித்தார். (இ)

# நிதி மோசடி; இருவர் கைது

தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் கிடைக்கப்பெற்ற அமெரிக்க டொலர் தொகையொன்றை தருவதாகக் கூறி நிதி மோசடியில் ஈடுபட்டவர்களை கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இதில், சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கைதுசெய்யப்பட்ட இருவரும் 72 மணித்தியால காவல் உத்தரவின் மூலம் விசாரணைக்கு உட்படுத்துவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த சந்தேக நபர்கள் நுவரெலியா, பண்டாரவளை, பெஹெலியகொடை மற்றும் மருதானை ஆகிய பிரதேசங்களிலும் ஒரு கோடியே 80 இலட்சத்திற்கும் அதிகமாக நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகிறது.

கொழும்பைச் சேர்ந்த ஒருவரால் கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவிற்கு செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கு அமையவே குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (இ)

# கவிப்பேரரசு வைரமுத்து வடக்கு பேரவை செயலகத்தில்



பாடலாசிரியர் கவிஞர் கவிப்பேரரசு வைரமுத்துவின் யாழ்.விஜயத்தின் போது வடக்கு மாகாண சபையின் பேரவைச் செயலகத்துக்கு நேற்று வருகை தந்த போது அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் பொன்னாடை போர்த்தி வரவேற்றார். பின்னர் கவிஞரும் குழுவினரும் வடக்கு மாகாண சபை சபாமண்டபத்தினைப் பார்வையிட்டதுடன் அவைத் தலைவருடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டிருந்தார்.

# பொலித்தீன் பாவனைச்சட்டம் பெப்ரவரியில் கடுமையாகும்


20 மைக்ரோனுக்கும் குறைவான அளவுடைய பொலித்தீனை பாவிப்போருக்கு எதிராக, பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய சுற்றாடல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

மேலும், இவ்வகையான பொலித்தீனை உற்பத்தி செய்யும் மற்றும் விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

20 மைக்ரோனுக்கும் குறைவான அளவுடைய பொலித்தீனுக்கு தற்போது தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், அந்தத் தடையை மீறுவோர் யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்த அதிகார சபை கூறியுள்ளது.

பொலித்தீன் பாவனையாளர்களுக்கு ஜனவரி மாதம் 31ஆம் திகதி வரை சலுகைக்காலம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அதன் பின்னர், இந்தச் சட்டத்தை அதிகாரிகள் கடுமையாக்குவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (இ)

# மகிந்த ராஜபக்ஷ குற்றவாளியாகவில்லை -அரசு



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தாலும் இதுவரையில் அவர் குற்றவாளியாகவில்லை என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கட்டுமானப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலி புதிய நீதிமன்ற வளாகத்தை பார்வையிட்டதன் பின்னர் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

விசாரணைகளின் முடிவுகள் வெளியாகும் வரை அவர் குற்றவாளியாக கருதப்படமாட்டார் என தெரிவித்த அமைச்சர், பொலிஸ் நிதி மோசடி ஒழிப்பு பிரிவின் அல்லது ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளில் எவராலும் செல்வாக்குச் செலுத்த முடியாது என சுட்டிக்காட்டினார்.

அத்துடன் நாட்டில் சுயாதீன நீதித்துறை காணப்படுவதனால் அதன் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார். (இ)

# படை வீரர்களின் 3ஆவது பிள்ளைக்கான ஒரு லட்சம் ரூபா கொடுப்பனவு நிறுத்தம்

(கொழும்பு)

படைவீரர்களின் மூன்றாது பிள்ளைக்காக வழங்கப்பட்டு வந்த ஒரு இலட்சம் ரூபா கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளது.

படைவீரர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பிறக்கும் மூன்றாவது பிள்ளைக்கு வழங்கப்பட்டு வந்த ஒரு இலட்சம் ரூபா கொடுப்பனவு இந்த ஆண்டு முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

மகிந்த அரசாங்கம் படைவீரர்களுக்கு நன்றி பாராட்டும் வகையில் இந்த கொடுப்பனவை வழங்கியிருந்தது.

எனினும், இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் முப்படை மற்றும் பொலிஸ் திணைக்களம் ஆகியவற்றில் கடமையாற்றி வருவோருக்கு பிறக்கும் மூன்றாவது பிள்ளைக்கு வழங்கப்பட்டு வந்த ஒரு இலட்சம் ரூபா கொடுப்பனவிற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

இதனால் கொடுப்பனவு வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதாக குறித்த தரப்புக்களுக்கு சுற்றுநிருபம் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை மைத்திரி அரசின் இந்த நடவடிக்கைக்கு சிங்கள பௌத்த அமைப்புக்கள் கடும் கண்டனங்கள் வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

# எதிர்க்கட்சியை சிதைக்க இரகசிய சூழ்ச்சி திட்டம்?

## உதய கம்மன்பில காட்டம்

கூட்டு எதிர்க்கட்சியை சிதைப்பதற்கு இரகசிய சூழ்ச்சித் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருவதாக பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

வாராந்த சிங்களப் பத்திரிகையொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். அரசாங்கத்திற்கு நெருக்கமான தரப்புக்கள் இவ்வாறு கூட்டு எதிர்க்கட்சியை சிதைக்க முயற்சிக்கின்றன என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியினால் உருவாக்கப்பட உள்ள அரசியல் முன்னணியின் தலைவர் யார் என்பதனை இன்னமும் கூட்டு எதிர்க்கட்சியின் தலைமைத்துவ குழு தீர்மானிக்கவில்லை. புதிய அரசியல் முன்னணியின் தலைமை பதவி தொடர்பில் நெருக்கடி நிலைமை காணப்படுவதாக பிரசாரம் செய்து அதன் ஊடாக கூட்டு எதிர்க்கட்சியை சிதைக்க சிலர் முட்டாள்தனமாக முயற்சிக்கின்றனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எப்போது நடைபெறும் என அறிவிக்கப்பட்டதன் பின்னர், கூட்டு எதிர்க்கட்சியின் புதிய அரசியல் கூட்டணி மற்றும் அதன் தலைவர் பற்றி அறிவிக்கப்படும்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடாது, தனித்து புதிய அரசியல் முன்னணி ஒன்றில் போட்டியிட வேண்டுமென தேசிய சுதந்திர முன்னணி, மஹஜன கட்சி மற்றும் பிவித்துரு ஹெல உறுமய ஆகிய கட்சிகளே தீர்மானித்துள்ளன.

ஏனைய கட்சிகள் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னரே தமது தீர்மானத்தை அறிவிக்க உள்ளதாக உதய கம்மன்பில தனது நேர்காணலில் மேலும் தெரிவித்தார். (இ)

# தவிடு பொடியானது

## ஸ்மித்தின் வெள்ளையடிப்புக் கனவு

## இந்தியா ஆறுதல் வெற்றி



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 5-வதும் இறுதியுமான ஒருநாள் போட்டியில் இந்தியா அணி பரபரப்பான இறுதி ஓவரில் ஆறுதல் வெற்றி பெற்று வெள்ளையடிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்தது.

இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 ஒருநாள போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது.

இதில் முன்னதாக விளையாடிய 4 போட்டிகளிலும் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா தொடரை 4-0 என கைப்பற்றி இருந்தது.

இந்நிலையில் 5-வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி நேற்று சிட்னியில் நடைபெற்றது. இதில் நாணய சுழற்சியில் வென்ற இந்திய அணித்தலைவர் தோனி களத்தடுப்பை தெரிவு செய்தார். அதன்படி அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அவுஸ்திரேலியா 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்கு 330 ஓட்டங்கள் குவித்தது.

331 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய இந்திய அணி 2 பந்துகள் மீதமுள்ள நிலையில் 49.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கு 331 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இதன் மூலம் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரை அவுஸ்திரேலிய 4-1 என கைப்பற்றியது. இந்த வெற்றி இந்தியாவுக்கு ஆறுதல் வெற்றியாக அமைந்துள்ளது.

ஆட்டநாயகனாக மணீஷ் பாண்டேவும், தொடர் ஆட்டநாயகனாக ரோஹித் சர்மாவும் தெரிவு செய்யப்பட்டனர். (க)


## பணிநிலை வெற்றிடங்கள்

ஜெயந்திநகர் கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் கீழ்வரும் பணிநிலை வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் கீழ்க்குறிப்பிட்ட பாடங்களில் பட்டத்தினை பூர்த்தி செய்த ஆண்,பெண் பட்டதாரிகள் இரு பாலாரும் தங்கள் விண்ணப்பங்களை 04.02.2016க்கு முன்பதாக தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். பட்டதாரி அல்லாதோர் விண்ணப்பிக்க வேண்டிய தில்லை.

**01. வரலாறு, புவியியல், குடியியல், விஞ்ஞானம்,ஆங்கிலம் என்பவற்றிற்கு ஆசிரியர்கள் தேவை.**

**குறிப்பு:**

- நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு அமைந்து இல்லத்தில் தங்கியிருந்து கல்வி பயிற்றுவித்தல் வேண்டும்.
- உணவு, தங்குமிடம், பராமரிப்புச்செலவு இல்லத்தினால் இலவசமாக வழங்கப்படும்.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**02. பராமரிப்பாளர்கள் (பெண்கள் மட்டும்)**
**குழந்தைகளைப் பராமரிப்பதற்கான பராமரிப்பாளர்கள் தேவை**

**தகைமைகள்:**

1. க.பொ.த சா/த தரத்திற்கு குறையாத கல்வித்தகைமை
2. விண்ணப்பதாரர் தேகாரோக்கியம் உடையவராகவும் இல்லக்குழந்தைகளை அன்போடும் பாசத்தோடும் அரவணைத்து சைவநெறி ஒழுக்கத்திற்கு அமைவாக வழிப்படுத்தும் ஆற்றல், தியாகசிந்தனை, சமூக அர்ப்பணிப்பு மிக்க உணர்வோடு இருத்தல் வேண்டும்.

**குறிப்பு:**

- நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு அமைந்து இல்லத்தில் தங்கியிருத்தல் வேண்டும்.
- உணவு ,தங்குமிடம் ,பராமரிப்புச்செலவு இல்லத்தினால் இலவசமாக வழங்கப்படும்.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

*கடித உறையின்* இடது பக்க மேல் மூலையில் எந்த பதவிக்கான விண்ணப்பம் என்பதைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**அனுப்பிவைக்க வேண்டிய முகவரி :**

தி.இராசநாயகம், தலைவர் ,மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி.
தொலைபேசி இல : 077 0604950, 0214923118
மின்னஞ்சல் முகவரி :- rasa46@yahoo.com

(c-3540)







# கொடிகாமம் தாவளை இயற்றாலை
# மதுரை மீனாட்சி அம்பாள் ஆலய
## நூதன பஞ்சகுண்ட மகாயாக பிரதிஷ்டா
## மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்
## (இன்று) 24.01.2016



தைத் திங்கள் 10 நாள்
24.01.2016
ஞாயிற்றுக்கிழமை

முகூர்த்த நேரம்
காலை 7.45 மணிமுதல்
8.05 மணிவரை

**கும்பாபிஷேகம் சிறப்புற அருள்ஆசி வழங்குவோர்**

- காஞ்சிகாமகோடி பீடாதிபதி - ஜெகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் (இந்தியா)
- வேதாகம ஞானபாஸ்கரன் சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள் (அதிபர் தர்ம சாஸ்தா குருகுலம் இணுவில்)
- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் (நல்லை குருமகா சந்நிதானம் - நல்லை ஆதீனம்)
- கிரியா திலகம் சிவஸ்ரீ நாகரட்ண குகேந்திரக் குருக்கள் (பிரதம குரு நோர்வே ஒஸ்லோ முருகன் கோவில்)
- கிரியா திலகம் சிவஸ்ரீ நாகரட்ண ஹரீந்திரக் குருக்கள் (கொழும்பு)

**மகா கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதம குரு**

சாதக கலாநிதி, ஆன்மீக பணியமிர்தன், சபரிமலை யாத்திரை குருசாமி, சைவப் புலவர், சித்தாந்த பண்டிதர், வித்வான், அகில இலங்கை சமாதான நீதிவான், பிரசங்கவாரிதி, தேசமான்ய, ஆன்மிக துறையில் அரச சாகித்ய விருது பெற்ற **சிவஸ்ரீ நாகரட்ண கலாதர சிவாச்சாரியார்** B.A (Hons) MA (பிரதம குரு துன்னையூர் ஹரிகர புத்திர தர்ம சாஸ்தா ஆலயம், நாவற்குளி ஐயனார் ஆலயம், பரம்பரைக்குரு இணுவில் கந்தசுவாமி கோயில்

**சர்வ போதகாச்சாரியார்**

- பிரதிஷ்டா கிரியா ரத்தினம் சிவஸ்ரீ கணேசகுகதாசக் குருக்கள் ஆனைக்கோட்டை
- பிரதிஷ்டா கிரியா திலகம் சிவஸ்ரீ ஆறுமுக கணேசக் குருக்கள் (பிரதம குரு துன்னையூர் கோவிற்கடவை பிள்ளையார் கோவில்)

**சர்வ சாதகம்**

சாதக வித்வான் சிவஸ்ரீ சோ.கிரிதரக் குருக்கள் (வவுனியா)

**அருளாசி உரை: மீனாட்சி திருவருள் வழங்குபவர்**

திரு.ப.செல்வநாயகம் B.A (Hons) MA அதிபர் யா/ஞானாசாரியார் கல்லூரி

**அருள்வாக்கு வழங்குபவர் :**

திரு.செல்லத்துரை சுவாமிகள் (கொடிகாமம்)

(சி-3542)

*அனைவரும் வருக அன்னை அருள் பெறுக*

இங்ஙனம்: ஆலய தர்மகர்த்தா, பாலசுப்பிரமணியம் குடும்பம்

# அமைச்சர் குணவர்த்தன ஜனாதிபதியிடம் விடுத்த இறுதி வேண்டுகோள்?

காலம் சென்ற அமைச்சர் எம்.கே. டி.எஸ். குணவர்தன, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் விடுத்த இறுதி வேண்டுகோள் குறித்து கொழும்பு ஊடகமொன்றில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

குணவர்தன இறுதியாக பங்கேற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த வேண்டுகோளை முன்வைத்திருந்தார். திருகோணமலை மாவட்டத்தின் சிரேஷ்ட அரசியல்வாதிகளில் ஒருவராக விளங்கிய குணவர்தன, கந்தளாய் வீதிகளை புனரமைத்துத் தருமாறு ஜனாதிபதியிடம் இறுதியாக கோரியுள்ளார்.

"கந்தளாயில் அநேக வீதிகள் பழுதடைந்துள்ளன. அவற்றை துரிதகதியில் புனரமைக்க வேண்டும்" என குணவர்தன கோரியிருந்தார்.

"இதற்குத்தான் நாம் உங்களுக்கு அமைச்சரவை அந்தஸ்துடைய அமைச்சுப் பதவி வழங்கியுள்ளோம். இப்போது அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதனால் உங்களினால் பிரச்சினையின்றி அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள முடியும்.

உங்களுக்கு அந்த பக்கத்தில் பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல இருக்கின்றார், அவருடன் பேசி வீதிகளை புனரமைத்துக் கொள்ளவும்" என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதிலளித்துள்ளார்.

இந்தக் கோரிக்கைக்கு உடனடியாக அமைச்சர் லக்ஸ்மன் கிரியெலவும் சம்மதம் வெளியிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், உடல் நலக் குறைவு காரணமாக எம்.கே. டி.எஸ. குணவர்தன நீண்ட நேரம் அமைச்சரவைக் கூட்டத்தில் இருக்கவில்லை.

"சேர், எனக்கு இன்னமும் பூரண குணமடையவில்லை. இன்னமும் உடலுக்கு கஷ்டமாகவே உள்ளது. இதனால் நான் சற்றே வேளைக்கே வீடு செல்கின்றேன்" என ஜனாதிபதியிடம் கூறி அமைச்சரவைக் கூட்டம் நிறைவடையும் முன்னர் குணவர்தன வெளியேறிச் சென்றார் எனவும், அதுவே அவர் பங்கேற்ற இறுதி அமைச்சரவைக் கூட்டம் எனவும் கொழும்பு ஊடகம் தெரிவித்துள்ளது. (இ)


# அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோவில்

## தைப்பூச தின உலகப் பெரு மஞ்சத் திருவிழா சிறப்புப் பொங்கல் 24.01.2016



காலம் :- 24.01.2016 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 பூஜை இணுவில் மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்தில் இருந்து காலை 6 மணிக்கு 1008 பாற்குடங்கள் பவனியாக வருவதுடன் அதன்பின் காவடிகள் பவனியாக வரும். 7.00 மணிக்கு 1008 சங்குகளாலும் 1008 பாற்குடப் பவனியில் வரும் பாற்குட அபிஷேகம் இடம் பெறும்.

7.30 – 8.30 வரை நுழைவாயில் கோபுர கும்பாபிஷேகம் இடம்பெறும்

மதியம் அன்னதானம் நடைபெறும்

முற்பகல் 10.00 மணிக்கு 1008 பானை பொங்கல் நிகழ்வு ஆரம்பமாகும்

மாலை 4 மணிக்கு முன் நிறைவு செய்தல் வேண்டும்.

மாலை 2 மணி தொடக்கம் 4 மணிவரை யாழ்.நுண்கலைப்பீட மாணவர்களது இசைக்கச்சேரியும் இடம்பெறும்



தொலைவிலிருந்து வந்து பொங்கல் செய்யவிரும்பும் அடியவர்கள் வசதி கருதி பொங்கலுக்குரிய அனைத்துப் பொருட்களையும் ஆலயத்தில் சிறு தொகைப் பணத்தினை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

6 மணிக்கு வசந்த மண்டபப் பூசை, சண்முகார்ச்சனை இடம்பெற்று பல நூற்றாண்டுப் பழைமை வாய்ந்த உலகப் பெருமஞ்சத்தில் ஆறுமுகப் பெருமான் வள்ளி, தெய்வாணை சமேதராய் வீதி வலம் வரும் அருட்காட்சி இடம்பெறும். அத்துடன் விசேட மேளக் கச்சேரியும் இடம்பெறும்.

அதனைத்தொடர்ந்து இலங்கையின் புகழ் பூத்த பல பாடகர்கள் சங்கமிக்கும் இன்னிசைக் கானங்கள் இடம்பெறும்.

**ஓம் ரீவியில் இரவு 6 மணி – 9 மணிவரை நேரடி ஒளிபரப்பு நடைபெறும்**

விளம்பர அனுசரணை

முருகப் பெருமான் அடியார்கள் உலகப் பெருமஞ்சு வடம் தொட்டிழுக்க வாரீர்!

**சாளினி கிறைண்டிங் மில் இணுவில் மேற்கு, இணுவில்.**

**TELE SOON PHONE SHOP**
Phones & Phones Accessories

No.32,K.K.S. Road, Chunnakam, 021 224 1552 | K.K.S.Road, Inuvil. | No. 259, Power House Road, Jaffna. 021 221 7995 Hospital Road, Jaffna. 021 221 7883

Index Greentel Lephone Distributors

Green Telephone க்கான சகல உதிரிப்பாகங்களும் எமது யாழ்ப்பாணக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து பெற்றுக் கொள்ளலாம்.


# இராசி பலன்

24.01.2016

(தை 10, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.28 மணிக்கு,
பூரணை முற்பகல் 8.05 மணிவரை
பூசம் முன்னிரவு 9.41 மணிவரை
சுபநேரம் 9.36-11.06 மணிவரை
இராகுகாலம் 5.06-6.36 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் பூராடம், உத்தராடம் | | சந் |
| சூரி | | | ராகு |
| புத சுக் | சனி | செவ் | குரு |

**மீனம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மேடம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**இடபம்:** குடும்பத்தில் கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள், போசன நன்மையுண்டு, முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**மிதுனம்:** இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், உறவினர் வழியில் நல்ல செய்திகள் வந்து சேரலாம், பேச்சில் கனிவு பிறக்கும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு.

**கும்பம்:** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும்.

**கடகம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்:** கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், சொந்தபந்தங்களின் வருகையுண்டு, பேச்சில் கனிவு பிறக்கும், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**சிம்மம்:** திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள்.

**தனுசு:** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், திட்டமிட்ட பணிகளில் சிறு தடை, தாமதங்களைச் சந்திக்க நேரிடலாம், கௌரவக் குறைவான நாள்.

**விருச்சிகம்:** வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்:** நல்ல காரியங்கள் நடைபெறும் நாள், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பொது வாழ்வில் புகழ்கூடும்.

**கன்னி:** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

# கீரிமலை ஆலயச்சூழல் புனித பிரதேசமாக பிரகடனம்

(யாழ்ப்பாணம்)

**பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தை சூழவுள்ள 500 மீற்றருக்கு உட்பட்ட பகுதி புனித பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.**

தெல்லிப்பழை பிரதேச சபை, தெல்லிப்பழை பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, ஆலய நிர்வாக சபையினருடனான கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை நகுலேஸ்வர கிராம உத்தியோகத்தர் பணிமனையில் நடைபெற்றது. இக் கலந்துரையாடலின் போதே புனித பிரதேசமாக பிரகடனப்படுத்துவது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டது. இத்திட்டம் இன்று தைப்பூச தினத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்துக்கு பல இடங்களிலும் இருந்து பக்தர்கள் வந்து போகின்றார்கள். அந்த வகையில் ஆலயத்தின் புனிதத்துவத்தை பேணிக்காப்பது மிக முக்கியமாகும். எனவே நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இணைந்து ஆலய சூழலை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்தியுள்ளனர்.

ஆலயத்தை சுற்றி 500 மீற்றருக்குட்பட்ட பகுதிகளில் பொலித்தீன் பாவனை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதுடன், பாதணிகள் அகற்றி விட்டு செல்ல வேண்டும் என்றும், நடைபாதை வியாபாரங்களுக்கு தனிப்பட்ட பகுதி அமைத்து கொடுக்கப்படுவதுடன், அநாகரிக உடைகள் அணிந்து வருவது தடை செய்யப்பட்டுள்ளது.

மேலும் தொற்று நோய்கள் அப்பகுதியில் வராமல் தடுப்பதற்காக சுகாதார முறைப்படியான பல செயற் றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக குறித்த கலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. (செ-9)

## தேங்காயில் பிள்ளையார்



தென்மராட்சிப் பிரதேச வரணி சிட்டிவேரம் அம்மன் கோவிலில் தேங்காயில் பிள்ளையார் உருவம் தோன்றியுள்ளது. இதனைப் படத்தில் காணலாம். (இ-5)

## 2ஆம் பருவகால விசேட மீள்பரீட்சை

2015ஆம் ஆண்டு 2ஆம் பருவகால விசேட மீள் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களில் HNDA கற்கை நெறியில் 2007,2008, 2009,2010,2011ம் ஆண்டுகளை அனுமதி ஆண்டாக கொண்டவர்களுக்கும் ஏனைய கற்கை நெறிகளில் 2011ஆம் ஆண்டை அனுமதி ஆண்டாக கொண்டவர்களுக்கும் விசேட மீள் பரீட்சை நடைபெறவுள்ளதால் தங்களது பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை எதிர்வரும் 29ஆம் திகதியன்று பெற்றுக்கொள்ள முடியும் என யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவன உதவிப் பதிவாளர் யோ.ரிசாந்தன் அறிவித்துள்ளார். (இ-5)

## அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி வர்த்தக உரிமையாளர் கூட்டுறவுசங்க அங்குரார்பணநிகழ்வு இன்று ஞயிற்றுகிழமை மாலை 4 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோவிலடியிலுள்ள தென்மராட்சி கலை மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். 1 (இ-9)

## உறுப்பினர்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய வலிகாமம் மேற்கு சங்கானைப் பிரதேச சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் அண்மையில் இடம் பெற்றபோது புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் தலைவராக ந.சிவரஞ்சன் தெரிவு செய்யப்பட்டதுடன் உபதலைவராக மா.கணேஸ், செயலாளராக க.சந்திரசேகரன், உபசெயலாளராக நா.அருணகிரிநாதன், பொருளாளராக எஸ்.ஜெயபாலன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் நிர்வாகசபை உறுப்பினர்களாக க.செல்வராசா, தி.தெய்வேந்திரராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ-5)

## குப்பைகள் தேங்கிக்காணப்படும் நெல்லியடி விக்னேஸ்வரா வீதி



(கரணவாய்)

நெல்லியடி விக்னேஸ்வரா வீதி ஊடாக கலட்டிச்சந்தி வரை செல்லும் வீதியில் குப்பைகள் தேங்கி காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோழி இறைச்சிக் கழிவுகள் மற்றம் திண்மக்கழிவுப் பொருட்கள் என்பன அவ்வீதியில் நிரம்பிக் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அவ்வீதியில் துர்நாற்றம் வீசுவதாக தெரிவிக்கப்படுகிறது. இக் கழிவுப் பொருட்களை சில பொதுமக்களே வீதிகளில் கொட்டி வருகின்றனர்.

இக்கழிவுப்பொருட்கள் அங்கு தேங்கிக் காணப்படுவதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-5-60)

## பேருந்து- மோ.சைக்கிள் விபத்து சிறுமி உள்ளிட்ட மூவர் படுகாயம்

தரித்து நின்ற பேருந்துடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளாகியதில் சிறுமி உட்பட மூன்று பெண்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இவ்விபத்துச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 8.45 மணியளவில் பூநகரிப் பகுதியில் இடம்பெற்றது.

கச்சாய் வீதி சாவகச்சேரியைச் சேர்ந்த வசந்தகுமார் திருவதனா (வயது-38),திருநாவுக்கரசு சித்திரவதி(வயது-58),வசந்தகுமார்-திலக்சனா (வயது-8) ஆகிய மூன்று பெண்களே விபத்தில் படுகாயமடைந்தவர்களாவர்.

சம்பவ தினமன்று புதுக்குடியிருப்பில் நடைபெற்ற புதுமனைப் புகுவிழா நிகழ்விற்கு சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளையே மேற்படி விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

விபத்தில் படுகாயமடைந்த சிறுமி உட்பட்ட மூன்று பெண்களும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ-5-30)

## பதவியுயர்வுக்கு அழுத்தம் கொடுக்க நடை பயணம்

(யாழ்ப்பாணம்)

2009ஆம் ஆண்டுக்குப்பின்னர் அதிபர் சேவைக்கு நியமனம் பெற்றவர்கள் பதவி உயர்வு பெறுவதற்காக அழுத்தம் கொடுக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நடைபயணம் ஒன்று எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை கொழும்பு பத்தரமுல்லவிலிருந்து கொட்டாவ வீதிப்பாலம்,முச்சந்தி,புத்ததாச விளையாட்டரங்குக்கு அருகாமையில் முற்பகல் 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

இதற்கு 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் அதிபர் சேவைக்கு நியமனம் பெற்றவர்களை கலந்து கொள்ளுமாறும் இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30மணிக்கு யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் அமைந்துள்ள நாவலர் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில்யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட அதிபர்களை இதில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(இ-5)

## நுழைபுலம் ஆய்வு விருதுக்கு நூல்கள் கோரப்பட்டுள்ளன

உலகப் புகழ்பெற்ற தமிழ்ப் பேராசிரியர் திறனாய்வாளர் அமரர் அ. ச. ஞானசம்பந்தன் நினைவாக, சிறந்த ஈழத்து ஆய்வாளர் ஒருவருக்கு கொழும்புக் கம்பன் கழகத்தால் வருடந்தோறும் வழங்கபடும் நுழைபுலம் விருதுத் தெரிவுக்கு ஆய்வு நூல்கள் கோரப்பட்டுள்ளன. மேற்படி விருது, பட்டயம், பொன னாடை, சான்றிதழ் மற்றும் ரூபா 25 ஆயிரம் பெறுமதியான பொற் கிழி என்பவற்றை உள்ளடக்கியதாய் அமைகிறது.

இத்தேர்வுக்கு பல்கலைக்கழக மட்டத்திலான ஆய்வாளர்களும், மரபுசார் ஆய்வாளர்களும் பிறரும் தமது ஆய்வுகளை அனுப்பி வைக்கலாம். தமிழ் ஆர்வலர்களும் தாம் தகுதியானவை எனக்கருதும் ஆய்வுகளை மேற்படி விருதுக்காய் ஆய்வாளர்களின் அனுமதியோடு அனுப்பி வைக்கலாம். தமிழ் அறிவுப் புலத்தினுள் எத்து றையினூடு செய்யப்பட்ட ஆய்வுக ளும் மேற்படி விருதுக்காக அங்கீ கரிக்கப்படும்.

விருதுக்கான தகைமைகளாக 2015 ஆம் ஆண்டில் ஆக்கப் பட்டதாக இருத்தல் வேண்டும்.

மேற்படி ஆய்வு, தழுவலாகவோ, மொழி பெயர்ப்பாகவோ அன்றி, ஆய்வாளரின் சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.

ஆய்வு நூல்களை அனுப்புவோர் நூலுருவாகவோ, தட்டச்சுப் படியாகவோ அனுப்பி வைக்கலாம். கையெழுத்துப் பிரதிகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டா. ஆய்வாளரின் வர்ணப் புகைப் படப்பிரதிகள் இரண்டினையும் உடன் அனுப்பிவைத்தல் வேண்டும் என்பதும் கட்டாயமானதாகும்.

ஆய்வு நூல்களை அனுப்பி வைப்போர், விருதுக்காக சமர்ப் பிக்கப்படும் ஆய்வு நூல்களின் மூன்று படிகளை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் கம்பன் கோட்டம், இல. 12, இராமகிருஷ்ண தோட்டம், கொழும்பு 6. எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

சிறந்த ஆய்வுக்கான அ.ச.ஞா. ஞாபகார்த்த "நுழைபுல விருது" எதிர்வரும் மார்ச் மாதம் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ள "கம்பன் விழா" வின் தொடக்க நாள் அன்று வழங்கப்படும். (இ-5-29)

## மெய்வல்லுநர் போட்டி நாளை

யாழ். புங்குடுதீவு ஸ்ரீ சித்தி விநாயகர் மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டியானது நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் இ.திலீபன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வித்தியாலய ஓய்வு நிலை அதிபர் ந.கலைநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

## சிறப்புப் பட்டிமன்றம்

வல்வெட்டி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பூங்காவனத் திருவிழா நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ள நிலையில் அன்றைய தினம் இரவு 10 மணிக்கு பண்டிதர் பொன் சுகந்தனின் தலைமையில் சிறப்புப்ப ட்டி மன்றம் நடைபெறவுள்ளது. இன்றைய சொந்தங்கள் பெரிதும் விரும்புவது சொந்தங்களையா? சொத்துக்களையா? என்ற தலைப்பிலே மேற்படி பட்டி மன்றம் நடைபெறவுள்ளது. (இ-5)

# அவசர நிலை பிரகடனம்

# பனிப்புயலால் முடங்கியது வோஷிங்டன்



## 4 ஆயிரம் விமான சேவைகள் இரத்து

(வோஷிங்டன்)—

**அமெரிக்காவில் 90 ஆண்டுகளுக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள கடும் பனிப்பொழிவு மற்றும் பனிப்புயலால் தலைநகரம் வோஷிங்டன் உட்பட முக்கிய நகரங்கள் முடங்கியுள்ளன. ஒரு இலட்சத்து 50 ஆயிரம் வீடுகளுக்கான மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ள அதேவேளை 4 ஆயிரம் விமானப் போக்குவரத்தும் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி அவசரகால நிலையும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.**

அமெரிக்காவில் தற்போது குளிர் காலம் தொடங்கியுள்ள நிலையில் அங்கு கடும் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. தலைநகர் வோஷிங்டனில் கடும் பனிப்புயல் வீசுகிறது.

இதனால் வீதிகளிலும் வீட்டு கூரைகள் மற்றும் மாடிகளிலும் பனி கொட்டுகிறது. வீதிகளில் சுமார் 3 அடி உயரத்துக்கு பனி கொட்டிக் கிடக்கிறது. இதனால் வோஷிங்டனில் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கடும் பனிப்புயல் வீசுவதால் வோஷிங்டன் உட்பட கிழக்கு கடற்கரை நகரங்களுக்கான விமான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு 4 ஆயிரம் விமான போக்குவரத்து இரத்து செய்யப்பட்டுள்ளது.

வோஷிங்டனில் மெட்ரோ புகையிரதம் மற்றும் பேருந்து போக்குவரத்தும் நிறுத்தப்பட்டது. அப்பகுதியில் உள்ள அனைத்து பாடசாலைகள் மற்றும் கல்லூரிகள் மூடப்பட்டன. குடியிருப்பு வாசிகள் பிற்பகல் ஒரு மணிக்கு மேல் வீதிகளில் கார் ஓட்டிச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. எனவே அங்கு உணவு மற்றும் குடி நீர் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை பொது மக்கள் சேமித்து வைத்துள்ளனர்.

அதனால் பால், முட்டை, ரொட்டிகள் உள்ளிட்ட உணவுப் பொருட்கள் வாங்க சந்தைகளில் மக்கள் கூட்டம் அலை மோதுகிறது.

அதே போன்று அமெரிக்காவில் டென்னிசே, மசாசூசெட்ஸ் மாகாணங்களும் கடும் பனிப்புயலால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. வோஷிங்டன், மசாசூசெட்ஸ், டென்னிசே ஆகிய 3 மாகாணங்களில் சுமார் 6 கோடி பேர் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. (இ)

# அகதிகளிடமிருந்து பணம் பெற்று அகதிகளுக்காக செலவிடும் அரசு

## வெளியான உண்மை தகவல்கள்

ஜேர்மனி நாட்டில் புகலிடம் கோரி வரும் அகதிகளிடமிருந்து குறிப்பிட்ட தொகையை பறிமுதல் செய்து அதனை திரும்ப அகதிகளுக்கே அரசு செலவிட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜேர்மனியின் சுயாட்சி மாகாணமான பவேரியாவில் அகதிகளை குடியமர்த்துவதில் கடுமையான சட்ட விதிகள் பின்பற்றப்படுகின்றன.

பவேரியா மாகாண உள்துறை அமைச்சரான Joachim Herrmann கூறுகையில், புகலிடம் கோரி வரும் அகதிகளிடம் 750 யூரோவிற்கு அதிகமாக பணமும், சொத்தும் இருந்தால் அதனை அரசு பறிமுதல் செய்யும்.

இந்த தொகையை கொணடு அகதிகளுக்கு புகலிடம் வழங்குவதற்கு முன்னதாக அவர்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய பயன்படுத்தப்படும் என கூறியுள்ளார்.

ஜேர்மனியின் Baden-Wurttemberg என்ற மற்றொரு மாகாணத்தில் இதை விட கடுமையான சட்டங்கள் நடைமுறையிலுள்ளன.

இந்த மாகாணத்தில் புகலிடம் கோரி வரும் அகதிகளிடம் 350 யூரோவிற்கு அதிகமாக பணம் மற்றும் சொத்து இருந்தால் அதனை மாகாண அதிகாரிகள் பறிமுதல் செய்வார்கள்.

இதேபோல், ஜேர்மனியின் தெற்கு மாகாணங்களில் புகலிடம் கோரி வரும் அகதிகளிடமிருந்து சராசரியாக ஆயிரம் யூரோக்களுக்கு மேல் அதிகாரிகள் பறிமுதல் செய்துவருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ)

# நடுக்கடலில் படகுகள் கவிழ்ந்து விபத்து; 20 குழந்தைகள் உட்பட 42 பேர் உயிரிழப்பு

ஐரோப்பிய நாடுகளில் புகலிடத்திற்காக சட்டவிரோதமாக பயணம் செய்த புலம்பெயர்ந்தவர்களின் படகுகள் விபத்துக்குள்ளானதில் 20 குழந்தைகள் உட்பட 42 பேர் கடலில் மூழ்கி பலியாகியுள்ளதாக அதிர்ச்சி த்கவல்கள் வெளியாகியுள்ளன.

கிரேக்க நாடு வழியாக பிற ஐரோப்பா நாடுகளில் தஞ்சம் எதிர்பார்த்து சுமார் 100 பேர் அடங்கிய இரண்டு படகுகள் நேற்று முன்தினம் நள்ளிரவு ஏஜியன் கடலில் பயணம் செய்துள்ளன.

நள்ளிரவில் புறப்பட்ட இந்த படகுகளில் ஒன்று கிரேக்க தீவுகளில் ஒன்றான Kalolimnos என்ற பகுதியில் விபத்துக்குள்ளாகி கடலில் மூழ்கியுள்ளது.

இந்த விபத்தில் 20 குழந்தைகள் உட்பட 34 பேர் பலியாகினர். இதேபோல், Farmakonisi என்ற தீவுப்பகுதியில் மற்றொரு படகு விபத்துக்குள்ளானதில் 8 பேர் பலியாகினர்.

தகவல் கிடைத்து வந்த கிரேக்க கடலோர காவல்படையினர், உயிருக்கு போராடிக்கொண்டிருந்த 26 பேரை மீட்டனர்.

இதே பகுதியில் கடலில் மூழ்கி உயிரிழந்திருந்த 16 பெண்கள், 20 குழந்தைகள் மற்றும் 7 ஆண்கள் என 34 சடலங்களை மீட்டுள்ளனர்.

எனினும், இவ்விரு படகுகளிலும் எத்தனை நபர்கள் பயணம் மேற்கொண்டனர் என்ற உறுதியான தகவல்கள் கிடைக்காத நிலையில், படகுகளில் 100 பேருக்கு மேல் பயணம் செய்திருக்கலாம என மீட்கப்பட்டவர்களிடமிருந்து தெரியவந்துள்ளது.

எஞ்சிய நபர்களை கடலோர காவற்படையினர் தீவிரமாக தேடி வருகின்றனர். (இ)

# எகிப்தில் குண்டு வெடித்து 10 பேர் சாவு

உலகப் புகழ் வாய்ந்த சுற்றுலாத் தளமான எகிப்து நாட்டின் கீசா பிரமிடுகள் அருகே நேற்று முன்தினம் சக்திவாய்ந்த குண்டு வெடித்து 7 பொலிஸார் உட்பட 10 பேர் இறந்தனர்.

மேலும் 20 பேர் படுகாயம் அடைந்தனர். எகிப்தின் கீசா மண்டல பிரமிடுகள் பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாக வியாழனன்று கிடைத்த தகவலைத் தொடர்ந்து, மத்திய பாதுகாப்புப் படையினரும் உள்ளூர் பொலிஸாரும் இணைந்து அங்குள்ள கட்டடங்களில் தீவிர தேடுதல்வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது ஒரு கட்டடத்தில்மேற்கொண்ட சோதனையில், சக்தி வாய்ந்த குண்டு இருந்ததைத் கண்ட பொலிஸார், அதனை செயலிழக்கச் செய்யும் நடவடிக்கையில் மும்முரமாக இறங்கினர்.

அதில், எதிர்பாராமல், குண்டு வெடித்ததில் மத்திய பாதுகாப்புப் படையைச் சேர்ந்த லெப்டினனட் ஒருவர் உட்பட 7 பொலிஸார் பலியாகினர். குண்டு வெடித்த கட்டடத்தில் இருந்த ஒருவர் உடல் சிதறி பலியானார். உடல் கருகிய நிலையில் மேலும் இரண்டு சடலங்களை பொலிஸார் கைப்பற்றினர். பதுங்குதல், சதித்திட்டம் தீட்டுதல் என எகிப்தில் பெருகிவரும் இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளின் நடவடிக்கைகளை ஒழித்துக்கட்ட மத்திய பாதுகாப்பு படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். (இ)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா:35<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்:BSc, MSc/ பொறியியலாளர் அவுஸ்திரேலியா<br>தொ.இ: B/5466 | பிறப்பு: 1978RC<br>உயரம்: 5’1"<br>தகைமை/தொழில்:O/L/கணக்கு பதிவாளர்<br>தொ.இ: G/5480 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 35<br>உயரம்: 5’8"<br>தகைமை/தொழில்:BSc/ பொறியியலாளர்<br>தொ.இ: B/5471 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 29<br>உயரம்: 5’<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/5475 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 13<br>உயரம்: 5’10"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ சொந்த தொழில்<br>தொ.இ: B/5472 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம் விசாகம்<br>கி.பா: 13<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/5476 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 36 செவ் 12 இல்<br>தகைமை/தொழில்:HNDE/ வங்கியாளர்<br>தொ.இ: B/5473 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 64 செவ் 7 இல்<br>உயரம்: 5’<br>தகைமை/தொழில்:CIMA/வங்கியாளர்<br>தொ.இ: G/5478 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)

## வெற்றிலைச் சின்னம் கிடைக்காவிட்டால்

# சின்னத்தை தடைசெய்ய நீதிமன்றம் செல்வோம்

## வாசுதேவ எம்.பி. தெரிவிப்பு



புதிய கட்சியை ஆரம்பிக்கும் எண்ணம் இல்லை. நாம் இணைந்த எதிர்க்கட்சியாகவே செயற்படுவோம் எனத் தெரிவித்த வாசுதேவ நாணயக்கார எம்.பி, உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றிலைச் சின்னம் கிடைக்காவிட்டால் அச்சின்னத்தை தடை செய்ய நீதிமன்றம் செல்வோம் என்றும் தெரிவித்தார்.

இது தொடர்பில் வாசுதேவ நாணயக்கார எம்.பி மேலும் தெரிவிக்கையில்,


இணைந்த எதிர்க்கட்சியாகவே எமது அரசியல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். எம்மோடு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் இணைத்துக் கொண்டே இப் பயணம் தொடரும். ஆனால் புதிய கட்சி ஆரம்பிக்கும் எண்ணம் எமக்கில்லை. விமல் வீரவன்ச புதிய கட்சி ஆரம்பிக்கின்றாரா? இல்லையா? தொடர்பில் எமக்கு எதுவும் தெரியாது.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் இணைந்த எதிர்க் கட்சியாக வெற்றிலைச் சின்னத்திலேயே போட்டியிடுவோம். அச் சின்னம் எமக்கு கிடைக்கா விட்டால் அச்சின்னத்தை தடைசெய்வதற்காக நீதிமன்றம் செல்வோம்.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளரையும் சந்தித்து தெளிவுபடுத்துவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## மஹா சங்கத்தினரை மீறி செயற்பட மாட்டேன்

## ஜனாதிபதி தெரிவிப்பு



மஹா சங்கத்தினரின் எதிர்ப்புக்கு உள்ளாகும் எந்தவொரு செயற்திட்டத்தினையும் தாம் முன்னெடுக்கப்போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிதித்துள்ளார்.

காலியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

புதிய அரசியல் யாப்பு தொடர்பில் கடந்த அரசாங்கங்கள் மேற்கொண்டு வந்த நடவடிக்கைகளையும், பொது மக்களையும் கருத்தில் கொண்டு விரைவில் அறிக்கை ஒன்றை வெளியடுமாறு, நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிற்கு தாம் பணித்துள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

எனவே இந்த விடயம் தொடர்பான முழுமையான விபரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை மகா சங்கத்தினர் மற்றும் பொது மக்களுக்குக்காக விரைவில் வெளியிடுமாறும் ஜனாதிபதி தெரிவித்தார். (இ)

## 24 மாணவர்கள் வெளியேற்றம்

நிக்கவரெட்டிய மினுவாங்ககொட பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றின் 24 மாணவர்கள் பாடசாலையிலிருந்து நேற்று முன்தினம் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

மினுவாங்கொட மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த முதலாம் தர மாணவர்களே இவ்வாறு வெளியேற்றப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் நிலை பாடசாலையின் கிழ் இந்த பாடசாலையை அகற்றுவதற்கு கடந்த வருடம் கல்வி அமைச்சு தீர்மானித்திருந்த போதிலும் பெற்றோரின் தலையீட்டினால் இந்த விடயம் தடுக்கப்பட்டதாகவும் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

குறித்த பாடசாலையில் முதலாம் தரத்திற்கான ஒரு வகுப்பிற்கு மாத்திரமே கல்வி அமைச்சு அனுமதி யளித்திருந்தது.

இந்த நிலையில் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இரண்டு வகுப்பறைகளுக்கு அனுமதி கிடைத்ததாக பாடசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய இந்த வருடம் முதலாம் தரத்திற்காக 64 மாணவர்கள் இந்தப் பாடசாலைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் பகல் அவற்றிற்கான பரிந்துரைகள் தமக்கு வழங்கப்படவில்லை என கூறி பாடசாலை நிர்வாகத்தினால் 24 மாணவர்கள் பாடசாலையிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளதாக பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர். (இ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 180 | 150 | 150 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 50 | 70 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 300 | 400 | 400 |
| தக்காளி | 100 | 100 | 60 | 80 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 120 | 120 | 100 | 100 | 160 | 120 |
| கரட் | 180 | 160 | 150 | 200-350 | 200 | 250 |
| பூசணி | 70 | 60 | 40 | 60 | 80 | 60 |
| புடோல் | 80 | 60 | 50 | 100 | 120 | 120 |
| வாழைக்காய் | 80 | 90 | 50 | 60 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100 | 100 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 50 | 80 | 80 | 90 |
| பாகற்காய் | 100 | 100 | 100 | 150 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 100 | 120 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 60 | 80 | 100 | 80 |
| பயற்றங்காய் | 180 | 120-180 | 150 | 150 | 200 | 200 |
| லீக்ஸ் | 140 | 80 | 90 | 100 | 200 | 100 |
| பீற்றூட் | 200 | – | – | – | 200 | 150 |
| கறிமிளகாய் | 300 | – | 200 | 250 | 400 | 300 |
| முருங்கைக்காய் | 800 | – | – | – | – | 800 |
| போஞ்சி | 200 | 150 | 140 | 160 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 160 | – | 120 | – | 200 | – |
| கீரை - 1 பிடி | 40 | 15 | 35 | 40 | 40 | 20 |
| தேசிக்காய் | 150 | 80 | 50 | 120 | 60 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 30-37 | 50 | 30-40 | 50 |
| இராசவள்ளி | 140 | 100 | 100 | 160 | 160 | 150 |
| வெங்காயப்பூ | 200 | 100 | 200 | 200 | 200 | 160 |
| முள்ளங்கி | 40 | 40 | 40 | 60 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 30 | 30 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30 | 20 |
| ஈரப்பலா | 50 | 50 | 50 | – | 80 | – |

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

01.2016
24

- 1679 - இங்கிலாந்தின் இரண்டாம் சார்ல்ஸ் நாடாளுமன்றத்தைக் கலைத்தான்.
- 1857 - தெற்காசியாவின் முதலாவது முழுமையான பல் கலைக்கழகம் கல்கத்தா பல்கலைக் கழகம் திறக்கப்பட்டது.
- 1887 - அபிசீனியப் படைகள் டொகாலி என்ற இடத்தில் இத்தாலியர்களைத் தோற்கடித்தனர்.
- 1897 - சுவாமி விவேகானந்தர் சிக்காகோவிலிருந்து நாடு திரும்பும் வழியில் யாழ்ப்பாணம் வருகை தந்தார். யாழ் இந்துக் கல்லூரியில் பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது.
- 1908 - பேடன் பவல் சாரணீய இயக்கத்தை ஆரம்பித்தார்.
- 1918 - கிரெகோரியின் நாட்காட்டி ரஷ்யாவில் பெப்ரவரி 14 முதல் அறிமுகப்படுத்தப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டது.
- 1924 - ரஷ்யாவின் பெட்ரோகிராட் நகரம் லெனின்கிராட் எனப் பெயர் மாற்றப்பட்டது
- 1927 - ஆல்பிரட் ஹிட்ச்கொக் தனது த பிளெஷர் கார்டன் என்ற தனது முதலாவது திரைப் படத்தை வெளியிட்டார்.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: பிராங்க்ளின் ரூஸ்வெல்ட், வின்ஸ்டன் சேர்ச்சில் ஆகியோர் தமது கசபிளாங்கா உச்சி மாநாட்டை முடித் துக் கொண்டனர்.
- 1972 - இரண்டாம் உலகப் போரில் காணாமற் போன ஜப்பானிய படைவீரனான சொயிச்சி யாக்கோய் என்பவன் குவாம் காடு ஒன்றில் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டான்.
- 1978 - கொஸ்மொஸ் 954 என்ற சோவியத் செய்மதி பூமியின் வளிமண்டலத்துள் எரிந்து அதன் பகுதிகள் கனடாவின் வடமேற்குப் பிரதேசத்தில் வீழ்ந்தன.
- 1984 - முதலாவது ஆப்பிள் மாக்கின்டொஷ் கணினி விற்பனைக்கு வந்தது.
- 1986 - வொயேஜர் 2 விண்கலம் யுரேனசின் 81, 500 கிமீ தூரத்துக்குள் வந்தது.
- 1996 - மாஸ்கோவுக்கு உளவு பார்த்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட நிலையில் போலந்துப் பிரதமர் ஜோசப அலெக்ஸ்கி தனது பதவியைத் துறந்தார்.
- 2007 - சூடானிலிருந்து 103 பயணிகளுடன் சென்ற விமானம் நடுவானில் கடத்தப்பட்டது.
- 2009 - இலங்கை ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட அரசுத்தலைவர் தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் கொழும்பில் காணாமற் போனார்.

**பிறப்புகள்**

- 1924 - சி. பி. முத்தம்மா, இந்தியப் பெண் சாதனையாளர் (இ. 2009)

**இறப்புகள்**

- 1965 - வின்ஸ்டன் சர்ச்சில், பிரித்தானியப் பிரதமர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1874)
- 1966 - ஹோமி பாபா, இந்திய அணு ஆராய்ச்சி நிபுணர் (பி. 1909)

### சி.பி.முத்தம்மா



கர்நாடகத்தில் குடகு மாவட்டத்தில் விராஜ் பேட்டையில் 1924 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி பொனெரி பெல்லியப்பா முத்தம்மா பிறந்தார். இவர் இந்தியக் குடியுரிமைப் பணித்தேர்வில் வெற்றியடைந்த முதல் பெண். இந்தியாவின் முதல் பெண் வெளியுறவு த்துறை அதிகாரியாக 1949 இல் பணியில் சேர்ந்தவர். இந்திய ஆட்சிப் பணிகளில் பெண் அதிகாரிகளுக்கு எதிராக உள்ள விதிகளை மாற்றப்பாடுபட்டவர். 32 ஆண்டுகள் பணியின் பின்னர் இந்தியக் குடியுரிமைப் பணியிலிருந்து 1982 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார். ஆண்கள் மட்டுமே ஆட்சி செய்து கொண்டிருந்த வெளியுறவுத் துறையில் பணிபுரிய விரும்பி அரசு பணித்தேர் வாணையம் நடத்திய தேர்வில் மிகச் சிறப்பாகத் தேர்ச்சி பெற்று இந்திய வெளியுறவுத்துறை பணியில் சேர்ந்தார் முத்தம்மா.


வெளியுறவுத்துறையின் பணி விதிகள், "அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 14 மற்றும் 15 அரசுப் பணியில் இருக்கும் பெண் களுக்கெதிரான பாலியல் பாகுபாடு நிறைந்த - பெண்ணுரிமை மற்றும் சமத்துவம் ஆகிய பிரிவுகளுக்கு எதிராக இருக்கிறதென் றும், பெண் என்பதாலேயே பணியிலமர்வதற்கான உரிமை பாதிக்கப்படுவதென்பது அரசியல் சாசனத்திற்கெதிரானதென்றும் இந்தக் காரணங்களாலேயே தனது பதவி உயர்வு தடைபட்டிருக் கிறதென்றும் எனவே இந்த பால்பாகுபாடுகளைக் களைய நீதி மன்றம் உதவ வேண்டும் எனவும் கோரி சி.பி.முத்தம்மா உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

வழக்கை விசாரித்த நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர், பாலியல் பாகுபாடு நிறைந்த விதிகள் நீக்கப்பட்டதாக வெளியுறவுத் துறையின் சார்பில் அளிக்கப்பட்ட பிரமாணப் பத்திரத்தை ஏற்றுக் கொண்டார். முத்தம்மாவின் தகுதி பதவி உயர்வுக்கு ஏற்றதாக இருக்கிறதென சொல்லி பதவி உயர்வு அளித்த வெளியுறவுத் துறை அவரை ஹேகில் இந்தியத் தூதராக நியமித்தது. வரலா ற்றுச் சிறப்பு மிகுந்த இத்தீர்ப்பு ஆணாதிக்கக் கருத்துகள் கொண்ட விதிகள் திருத்தியெழுத வாய்ப்பாக அமைந்தது. இவர் 85 ஆவது வயதில் 2009 ஆம் ஆண்டு ஒக்டோபர் 14 ஆம் திகதி காலமானார்.

# போர் இரகசியங்களை அறிவதற்கு மனிதவுரிமை ஆணையாளர் முயற்சி

## சிங்கள ஊடகம் குற்றச்சாட்டு

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் சயிட் அல் ஹுசெய்ன் போர் இரகசியங்களை தெரிந்து கொள்ள முயற்சித்துள்ளார் என திவயின சிங்களப் பத்திரிகை குற்றம் சுமத்தியுள்ளது.**



இராணுவத்தினரின் இரகசியங்கள் மற்றும் ஆழ ஊடுருவித் தாக்கும் படைப் பிரிவு, விசேட படையணிகள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்திடம் தகவல்களைப் பெற்றுக்கொள்ள ஹுசெய்ன் முயற்சித்துள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சிற்கு அனுப்பி வைத்திருந்த கடிதம் ஒன்றின் ஊடாக ஹுசெய்ன் இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளார்.

வன்னிப் போர் தொடர்பிலான அனைத்து புலனாய்வுத் தகவல்கள் மதிப்பீடுகளையும் பெற்றுக்கொள்ள ஹுசெய்ன் மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்துள்ளது.

எனினும், புலனாய்வுப் பிரிவின் சில இரகசிய ஆவணங்களை ஹுசெய்ன் பெற்றுக் கொண்டுள்ளார் என திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கு முன்னரும், சயிட் அல் ஹுசெய்ன், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் தொடர்பிலான படையினரின் இரகசியங்களை அறிந்து கொள்ள முயற்சித்தார் என திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# ஒழுக்காற்று நடவடிக்கை ஒத்திவைப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகள் மற்றும் தலைமைத்துவத்தை விமர்சனம் செய்யும் கட்சியின் உறுப்பினர்களுக்கும் தொகுதி அமைப்பாளர்களுக்கும் எதிராக ஒழுக்காற்று விசாரணை மேற்கொண்டு அவர்களை தண்டிக்கும் நடவடிக்கைகளை காலம் தாழ்த்த கட்சி தீர்மானித்துள்ளது.

தம்மை கடுமையாக விமர்சனம் செய்வது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் என்பதனால் அவர்களை தண்டிக்காது அவர்களுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வது அவசியமானது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுதந்திரக்கட்சியின் முக்கியஸ்தர்களிடம் கூறியுள்ளார்.

ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து தண்டிப்பதனை விடவும் விமர்சனம் செய்வோரை கட்சியின் கொள்கைகளுக்கு இணங்கச் செய்து ஒன்றிணைப்பது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறும் வரையில் மகிந்த தரப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி கட்சியின் கொள்கைகளுடன் இணங்கச் செய்ய முயற்சி எடுக்கப்பட வேண்டும். அவ்வாறு இணக்கப்பாடு எட்டப்படாவிட்டால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்க முடியும் என ஜனாதிபதி கூறியுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது. (இ)

# ரணிலின் எதேச்சதிகாரப் போக்கினால் சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் அதிருப்தி

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் எதேச்சதிகார போக்கினால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் அதிருப்தி அடைந்துள்ளதாக முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

மக்கள் ஆணைக்கு புறம்பான வகையில் நாட்டை எதேச்சதிகாரமாக ஆட்சி செய்ய ரணில் முயற்சிக்கின்றார்.

இதனால் அரசாங்கத்திற்குள் பாரிய குழப்ப நிலைமைகள் ஏற்பட்டுள்ளன.

இதனால் நல்லாட்சி அரசாங்கத்தின் ஆளும் கட்சியின் அமைச்சர்கள் ஆளும் கட்சி கூட்டங்களை புறக்கணிக்கத் தீர்மானித்துள்ளனர்.

30 ஆண்டு கால போரை நிறைவுக்குக் கொண்டு வந்து நாட்டை அபிவிருத்தி செய்த தலைவரான மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைவார் என நாம் கருதவில்லை. புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது, மகிந்த தோல்வியடைந்தாலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆட்சி அமைக்க மக்கள் ஆணை வழங்கவில்லை.

தற்போது கூட்டாட்சி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டாட்சி அமைக்கப்பட்டு ஓராண்டு கடக்க முன்னதாகவே பாரியளவில் பிளவுகள் ஏற்பட்டுள்ளன.

நாட்டின் ஜனாதிபதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்ற போதிலும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான பிரதமரே நாட்டை ஆட்சி செய்கின்றார்.

ஆளும் கட்சியின் தலைவராக ஜனாதிபதி காணப்பட்டாலும், அரசியலமைப்பு திருத்தங்களை பிரதமரே கொண்டு வருகின்றார்.



மக்கள் வழங்கிய ஆணைக்கு புறம்பான வகையில் நாட்டை ஆட்சி செய்ய பிரதமர் ரணில் முயற்சிக்கின்றார்.

அரசாங்கத்திற்குள் நிலவி வரும் பாரியளவான பிளவு எப்போது வெடிக்கும் என்பதனை சொல்ல முடியாது என மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டியில் அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ)

# வாரம் ஒரு தகவல்

## ஒரு காதல் கதை

*"அப்பா, உங்களிடம் ஒரு கேள்வி"*

*"என்ன கேட்கப் போகிறாய்?"*

*"வாழ்க்கையில் 3 முக்கியமான விடயங்கள் என்ன தெரியுமா?"*

*"தெரியவில்லையே"*

*"எனக்குத் தெரியுமே. ஒரு புத்தகத்தில் படித்தேன்"*

*"என்ன படித்தாய்?"*

*"வாழ்க்கையில் மிக முக்கியமான ஒரு விடயம் யாரையாவது காதலிக்க வேண்டும்"*

*"இரண்டாவது முக்கியமான விடயம் யாராவது நம்மைக் காதலிக்க வேண்டும்"*

*"மூன்றாவது முக்கியமான விடயம் இவையிரண்டும் ஒரே நேரத்தில் நடக்க வேண்டும்"*

*"இப்பதான் தெரியுது... நீ எப்படியான விடயங்களை அதிகமாகப் படிக்கிறாய் என்று"*

*"நான் என்னப்பா... இன்னமும் சின்னக் குழந்தையா? வயதாகி விட்டதல்லவா!"*

*"புரியுதடா... ஏற்பாடு பண்ணுறேன்"*

*"நேற்றுக்கூட அம்மா என்னை எங்கே என்று தேடியபோது அவன் எங்கே போயிருப்பான். கழுதை கெட்டால் குட்டிச்சுவர் என்று சொன்னீங்களாமே?"*

*"ஆமாம். சொன்னேன்"*

*"இனிமேல் அப்படியெல்லாம் சொல்லாதீங்கப்பா"*

*"என்னடா சொல்கிறாய்?"*

*"அதற்கில்லையப்பா. நான் இப்பொழுது வாலிபன். இனிமேல் என்னை கழுதை என்று சொல்வது நல்லா இருக்காது என்று நினைக்கிறேன்"*

*"ஏன்?"*

*எதிர்வீட்டுப் பெண்ணை அவளுடைய அப்பா குட்டிச்சுவர் என்று சொல்லித் திட்டிக் கொண்டிருக்கிறார். அதனால... சொன்னேன்*

# 9முக்கிய அரசியல்வாதிகளுக்கு எதிராக இலஞ்ச ஊழல் மோசடி வழக்கு தாக்கல்

ஒன்பது முக்கிய அரசியல்வாதிகளுக்கு எதிராக இலஞ்ச ஊழல் மோசடி வழக்கு தாக்கல் செய்யப்பட உள்ளதாக இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் மே மாதத்திற்கு முன்னதாக ஒன்பது அரசியல்வாதிகளுக்கு எதிராகவும் இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளது.

குறித்த அரசியல்வாதிகளுக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கு தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு, விசாரணை நடத்தும் அதிகாரிகளுக்கு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தில்ருக்ஸி டயஸ் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

விசாரணைகள் பூர்த்தியாகியுள்ள ஒன்பது அரசியல்வாதிகளுக்கு எதிராகவே விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

முன்னாள் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவிற்கு எதிராக ஆணைக்குழு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்த அரசியல்வாதிகள் ஒன்பது பேருக்கு எதிராகவே வழக்குத் தொடரப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# கொழும்பு மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பரவும் தன்மை அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் கொழும்பு மாவட்டத்தில் 1,042 பேர் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளமை பதிவாகியுள்ளதாக அமைச்சின் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் சமூக வைத்திய நிபுணர் பிரஷிலா சமரவீர தெரிவித்துள்ளார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் மொத்தம் 3,118 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தவிர யாழ்ப்பாணம், கண்டி, குருநாகல், கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களிலும் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேல் மாகாணத்தில் அவதானம் செலுத்தியுள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவுகளில் எதிர்வரும 28 ஆம் திகதி முதல் விசேட டெங்கு ஒழிப்பு வாரம் அமுல்படுத்தப்படவுள்ளதாக சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் சமூக வைத்திய நிபுணர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி விசேட செயலணியுடன் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

சூழலில் காணப்படும் நுளம்பு பெருகக்கூடிய இடங்களை கண்டறிந்து அவற்றை அழிப்பதன் மூலம் டெங்கு காய்ச்சலில் இருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும் என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் சமூக வைத்திய நிபுணர் பிரஷிலா சமரவீர தெரிவித்தார்.


அத்துடன் இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால், உடனடியாக அருகிலுள்ள வைத்தியரை நாடி உரிய சிகிச்சைகளை பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார். (இ)

# ராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

## 08.01.2016-27.07.2017 வரை

*ஏழில் ராகு வருகிறது! வாழ்வில் நல்ல மாற்றம் வரும்! பெருந்தன்மை கொண்ட மனமும், பிறரைக் கவர்ந்திழுக்கும் பேச்சாற்றலும் பெற்ற கும்ப இராசி நேயர்களே!*

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்




பணபலத்தால் மற்றவர்கள் சாதிக்க முடியாத காரியத்தை நீங்கள் பக்கபலமாக இருக்கும் நண்பர்களால் சாதித்துக் காட்டுவீர்கள். அரசியல் முதல் ஆன்மிகம் வரை நீங்கள் அத்துப்படியாக வைத்திருந்தாலும், உங்களுக்கு உள்ளூர பயம் இருந்து கொண்டே இருக்கும். உங்கள் மனதில் உறுதி மட்டும் இருந்தால் மகத்தான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள இயலும்.

பதுமையைப் போல வாழ உங்களுக்குப் பிடிக்காது. பம்பரமாய்ச் சுழன்று பணிபுரிவீர்கள். உங்களுக்கு முட்டுக்கட்டையாக முன்கோபம் இருக்கும். திட்டம் தீட்டுவதிலும் சமர்த்தர்கள் நீங்கள். அடுத்தவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆதாயத்தைப் பெறமுடியும் என்பதை நடுத்தர வயதில் தான் நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

'சிக்கனத்தின் சிகரம்' என்றுகூட உங்களை வர்ணிக்கலாம். வீட்டில் பணத்தை வைத்துவிட்டுப் பழகியவர்களிடம் தக்க விதத்தில் கவர்ச்சியாகப் பேசிக் காரியத்தைச் சாதித்துக் கொள்வீர்கள்.

எண்ணற்ற கருத்துக்களை இதயத்தில் பதித்து வைத்திருந்தாலும், எதுவும் தெரியாததைப் போல காட்சி தரும் உங்களுக்கு இந்த ராகு-கேது பெயர்ச்சியால் ஏற்படும் மாற்றங்களைப் பற்றிப் பார்ப்போம்.

**சப்தம ராகுவால் சஞ்சலங்கள் கூடும்! ஜென்ம கேதுவால் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்!**

இதுவரை கன்னி ராசியில் சஞ்சரித்து வந்த ராகுவும், மீன ராசியில் சஞ்சரித்து வந்த கேதுவும் தனது வான்வெளிப் பயணத்தில் 8.1.2016 அன்று பின்னோக்கி வந்து உங்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி வைக்கப் போகிறார்கள்.

இருப்பினும் ஜென்மத்தில் கேதுவும், ஏழில் ராகுவும் வருவது அவ்வளவு நல்லதல்ல. சர்ப்ப தோஷ ஆதிக்கம் மிகுந்திருப்பதால் உங்கள் சுய ஜாதக அடிப்படையில் ராகு-கேதுக்களின் பலமறிந்து யோகம் தரும் நாளில் உங்களுக்கு அனுகூலம் தரும் ஸ்தலங்களில் சர்ப்ப சாந்திகளை மேற்கொள்வது அவசியமாகும். அப்பொழுது தான் சந்தோஷத்தை நிலையாக வைத்திருக்க இயலும்.





ஜென்ம கேதுவால் சிறப்பான பலன்கள் ஏற்படுமா? என்று நீங்கள் நினைக்க வேண்டாம். ஆன்மிக நாட்டத்தை அதிகரித்து அதன் மூலமாக உங்கள் வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். அருளாளர்களின் தொடர்பு அதிகரிக்கும். அடுத்து நடக்கப் போவது என்ன? என்று யோசிக்கத் தூண்டும். கவுரவம், அந்தஸ்து உயரும்.

குடும்பத்தில் உள்ளவர்கள் மட்டும் உங்கள் சொற்களை மீறி நடக்கிறார்களே என்று சொல்வீர்கள். ஆனால் மற்றவர்கள உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது. கொடுக்கல்- வாங்கல்களில் இதுவரை சந்தித்த ஏமாற்றங்களை இனி ஈடுகட்டப் போகிறீர்கள். இருந்தாலும், ஜென்ம கேது ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்களை கொடுத்துக் கொண்டே இருக்கும். மருத்துவச் செலவுகள் கூடும்.

**சப்தம ராகுவின் சஞ்சாரம்!**

சப்தம ராகு நீண்ட தூரப் பயணங்களை ஒரு சிலருக்கு வரவழைத்துக் கொடுக்கும். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்க வேண்டுமானால் கூட்டாளிகளின் ஜாதகத்தையும் ஆராய்ந்து பார்த்து முடிவடுத்து இணைத்துக் கொள்ளுங்கள். ஞாபக மறதி அதிகரிக்கும். பொல்லாதவர்கள் உங்களைவிட்டு விலக எடுத்த முயற்சி வெற்றி தரும்.

குடும்பத்தில் அமைதிக் குறைவு ஏற்படாதிருக்க விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும், பொறுமையும் உங்களுக்கு அவசியம் தேவை. குடும்பத் தகவல்களை மூன்றாம் நபர்களிடம் பகிர்ந்து கொள்வதன் மூலமும் ஒரு சில பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடலாம். என்பதால் அதற்கு ஏற்றவாறு நடந்து கொள்வது நல்லது. நிலம், வீடு வாங்கு வதில் ஏற்பட்ட சிக்கல்கள் அகலும் என்றாலும் கூட பத்திரப்பதிவில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

குடும்பத்தினர்களின் எண்ணங்களை நிறைவேற்றுவதை முன்னிட்டு அதிக விரயங்கள் ஏற்படலாம். இதுபோன்ற நேரங்களில் பழைய வீட்டை பழுது பார்ப்பதில் ஆர்வம் காட்டலாம். வாகனங்களைப் புதுப்பிக்கலாம். கட்டிடம் கட்டும் பணி விட்டு விட்டு நடந்தாலும் கூட ஓரளவு முடிவதற்கான வாய்ப்பு உண்டு.

அரசியல் மற்றும் பொறுப்பில் இருப்பவர்கள், மேலிடத்தில் உங்கள் பெயர் பாதிக்காத வண்ணம் பார்த்துக் கொள்வது நல்லது. உ த்தியோகத்தில் உள்ளவர்கள் பகை பாராட்டாமல் உடன் பணிபுரிபவர்களோடு அனுசரித்துச்செல்ல வேண்டும். மேலதிகாரிகளின் அன்புக்கு பாத்திரமாவது அரிது.

சலுகைகள் தாமதப்படலாம். தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு பழைய பங்குதாரர்கள் விலகிக் கொள்ள முன்வருவதாகச் சொல்வர். அப்படி இருக்கும் பட்சத்தில் அவர்களுக்குரிய பங்கைக் கொடுத்து விட்டுப் புதிய பங்குதாரர்களை சேர்த்துக் கொண்டு தொழிலை வளப்படுத்திக் கொள்வது நல்லது. புதியவர்களை நம்பி எந்தப் பொறுப்பையும் ஒப்படைக்க வேண்டாம். ஏற்றம் வரும் என்று நீங்கள் நினைத்த செயல்களில் ஏமாற்றம் வந்து சேரலாம்.

பிறருக்கு பொறுப்பு சொல்லித் தொகை வாங்கிக் கொடுப்பதாக இருந்தால் நம்பிக்கைக்கு உரியவர் களாக இருக்கிறார்களா? என்பதை அறிந்து செயல்படுவதே நல்லது. இதுபோன்ற காலங்களில் நீங்கள் யாகங்களை வைப்பதன் மூலம் யோகங்களை வரவழைத்துக் கொள்ளலாம்.

சிறப்பு வழிபாடுகளைச் செய்வதன் மூலம் செயல்பாடுகளில் வெற்றி கிடைக்கும். செல்வ நிலையில் முன்னேற்றம் ஏற்படும். உள்ளூர் யோகம் முதல் வெளி மாநிலம் செல்லும் யோகம் வரை வரும் வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்ள இயலும்.

**பாதசார அடிப்படையில் ராகு தரும் பலன்கள்!**

ராகு பகவான் சூரிய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (8.1.2016 முதல் 10.3.2016 வரை) கல்யாண வாய்ப்புகள் கைகூடுவதற்கான அறிகுறிகள் தோன்றும். சில வரன்கள் விட்டுப் போனாலும் கூட அதே வரன் திரும்பி வந்து முடிவடையலாம். போட்டிகளுக்கு மத்தியில் வியாபாரம் ஓரளவு நடைபெறும். வாடிக்கையாளர் களுடன் பேசும் பொழுது கோபத்தைக் குறைத்துக் கொள்வதும், பகைத்துக் கொள்ளாமல் இருப்பதும் நல்லது. உஷ்ண நோய்களுக்கு ஆளாக நேரிடும். அரசு வழிச் சலுகைகள் எதிர் பார்த்தபடி கிடைக்கலாம்.

ராகு பகவான் சுக்ர சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (11.3.2016 முதல் 16.11.2016 வரை): இடம், பூமி சேர்க்கை ஏற்பட வழி பிறக்கும். இழந்ததை ஈடுசெய்ய புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். தாய்வழி ஆதரவு கூடும். பூர்வீக சொத்துக்களால் கணிசமான தொகை கைகளில் புரளும். பாகப் பிரிவினைகள் பல வருடங்களாக முடிவடையாமல் இழுத்தடிக்கிறார்களே என்று நினைத்தவர்கள் இப்போது மகிழ்ச்சியடையும் விதத்தில் முன்னோர் சொத்துக்களில் முறையான பங்கீடுகள் கிடைக்கலாம்.

ராகு சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது (17.11.2016 முதல் 26.7.2017 வரை) மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும். மறதி கூடும். இனம்புரியாத கவலை இதயத்தை வாட்டும். ஏதேனும் ஒன்றில் ஈடுபட்டு அதனால் விரயம் வந்துவிட்டதே என்று ஆதங்கப் படுவீர்கள். நண்பர்கள் மட்டுமல்ல உறவினர்களும் வெறுப்புணர்ச்சியோடு பழகலாம். உங்களுக்கு இது போன்ற காலங்களில் விட்டுக்கொடுக்கும் தன்மை வேண்டும். நீண்ட நாளாக உடலிலிருந்த பிரச்சினைகள் இப்பொழுது விஸ்வரூபம் எடுக்கலாம். வைத்தியச் செலவு வாடிக்கையாகி விட்டதே என்று நினைப்பீர்கள்.

**பாதசார அடிப்படையில் கேது தரும் பலன்கள்!**

கேது பகவான் குரு சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (8.1.2016 முதல் 13.7.2016 வரை) கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். கூட்டுமுயற்சிகளில் வெற்றி உண்டு. அரைகுறையாக நின்ற வேலைகள் துரிதமாக முடிவடையும். மதிப்பும், மரியாதையும் உயரும். குழந்தை பாக்கியம் வேண்டிக் காத்திருப்பவர்களுக்கு அது கைகூடும். புதிய தொழில் தொடங்க முன்வருவீர்கள். அதற்கு போதுமான அளவு பொருளாதார உதவி கிடைக்க உறவினர்களின் ஒத்துழைப்பும் கிட்டும். பக்கத்து வீட்டாரின் பகை மாறும். அரசியலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அதிர்ஷ்டவசமாக பெரிய பொறுப்புகள் வந்துசேரும்.

கேது பகவான் ராகுசாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (14.7.2016 முதல் 22.3. 2017 வரை) தைரியமும், தன்னம்பிக்கையும் குறையலாம். தனவரவு வந்தாலும் மறுநிமிடமே செலவாகி விடும். நூதனப் பொருட்களை வாங்க முன்வருவீர்கள். ஆரோக்கியத் தொல்லை அகல மாற்று மருத்துவம் கைகொடுக்கும். குழந்தைகளின் எதிர்கால நலன் கருதியும், வேலை வாய்ப்பை முன்னிட்டும் செலவிடும் சூழ்நிலை உண்டு. வாங்கல்-கொடுக்கல்களில் கவனம் தேவை.

கேது பகவான் செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (23.3.2017 முதல் 26.7.2017 வரை) சகோதர சச்சரவு அகலும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து செயறபடுவர். சொத்து விற்பனையால் தனலாபம் கிடைத்து வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். வரும் வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்வது நல்லது.

வாழ்க்கை வசந்தமாக வழிபாடு!


ஜென்ம கேதுவால் சிறப்புகள் வந்து சேரவும், ஏழாமிடத்து ராகுவால் இனிய பலன்கள் கிடைக்கவும், சனிக்கிழமை தோறும் ஆஞ்ச நேயரை வழிபட்டு வருவது நல்லது. தேய்பிறை அஷ்டமியன்று விரதமிருந்து வைரவரை வழிபட்டு வருவதன் மூலம் வளமும், நலமும் வந்து சேரும்.

(நாளை மீனம்)

## ஏழில் ராகு வருகிறது! வாழ்வில் நல்ல மாற்றம் வரும்!

# அன்னையென அனுதினமும் அடியார் போற்றும் நயினை நாகபூஷணி

## இன்று தைப்பூச திருவிழா



"பெற்றதாலன்னை பெறுமுயிரனைத்தும்
பேணலால் அன்னை பெற்றிடுவோர்
உற்ற தாலன்னை விரும்பிய அனைத்தும்
உதவலால் அன்னை எக்கலையும்
சொற்றதாலன்னை உலகொடுவானும்
தொழுதலால் அன்னை என்றென்றும்
பற்றதாங் கருணை பொழிதலாலன்னை
பராபரை நாகபூஷணியாள்"

ஆண்டுதோறும்தைமாதம் பிறந்து விட்டால்நயினையம்பதி நாகபூஷணி அம்மனுடைய தைப்பூசநினைப்புசைவ நன்மக்களுக்கு வந்துவிடும். தைமாதத்தில் தைப்பொங்கல், தை அமாவாசை, தைப்பூசம் உற்சவங்களைச்சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். தைப்பூச உற்சவம் நயினை ஸ்ரீநாகபூஷணிஅம்மன்ஆலயத்தில் வருடாவருடம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. தைபிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கை அடியார்கள்மத்தியில்உண்டு. தைமாதத்தில் பௌர்ணமியும்பூச நட்சத்திரமும் சேர்ந்து வரும் நாள் தைப்பூசமாகும். இப்பூசத்திருநாளில் முருகப் பெருமான் சிவசக்தியுடன் இணைந்து அருள்ஒளியில் பிரவேசிப்பர் என்பது புராண வரலாறாகும். இந்நாளில் நடராஜப்பெருமானையும்சிவகாமியம்மையாரையும் முருகப் பெருமானையும் வழிபடுதல் சிறந்ததாகும்.

"வாருங்கள் எல்லோரும் ,
வாழ்த்துவோம் அம்பிகையை
சேருங்கள் ஒன்றாய்
நயினையில்
தைப்பூச விழாக்காண"

திருவருள்மிக்க அருட்சக்தியாகிய நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன் அடியார்களுக்கு வேண்டிய அனுக்கிரகங்களை வழங்கிக் கொண்டிருக்கிறாள் என்பது உலகறிந்த உண்மை. பயபக்தியோடும், உளவிருப்போடும், அன்போடும் ''மணிபல்லவம்'' எனப்படும் நயினையம்பதிக்கு யாத்திரை செய்யும் மக்கள் தொகை நாளுக்கு நாள் பல்கிப் பெருகிக் கொண்டே வருகின்றதென்பது சர்வமத சந்நிதி நாகபூஷணியின் பேரருட் பிரவாகமே எனலாம். கண்ணுக்கு முன்னே காட்டியும் கனவிலே காண்பித்தும் நிகழ்த்துகின்ற அற்புதங்களைக் கண்டு அருளமுதைப் பெற்றுக் கொள்வதற்காக நயினையம்பதியில் அடியார்கள் பெருமளவில் கூடுகின்றனர்.

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லியாக விரும்பித் தொழும் அடியார்கள் விழிநீர் மல்கி விதந்து போற்றித் துதிக்கத்தக்கவளாக நாடிவரும் அடியார்களின் வினைகளையெல்லாம் தீர்ப்பவளாக வருந்தி வரும் அடியவர்க்கு வேண்டத்தக்கது அறிந்து வேண்டுவதும் கொடுப்பவளாக ஆசைக் கடலில் அகப்பட்டு அலைவோருக்கு வாசக்கமலங்களை தலைமேல் வைத்து அருள் நேசக் கரங்களை நீட்டி நிம்மதி தருபவளாக அன்னை நாகபூஷணி நயினையில் வீற்றிருந்து அருள்மழை பொழிகின்றாள். அம்பிகையின் கடைக் கண்பார்வை எல்லாவற்றையும் தரும் என அபிராமிப் பட்டர் அம்பிகையின் திருவுருவத்தின் மீது மனதைப் பறிகொடுத்து தம்மை மறந்து பாடிய பாடல் ஒன்றினை இங்கு தருவதால் அடியார்களுக்குப் பயனுள்ளதாக அமையும்.

"தனம் தரும், கல்வி தரும்
ஒருநாளும் தளர்வு அறியா
மனம்தரும், தெய்வ வடிவும்தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம்தரும்அன்பர்என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள்
அபிராமி கடைக்கண்களே"

காலாதிகாலமாக அன்னையாம் நாகபூஷணி நிகழ்த்தி வந்த, நிகழ்த்தி வருகின்ற திருவிளையாடல்கள் ஒன்றா! இரண்டா! எடுத்துச்சொல்ல, எண்ணுக்கணுக்கற்றவை. நயினை அன்னை நாகேஸ்வரி எடுத்துரைக்க முடியாதளவிற்குப் பல்வேறு அற்புதங்களைப் புரிந்த வண்ணம் நயினையில் அருளாட்சி செய்கின்



றாள். நெடுங்காலம் பிள்ளைப் பாக்கியம் இல்லாதிருந்த தம்பதியர் பலர் அன்னையின் அருளால் நன்மக்கட்பேறு வாய்க்கப் பெறுவது, தீராத பிணிகளைப் போக்குவது போன்ற அற்புதங்கள் அளவிட முடியாததாகும். ''அமுதசுரபி'' பற்றிய தொன்மையும் "அமுதசுரபி" பற்றிய சரித்திர வரலாறுகளும் பொருந்திய மைவதால் இன்று அன்னதானம் நிகழும் பீடமாகவும் நயினாதீவு இலங்கி வருகிறது. அள்ள அள்ளக் குறையாது அமுது சுரக்கும் தெய்வீகத்தன்மை வாய்ந்த "அமுதசுரபி'' பற்றி மணிமேகலையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆழத்தின் அமுதசுரபியை ''கோமுகி'' ப் பொய்கையில் விட்டதற்கமைவாக இன்று ''அமுதசுரபி'' அன்னதான சபையினர் அமுதசுரபி இல்லம் அமைத்து பல்லாயிரக் கணக்கான அடியார்களுக்கு அமுதளிக்கும் பெருந் தொண்டைச் செய்து வருகின்றார்கள்.

தைப்பூசத் திருநாள் சைவ நன்மக்களுக்கு ஒரு மங்களகரமான நாளாகப் போற்றப்பட்டு வருகின்றது. காது குத்துதல், சோறு ஊட்டுதல் ,ஏடு துவக்குதல் போன்ற சுபகாரியங்கள் அடியார்களால் ஆலயங்களில் நிறைவேற்றப்படும். குறிப்பாக இந் நன்னாளில் புதுமனைப் புகுதல், பொன் உருக்குதல், புதுக்கணக்கு ஆரம்பித்தல், புதிர் எடுத்தல் போன்ற சுபகாரியங்களும் இடம்பெறும்.

அம்பிகையின் தைப்பூச விழா இன்று (24.01.2016) ஞாயிற்றுக்கிழமை வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது. அம்பாளுக்கு மஹாசங்காபிஷேகம், இலட்சார்ச்சனை, விசேட பூசைகள், தீபாராதனைகள் இடம்பெறவுள்ளன. இவற்றினைக் கண்டுகளித்து அன்னையின் நல்லருளைப் பெற்றுக் கொள்வதற்காக பெருந்திரளான அடியார்கள் நயினையம்பதியில் கூடுவார்கள்.

உயர்திருவிழா மட்டுமல்லாது தைப்பூசம், ஆடிப்பூசம் போன்ற உற்சவகாலங்களிலும் அடியார்கள் பெருமளவில் கூடுவது சிறப்பம்சமாகும். நாள்தோறும் அம்பிகையை வழிபடுவதற்காக அடியார்கள் பெருமளவில் நயினையம்பதியில் கூடுவதைக் காணலாம். உலக அறங்களெல்லாவற்றுக்கும் சிறந்தது பிறர் பசி போக்குவதுதான். ''பசி போக்குவோரே சிறந்தவர், "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" தினந்தோறும் அம்பிகையைத் தரிசிக்க வருகின்ற பெருந்திரளான அடியார்களின் நன்மை கருதி ஆலய அறங்காவலர் சபையினர் அன்னதானப் பணியை மிகவும் சிறப்பாகச் செய்து வருகின்றார்கள். இவர்களது இச் சேவையை அடியார்கள் பெரிதும் பாராட்டுகின்றனர். இச்சேவை தொடர்ந்தும் சிறப்புடன் நடைபெற அம்பிகை அருள்புரிவாளாக,

''எனக்கென்றோர் தனி
வரம் யான் கேட்கவில்லை
என்னினத்தார் வாழ்வொ
ன்றே கருதவில்லை,
உனக்கெல்லாவுயிர்க
ளுமே சொந்தமென்ற
உண்மையை நானொரு
போதும் மறந்ததில்லை
சினங்கொண்டு தீங்கி
ழை க்குந் தீயர்தாமும்
சீலமுற வேண்டுமெ
ன்றே வேண்டுகின்றேன்
தனக்கொருவரொப்பிலாத்
தாயே இந்தத்
தாரணியில் சாந்தியை
தருவாய் நீயே''

அம்பிகையைச் சரண் புகுந்து அதிக வரம் பெற அனுதினமும் அவள் பாதார விந்தங்களைப் பணிந்து வணங்குவோமாக.

நயினை
நா.க.குமாரசூரியர்
J.P
(வாழ்நாள் சாதனையாளர்)

# தைப்பூசக் காவடி

காவடி

முருகன் என்றாலே காவடிதான் சிந்தையில் இருக்கும். தைப்பூசக்காவடிக்கு ஒரு கதை உண்டு. இடும்பன் அகத்தியரின் சீடரில் ஒருவன் குரு கூறுவது எது வென்றாலும் தட்டாது செய்வார். இதனால் குமரன் தன் சேனைத் தளபதியாக்கஎண்ணினார். அதனால் அகத்தியரின் மனதில் புகுந்து கட்டளையிட்டார். இடும்பா நீ கைலிய சிகரங்களான சிவ சக்தி கிரிகளை இங்கு எடுத்துவா. அதனை நான் பூஜிக்க வேண்டும் என்றார். அகத்தியர் கூறியது போல் சிகரங்களை எடுத்து தராசு போல் ஒரு தடியில்கட்டிஅதைசுமந்துவந்தார். பழனிக்கு வந்ததும் களைப்புக் கூட ஓய்வெடுத்து விட்டு மீண்டும் தூக்க தூக்க முடியவில்லை. பார்த்தால் ஒரு சிறுவன் தன் பெரு விரலால் அழுத்தினான். அவனைப் பயமுறுத்த அவன் முருகனாக மாறி இடும்பன் முருகா உன் பாதம் பட்டால் இனி இந்தப் பொருள் காவடி என்று அழைக்கப்பட்டும் என்று கூறியதால் தான் நாம் காவடி எடுக்கிறோம்.

காவடியின் சிறப்பு

ஒவ்வொரு காவடியும் ஒவ்வொரு தனித்துவமான வரங்களைக் கொடுக்க வல்லது. அவற்றில் சில,

தங்கக்காவடி–நீடித்த புகழ், வெள்ளிக்காவடி–நல்லாரோக்கியம் , பால் காவடி–செல்வச் செழிப்பு, சந்தனக்காவடி–வியாதிகள் நீங்கும், பன்னீர் காவடி–மனநலக்குறைபாடுகள் நீங்கும், சூரைக்காவடி–சந்தன பாக்கியம், அன்னக்காவடி–வறுமை நீங்கும், இளநீர்க்காவடி– சரும நோய்கள் விலகும், அலங்காரக்காவடி–திருமணம் கைகூடும், அக்னி காவடி –திருஷ்டி, செய்வினை நீங்கும், கர்ப்பூரக்காவடி–வயிறு சம்பந்தமான உபாதைகள் நீங்கும், சர்ப்பக்காவடி–சந்தானபாக்கியம், மங்கள் காவடி–எதிலும் வெற்றி, சேவல் காவடி–மறைமுக எதிரிகள் அழிவர், மலர்(புஸ்ப) காவடி– நற்பலன், மயில்காவடி– இல்லத்தில் இன்பம் நிறைய, வேல்காவடி–எதிரிகளைவெல்ல, பழக்காவடி–செய்யும் தொழிலில் உயர்வு, மச்சக்காவடி– வழக்கிலிருந்து விடுபட எனவே இத்தகு சிறப்பு மிக்க பூசத்திருநாளில் முருகனை வணங்கி அவனருள் பெற்று அவனியிலே நல்லவராக வாழ்வோமாக.

த.அபிநாத்
யாழ்.இந்துக்கல்லூரி.



# இணுவைக் கந்தனும் தைப்பூசமும்

யாழ்ப்பாண குடாநாட்டின் மத்தியில் காணப்படும் பழம் பெரும் கிரமமான இணுவிற் கிராமம்அருட்பொலிவும்கலைப் பொலிவும் அன்றும் இன்றும் குன்றாத நற்கிராமம்.

இலங்கையில் அமைந்துள்ள ஆறுபடை வீடுகளில் ஒன்றாகக் கருதப்படும் இத்திருத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம்என்பவற்றை முறையாகக் கொண்டு காணப்பட்டு அடியார்கள் பெருங்குறை அகற்றும் பொற்பதியாகத் திகழ்கின்றது. மூர்த்தியாக சண்முகப் பெருமானும் தலவிருட்சமாக நொச்சிமரமும் (பஞ்ச வில்வங்களில் ஒன்று) தீர்த்தமாக காஞ்சி பைரவ தீர்த்தத்தையும் ஆண்டவனருளால் அமையப் பெற்று காணப்படுகின்றது இத்திருத்தலம்.

சிறப்புமிக்க இவ்வாலயம் அருள் தன்மையையும் அருளாளர்களின் ஆத்மீக வெளிப்பாட்டினை வெளிப்படுத்தும் அருட்சூழலையும் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது. இரு குளங்களால் நீர் பாய்ச்சப்பட்டு பெரு நிலப்பரப்பில் வளங்கொளிக்க வாழ்ந்த இவ்வூர் மக்கள் குளத்தைங்கரை நாகரிகத்தை தன்னகத்தே கொண்டு வாழ்ந்தனர். தங்களது குல தெய்வமான தமிழ்த் தெய்வம் முருகப்பெருமானுக்கு உகந்த நன்னாளான தைப்பூசத்திருநாளினை பெருநாளாகக் கொண்டு அன்றைய நாளிலேயே பாரம்பரியம் மிகு ஏர் மங்கலத்தினையும் செய்து அதற்கேதுவாக தமது வயல் நிலப்பரப்பில் அறுவடை செய்த நெல்லரிசி மூலம் வேற்பெருமானுக்கு பொங்கல் செய்தும் வழிபாடியற்றினர்.

தொன்று தொட்டே தைப்பூசத் தினத்தினை முருகப் பெருமானுக்குரிய விசேட தினமாக எண்ணி இவ்வூர் மக்கள் இவ்வாலயத்தில் கவடி பொங்கலிட்டு மடை பரவியும், காவடி எடுத்து அருட்கூத்தாடியும் பாடியும் பக்திப்பரவசத்தில் திழைத்தனர். தமது முக்கிய தேவைகளை ஆண்டவனிடம் கூறி அவனருள் பெறும் நன்னாளாகவும் கண்டனர். மகப்பேறில்லாதவர்கள் மக்கட்செல்வம் வேண்டியும் இவ்வுலகத்தேவை கருதிப் பொருள் வேண்டியும், தெய்வ உலகத்தன்மை வேண்டியோர் ஆத்மீக அருள் வேண்டியும் தம்குறை தீரப்பெற்றனர். இன்றும் அருட்பேறு பெறுகின்றனர். தேவர் சிறைமீட்ட எம்பெருமான் தனது முதல் யுத்தமாக கிரவுஞ்ச கிரியை தனது சக்திவேலால் பொடிப் பொடியாக்கிய தைப்பூசத் தினமான இந் நாளில் நாம் எம் குறைதீர் இணுவைத் திருமஞ்சத்தில் அமர்ந்து அருள் மழை பொழியும் சண்முகப் பெருமானை வேண்டி பெருவரம் பெறுவோமாக.

ஞானஏந்தல்
ந.பரமேஸ்வரன்.







வடக்கு மாகாண விவசாய அமைச்சின் 2016 ஆம் ஆண்டுக்கான உழவர் பெருவிழா நேற்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் நடைபெற்றது. இப் பெருவிழாவில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக தமிழகத்தின் பிரபல கவிஞரும் பாடலாசிரியருமான கவிப் பேரரசு வைரமுத்து கலந்து கொண்டதைப் படங்களில் காணலாம். (படங்கள்:- மாமூலை செய்தியாளர்)

# தண்ணீர் இறைக்கும் மோட்டர் அன்பளிப்பு

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் ஜெகதீஸ்வரன் என்பவருக்கு நீர் இறைக்கும் மோட்டர் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. ஜெகதீஸ்வரன் கடந்தகால யுத்தத்தின் போது தலையில் ஏற்பட்ட காயத்தினால் தனது இரு கண்களின் பார்வையையும் இழந்துள்ளார். இவர் அன்றாடம் தமக்கு தண்ணீர் எடுப்பதற்கான பிரச்சினை தொடர்பாக விடுத்த கோரிக்கைக்கு அமைவாகவே இந்த உபகரணம் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. (2-15)

# 'தாயன்பு' நூல் வெளியீடு

(முல்லைத்தீவு)

வள்ளுவர்புரம்செல்லமுத்து வெளியீட்டகம் வெளியிடும், முல்லைத்தீவு கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி சூரியா ஜெயராஜா எழுதியுள்ள "தாயன்பு" எனும் நூல் வெளியீடு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு செம்மலை மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு செல்லமுத்து வெளியீட்டக இயக்குநர் யோ.புரட்சி தலைமை தாங்குவர் வாழ்த்துரையினை எழுத்தாளர் மணலாறு விஜயன், வெளியீட்டுரையினை முள்ளியவளை கலைமகள் வித்தியாலய அதிபர் ஜெயவீரசிங்கம், விமர்சன உரையினை பிரதிக்கல்விப் பணிப்பாளர் முல்லை. ஆதவன், ஏற்புரையினை நூலாசிரியர் ஆகியோர் வழங்குவார்கள்.

பெற்றோர்களும் தமது பிள்ளைகளுக்கு இலகுவாக கற்றுக்கொடுக்கக்கூடிய வகையில் வழிகாட்டல் செய்யும் "தாயன்பு" எனும் நூல் வெளியீடு செய்யப்படவுள்ளது. (2)




# புதுக்குடியிருப்பிற்கு ஜனாதிபதி இன்று விஜயம்

புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதியிலுள்ள "ஹாயித் திராமணி" ஆடைத் தொழிற்சாலை இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10மணிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

புதுக்குடியிருப்பு நகர் பகுதியிலும் அதனை அண்மித்த பிரதேசங்களிலும் பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஹாயித்திராமணி ஆடைத் தொழிற்சாலை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வரும் நிலையில் இதற்கான உத்தியோகபூர்வ திறப்பு விழா ஜனாதிபதியினால் இன்று இடம்பெறும்.(2-281)

# வீட்டில் உறக்கத்தில் இருந்த குடும்பஸ்தர் இனம்தெரியாதோரால் அடித்துக்கொலை

## தேராங்கண்டல் கிராமத்தில் சம்பவம்

(மல்லாவி)

மல்லாவி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேராங்கண்டல் கிராம அலுவலர் பிரிவில் வசிக்கின்ற குடும்பஸ்தர் ஒருவர் நித்திரையில் இருந்த வேளை இனம் தெரியாத நபர்களினால் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் தேராங்கண்டல் கிராமத்தில் இடம்பெற்றுள்ளது. இதில் காளிதாஸ் ஜெயகாந்தன் (வயது-39) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கொலை செய்யப்பட்டவராவார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

தேராங்கண்டல் கிராமத்தில் துவிச்சக்கர வண்டி திருத்தும் வேலையில் ஈடுபடும் 5 பிள்ளைகளின் தந்தையொருவர் தனது வீட்டிற்கு முன்பாக கட்டிலில் ஆழ்ந்த நித்திரையில் இருந்த வேளை அடித்துக்கொலைசெய்யப்பட்டுள்ளார்.

வீட்டினுள் உறக்கத்தில் இருந்த மனைவி, பிள்ளைகள் ஆகியோர் சத்தம் கேட்டு வெளியில் வந்து பார்த்த போது பிரஸ்தாப குடும்பஸ்தர் இரத்த வெள்ளத்தில் இறந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.

இதனையடுத்து குடும்பத்தவர்கள் எழுப்பிய அவல சத்தத்தை அடுத்து அயலவர்கள் அவ்விடத்திற்கு வந்து தாக்கியவர்களை தேடிய போதும் அவர்களை கண்டு பிடிக்க முடியவில்லை.

சம்பவம் தொடர்பில் மல்லாவி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு நேற்றுக் காலை சம்பவ இடத்திற்கு மோப்ப நாயின் உதவியுடன் வருகை தந்த பொலிஸார் சந்தேக நபர்களை தேடும் பணியில் ஈடுபட்டனர்.

அத்துடன் தடயவியல் நிபுணர்களும் தடயங்களை சேகரித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை மல்லாவி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(2-15)

# முல்லைத்தீவு வித்தியானந்த கல்லூரி பல்கலையாக மாறும் காலம் விரைவில்

## கல்லூரியின் 65வது ஆண்டு விழாவில் முன்னாள் அதிபர் இராசநாயகம்

(தண்ணீரூற்று)

யாழ்ப்பாணத்தில் பரமேஸ்வராக் கல்லூரியும் மட்டக்களப்பில் விபுலானந்தாக் கல்லூரியும் தற்போது பல்கலைக் கழகங்களாக மாறிவிட்டன.

இந்நிலையில் மு/முள்ளியவளை வித்தியானந்த கல்லூரியும்பல்கலைக்கழகமாக மாறும் காலம் வெகு துூரத்தில் இல்லை என ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர் சி.இராநாயகம் தெரிவித்துள்ளார்.

மு/முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 65ஆவது ஆண்டு நிறைவும் பரிசளிப்பு விழா-2015 நிகழ்வும் கடந்த 17ஆம் திகதி காலை 9.30 மணியளவில் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில்கௌரவவிருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர்சிறப்புரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில்,

யாழ்ப்பாணத்தில் பரமேஸ்வராக் கல்லூரியும் மட்டக்களப்பில் விபுலானந்தக் கல்லூரியும் பல்கலைக்கழகங்களாக மாறிவிட்டன.

தற்போது வித்தியானந்த கல்லூரியும் தேசிய பாடசாலையாகிவிட்டது.

அத்தோடு நின்று விடாது பல்கலைக்கழகமாக மாறும் காலம் வெகுதூரத்தில் இல்லை. இதன் பரிமாண வளர்ச்சிக்கு பெற்றோர், மாணவர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரினதும் ஒத்துழைப்பும் பங்களிப்பும் தேவை என்றார்.

பாடசாலை அதிபர் தலைமை உரையில், ஒவ்வொரு வருடமும் பாடசாலையின் பிறந்த நாளுக்கு (தொடக்கநாள்) வாழ்த்துக்கூறும் இம்மண்ணை மறவாத நன்றியுணர்வு கொண்ட மகான் முன்னாள் அதிபர் சி.இராசநாயகம் என புகழாரம் சூட்டினார். தற்பொழுது சகல, பௌதீக வளங்களையும் கொண்ட இப் பாடசாலையானது பலவெற்றிகளையும் பல்வேறு துறைகளில் சாதனைகளையும் படைத்து வருகின்றமை நம்பிக்கை தருகிறது என அவர் தெரிவித்தார்.

மாணவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வை பிரதம விருந்தினர் சி.இராசநாயகமும் மாணவர்களுக்கான பரிசில்களை அவரது பாரியார் திருமதி கமலாம்பாள் இராசநாயகமும் வழங்கி வைத்தார்கள். (2-292)



சிறுவர் பராமரிப்பு நிதியத்தின் நிதியுதவியுடன் முள்ளிவாய்க்கால் கிழக்கு அ.த.க.பாடசாலையில் அமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்ற போது

படங்கள்:- மாமூலை செய்தியாளர்)

## நாவற்காட்டில் அமைந்துள்ள

# இடுகாடு, சுடுகாடு மயானங்கள் பராமரிப்பு இன்றி காணப்படுகின்றன

## பொதுமக்கள் சுட்டிக்காட்டு



(வற்றாப்பளை)

முல்லைத்தீவு கரைதுறைப் பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முள்ளியவளை வடக்கு நாவற்காடு பகுதியில் அமைந்துள்ள இடுகாடும் சுடுகாடும் உரிய பராமரிப்பு இன்றி பற்றைகள் சூழ்ந்து காணப்படுவதாக அப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் முள்ளியவளை, முள்ளியவளை வடக்கு, நாவற்காடு, சஞ்சீவன் குடியிருப்பு, வெளிக் குடியிருப்பு பொன்னகர், ஐயனார் குடியிருப்பு எனப் பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இறந்தவர்களுக்கான இறுதிக்கிரியைகளை மேற்கொள்ளும் இந்து மற்றும் கிறிஸ்தவ மயானங்கள் எவ்விதமான பராமரிப்பும் இன்றி காணப் படுவதால் தமது உறவுகளின் இறுதிக்கிரியைகளை மேற் கொள்ளச் செல்லும் மக்கள்பல அசௌகரியங்களைச் சந்திப்பதாகதெரிவிக்கின்றனர்.

மயானங்களைச் சுற்றி வேலிகள் அமைக்கப்படாமையால், இறந்தவர்களின் கல்லறைகளுக்கு மேல் கட்டாக் காலிகள் நடமாடித் திரிவதுடன் மக்கள் இறுதிக் கிரியைகளை மேற்கொள்வதற்கு கொட்டகைகள், கிணறுகள் என்பன அமைக்கப்படவில்லை எனவும் 1953 ஆம் ஆண்டு மேற்படி இந்து மயானத்தில் அப்போதைய கிராம சபையினரால் கிணறு ஒன்று அமைக்கப்பட்டதாகவும் அக் கிணறு தற்போது பூரணமாக அழிவடைந்து காணப்படுவதாகவும் பொதுமக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

மேலும் இக் குறைபாடுகள் மிக நீண்ட காலமாக காணப் படுவதுடன் குறித்த மயானங்களைப் பயன்படுத்தும் கிராமங்களின் கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் கூட இக் குறைபாடுகளைக் கண்டுகொள்ளாமல் இருப்பதும் வேதனைக்குரிய விடயமாகும் என அம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் குறித்த சங்கங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து தம்மிடம் இருக்கும் நிதியை பயன்படுத்தி இக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய முடியும் எனக் கூறும் அப் பிரதேச மக்கள், கரைதுறைப்பற்று பிரதேச சபையினரும் இது தொடர்பில் கவனமெடுத்து இக் குறைபாடுகளைத் தீர்க்க முயற்சிக்க வேண்டுமெனவும் தெரிவிப்பதோடு வேலிகளை அடைத்து பற்றைகளை அகற்றி மேற்படி மயானங்களை பாதுகாக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-310)

நமக்கு மேலும் ஒருவனடா-அவன்
நாலும் தெரிந்த தலைவனடா!
-கண்ணதாசன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மாணவரின் அழுத்தங்களை குறைக்க நாட்டின் கல்வியில் மறுசீரமைப்பு

## கல்வியமைச்சுக்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

நாட்டில் மாணவர்களுக்கான அழுத்தங்களை குறைக்கும் வகையில் கல்வியில் மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கல்வி அமைச்சுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

புலமைப்பரிசில் பரீட்சை காரணமாக ஐந்தாம் வகுப்பு மாணவர்களும் பெற்றோரும் எதிர்கொள்ளும் அழுத்தங்கள் மற்றும் 6 வகுப்புக்கு மேற்பட்ட மாணவர்கள் எதிர்கொள்ளும் பாடங்களின் எண்ணிக்கை குறித்த அழுத்தங்கள் பற்றி கல்வி அமைச்சர் மற்றும் அதிகாரிகளை சந்தித்த ஜனாதிபதி வருத்தம் தெரிவித்துள்ளார்.

இந்த அழுத்தங்களை குறைக்கும் வகையில் கல்வி முறைமையில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்று அவர் கல்வி அமைச்சை சேர்ந்தவர்களிடம் கேட்டுக்கொண்டதாக ஜனாதிபதியுடனான சந்திப்பில் கலந்துகொண்ட கல்வி இராஜாங்க அமைச்சர் ராதாகிருஷ்ணன் கூறினார்.

நல்ல பள்ளிக்கூடங்களில் அனுமதி பெறும் நோக்கில் 5 ஆம் வகுப்புக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்களும், பெற்றோரும் அதிக கவனம் செலுத்துவதாக தம்மிடம் கூறிய ஜனாதிபதி, அதனால் அவர்கள் எதிர்கொள்ளும் பரீட்சைக்கான அழுத்தங்களை குறைக்க நடவடிக்கை எடுப்பதுடன், வெறுமனே பரீட்சையை மாத்திரம் மாணவரின் தகைமையை அறியும் சாதனமாக கொள்ளாமல், அவர்களது ஏனைய திறமைகளையும் கணிக்கும் வகையில் கல்வி முறையில் மாற்றம் செய்யுமாறும் அதிகாரிகளை கேட்டதாகவும் ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

6 ஆம் வகுப்புக்கு மேற்பட்ட மாணவர்கள் சுமார் 13 பாடங்களை தற்போது படிக்க வேண்டிய நிலை இருப்பதாக கவலை தெரிவித்த ஜனாதிபதி, அதற்கு பதிலாக தேவையான பாடங்களை மாத்திரம் வைத்துக்கொண்டு ஏனையவற்றின் எண்ணிக்கையை குறைக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளார்.

அதேவேளை கணினி மற்றும் தொழில்நுட்பக் கல்வி போன்றவற்றிலும் அதிக கவனம் செலுத்துமாறும் ஜனாதிபதி அவர்களை கேட்டிருக்கிறார்.

இந்த சீர்திருத்தங்கள் குறித்த ஒரு அறிக்கையை தனக்கு ஒரு மாதகாலத்தில் சமர்ப்பிக்குமாறும் ஜனாதிபதி தேசிய கல்வி நிறுவன ஆணையருக்கு உத்தரவிட்டுள்ளார். (செ-12)

# சித்தர் சித்தாந்தம் 2-ம் பதிப்பு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதனின் வெளியீடான சித்தர் வேதாந்தம் என்ற நூலின் இரண்டாவது பதிப்பின் வெளியீட்டு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை நயினை ஸ்ரீ நாக பூஷணி அம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இப்பதிப்பானது மார்க்கண்டு சுவாமிகள் சபையால் வெளியிடப்படவுள்ளது. (இ-5)

# நாசவேலை செய்தார் மண்மீது விழுந்து அழு(ந்து)வார்

கன்மவினை பற்றி சைவ சித்தாந்தம் மிகத் தெளிவாகப் போதிக்கின்றது. இந்த உலகில் இடம் பெறும் அனைத்து வினைப்பயன்களுக்கும் கன்மாவே காரணம் என்பது சைவ சித்தாந்தத்தின் தத்துவம்.

இங்குதான் தன்னை அறிதல் என்ற விடயம் முக்கியம் பெறுகிறது. உன்னையே நீ அறிவாய் என்ற சோக்கிரட்டிஸின் தத்துவமும் இதன் வழி வந்தவைதான். ஆக, முதலில் தன்னை அறிதல் என்பது மிகவும் முக்கியமான விடயம். தன்னை அறியும் போதே தான் செய்தவை பற்றிய எண்ணங்கள் மீள்சிந்தனைக்கு ஆட்படும். இல்லையேல் செய்தவை எல்லாம் சரி என்றான ஒரு நிலைமை ஏற்படும்.

செய்தது எல்லாம் சரி என்ற நினைப்பு மனதில் ஏற்பட்டு விட்டால், பரிகாரம் காணுதல் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போகும். எனவேதான் தலைவனாகிய இறைவனை அடைவதற்கு தன்னை அறிதல் அவசியம் என்று உணரப்படுகிறது.

எனினும் பலர் தான் செய்தவை அனைத்தும் சரியானவை என்று நினைத்துக் கொள்கின்றனர். இவர்கள் கன்மவினை பற்றி அறியாதவர்களாக இருப்பார்கள் என்றே பொருள்கொள்ள வேண்டும்.

சைவ சித்தாந்தம் கூறும் கன்மவினை பற்றி எல்லோரும் அறிந்து கொள்வதும் விளங்கிக் கொள்வதும் கடினம் என்பதால் பாவ, புண்ணியம் என்றவாறாக கன்மவினை விளக்கப்படுகிறது.

ஒரு சாதாரண மனிதன் தன் வாழ்வில் பாவம், புண்ணியம் என்ற இரு விடயங்களைத் தெரிந்து கொண்டு தனது செயற்பாடுகள் இந்த இரண்டுக்குள்ளும் எந்த வகைக்குள் இடம்பெறக்கூடியது என்பதை தன் புத்தியால் அறிந்து செயற்படுவானாயின் அவன் கன்மவினையில் இருந்து விடுபட முடியும்.

எனினும் அதிகாரம், பதவி, அறிவுச் செருக்கு, பணம் என்பன வந்து விட்டால் எல்லாவற்றையும் மறைத்து விடுகின்ற நிலைகளும் உண்டு.

இங்குதான் அதிகாரத்தில் இருந்தவர்கள், மக்களை வதைத்தவர்கள், மனித உயிர்களைக் கொன்றொழித்தவர்கள், அத்தகைய செயல்களுக்கு காரணமாக இருந்தவர்கள், இவர்கள் தங்கள் வாழ்நாளின் அந்திமப் பகுதியில் தாங்கள் செய்தவை அநியாயமானவை என்பதை உணர்ந்துள்ளனர். எனினும் கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் என்பதாக அவர்களின் நிலைமை அமைந்து விடுகிறது.

நவாலியில் சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தின் மீது நடந்த விமானக்குண்டுத் தாக்குதலில் போது அப்பாவிப் பொதுமக்கள் இறந்த செய்தி அறிந்து தான் அழுது குளறியதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

இங்குதான் கன்மவினையின் அனுபவிப்பு உணரப்படுகிறது. நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயம் மீது விமானக்குண்டுத் தாக்குதல் நடந்தபோது, திருமதி சந்திரிகா குமாரதுங்கவே ஜனாதிபதியாக இருந்தார்.

சென்.பீற்றர்ஸ் தேவாலயம் மீது குண்டுத் தாக்குதல் நடந்த அன்றைய தினமே சந்திரிகா அம்மையார் மன்னிப்புக் கேட்டிருந்தால் அதன் நிலைமை வேறுவிதமாக கருதப்படும். ஆனால் இருபது வருடங்களுக்குப் பின்னர் பதவியில் இல்லாதபோது நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தின் மீது நடந்த தாக்குதல் அறிந்து அழுது துடித்தேன் என்பதை சொல்வதற்குள் கன்ம வினையின் அறுவடை ஆரம்பமாகியுள்ளது என்பது தெரிகிறது.

பரவாயில்லை, இப்போதாவது சந்திரிகா அம்மையார் தான் அனுபவிக்கும் வலியை வெளிப்படுத்தியிருந்தார். இன்னமும் சிலர் இன அழிப்பைச் செய்துவிட்டு நெஞ்சை நிமிர்த்துகின்றனர். என்றோ ஒரு நாள் இவர்கள் தாம் செய்த கர்மவினையை அனுபவிப்பர். அப்போது இந்த மண்ணில் வீழ்ந்து அழுவர்; அழுந்துவார். இதுவே கன்மாவின் தத்துவம்.

# சரியான திட்டமிடலோடு சரியான முடிவுகளை எடுக்க நாம் பழகிக் கொள்வோம்!

## பரமபிதா காட்டிய பாதை

இன்று நமக்குத்தரப்படும் பைபிள் பகுதியில் இயேசு தன் பணிவாழ்வை கலிலேயாவில் உள்ள நாசரேத்தில் தொடங்குவதை காண்கின்றோம். பைபிளில் லூக்கா நற்செய்தி புத்தகத்தில் வரும் 'நாசரேத்து' என்னும் இடம் கலிலேயாவின் ஒரு நகரம் என்றும் அன்னை மரியாள் - மாதாவின் சொந்த ஊர் என்றும் விபரிக்கப்படுகிறது. இந்த நாசரேத்து என்னும் இடத்தில் தான் அன்னை மரியாள் ஆண்டவரின் கபிரியேல் தூதுவரால் - 'அருள் மிகப் பெற்றவரே வாழ்க, ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்" என வாழ்த்துப்பெற்றவர். இந்த கலிலேயா- பரப்பளவைப் பொறுத்தவரையில் மிகப் பெரியது அல்ல. ஆயினும் ஜோசப்புஸ் என்ற விவிலிய வரலாற்று அறிஞரின் கருத்துப்படி கலிலேயாவில் ஏறக்குறைய 204 ஊர்களும் ஒவ்வொரு ஊரிலும் 15 ஆயிரம் எண்ணிக்கைக்கும் அதிகமான மக்களும் வாழ்ந்தார்கள். ஒட்டுமொத்த பாலஸ்தீனத்திலே கலிலேயப்பகுதி தான் செழிப்பான பகுதி. இந்த கலிலேயா பகுதி உலகின் பல வேறிடத்தவர்கள் பயணம் செய்வதற்கு குறுக்குப் பாதையாகவிருந்ததனால் அதிக போக்குவரத்துக்களை கொண்ட இடமாகும். இந்த கலிலேயா கடற்கரைப்பகுதியில் இயேசுவின் காலத்திய தொழுகைக்கூடம் ஒன்றின் பகுதிகள் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தத்தொழுகைக் கூடம் முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்றும், கி.பி.66க்கும் 70க்கும் இடைப்பட்ட காலத்தில் யூதர்கள் உரோமையருக்கெதிராகக் கிளர்ச்சி செய்த போது இது அழிக்கப்பட்டிருக்கலாம் என்றும் இஸ்ரேல் தொல்பொருள் ஆய்வு அலுவலகம் அறிவிக்கிறது. கலிலேயா பாலஸ்தீனத்தின் ஒரு பகுதி என்றாலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள்: பெனிசியா, சமாரியா நகர்கள் பெரும்பாலும் யூதரல்லாத மக்கள் வாழ்ந்த பகுதிகள். இயேசு இந்த கலிலேயாவை தன்னுடைய பணிக்காக தேர்ந்தெடுத்தார் என்றால் அது ஏதோ எதேச்சையாக நிகழ்ந்ததல்ல. மாறாக, சரியான திட்டமிடல். தன்னுடைய பணிவாழ்வை எங்கே தொடங்குவது? எப்படி செயற்படுத்துவது? யாரை அழைப்பது? என்ற சரியான திட்டமிடலை இயேசு கையாண்டார். அதுதான் அவரின் வெற்றிக்கு காரணம்.

இயேசு எதற்காக தன் பணி வாழ்வை இந்த கலிலேயாவில் - நாசரேத்து தொடங்கவேண்டும்? இதனை திட்டமிட்டுத் தான் தொடங்கினாரா? என்னும் கேள்விகள் நமக்குள் எழும்பலாம். ஆம் அவர் திட்டமிட்டுத்தான் தொடங்குகினார். பல வடிவங்களில் தளையுண்டிருக்கும் மனிதர்களுக்கு விடுதலை வழங்கவே தான் அருள்பொழிவு செய்யப்பட்டுள்ளதாக இங்கு முழங்குகிறார் இயேசு. தன் பணிவாழ்வின் தொடக்கத்தில் இயேசு ஆற்றிய முதல் உரையை இங்கு காண்கின்றோம்: 'ஆண்டவருடைய ஆவி என் மேல் உளது. ஏனெனில், அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும் சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்" என்று ஆரம்பமாகும் வார்த்தைகள் இயேசு தன் பணிவாழ்வைத் தொடக்கியபோது அறிவித்த 'கொள்கை விள க்க அறிக்கை " (Manifesto) ஆகும்.

நாசரேத்தின் தொழுகைக் கூடத்தில் இயேசு ஆற்றிய உரை பல சமுதாயச் சிந்தனைகளை தூண்டக்கூடியது. உடலளவிலும் மனதளவிலும் கட்டுண்டு கிடந்த மனித சமுதாயத்தை விடுவிக்கவே தான் வந்ததாக இயேசு முழக்கமிட்டு கூறுகின்றார். சமுதாய நீதி பற்றிய கனவுகள் என்றோ எப்போதோ நனவாகும் என்று எண்ணி வாழ்ந்து கொண்டிருந்த யூத மக்களுக்கு இன்றே, இப்போதே என்று




இயேசு கொடுத்த பாடங்கள் நம்பிக்கையை வளர்த்த முதல் பாடங்கள. சமுதாய மாற்றங்கள் இனி வரும என்றல்ல, இப்போதே வந்துவிட்டது என்று அவர்களை நம்பவைக்க முயன்ற இயேசுவின் முதல் வெற்றி. இயேசு தனது பணியின் தொடக்கமாக இதையே முன்வைத்திருககிறார். தான் செய்யவிருக்கும் பணி எத்தகையது என்னும் இலக்குத் தெளிவு இயேசுவிடம் இருந்தது. அதை இயேசு அனைவருக்கும் அறிவித்த பின்னரே, செயற்படத் தொடங்கினார் என்பது தெளிவாகிறது. தான் செய்யவிருக்கும் பணி என்ன? யாருக்கு என்னும் தெளிவு அவரிடம் இருந்தது. நம்மிடம் இருக்கிறதா? இன்று எமது வார்த்தைகளில் கூறுவதாயின் இயேசுவின் தலைசிறந்த தலைமைப் பண்புகளுள் ஒன்று இதுவாகும். நாமும் சரியான நேரத்தில், சரியான விதத்தில் சரியான முடிவுகளை எடுக்கவேண்டும். அப்படி ஒரு முடிவை இயேசு எடுத்ததை இன்றைய பைபிள்பகுதி காட்டுகின்றது. இனறு எம்மத்தியிலும் பதவியில் இருப்பவர்கள்முடிவெடுக்க முடியாத நிலைமை, கூடவிருப்பவரகளை முடிவெடுக்க விடாமை, கீழ் மட்டங்களில் இருப்பவர்களும் முடிவெடுப்பதற்கு ஒத்துழையாமை,இப்படி பலநிலைகள் உட்புகுந்த இடமாக எமது அலுவலகங்களும வேலைத்தலங்களும் காணப்படுவதை நாம் காண்கின்றோம். இதனால் மகிழ்ச்சியின் இடங்களாக விளங்கவேண்டிய இந்த இடங்கள் மனக்கவலைகளை உருவாக்கும் இடங்களாக மாறிவிடுகின்றன. எனவே நாம் இயேசு காட்டும் பாதையில் சரியான திட்டமிடலோடு சரியான முடிவுகளை எடுக்க பழகிக்கொள்வோமாக?

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

# கெவின் பீற்றர்சன் அதிரடியில் இறுதிப் போட்டியில் மெல்பேர்ன் ஸ்டார்ஸ்





பிக் பாஷ் லீக் இருபது-20 தொடரில் பெர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணிக்கு எதிரான 2 ஆவது அரையிறுதி போட்டியில் மெல்பேர்ன் ஸ்டார்ஸ் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

மெல்பேர்னில் நேற்று முன்தினம் நடந்த பிக்பாஷ் லீக் இருபது-20 தொடரின் 2 ஆவது அரையிறுதியில் பெர்த் ஸ்கார்ச்சர்ஸ்-மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணிகள் மோதின.

இதில் நாணய சுழற்சியில் வென்ற மெல்பேர்ன் ஸ்டார்ஸ் களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதன்படி பெர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணிக்கு மார்கஸ் ஹாரிஸ், மைக்கெல் கிளிங்கர் தொடக்க வீரர்களாக களமிறங்கினார்கள்.

ஹாரிஸ் ஒரு ஓட்டங்களில் ஆட்டமிழக்க, அடுத்து வந்த கார்பெர்ரியும் (13) நிலைக்க வில்லை. பின்னர் வோக்ஸ், கிளிங்கர் ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

கிளிங்கர் 44 ஓட்டங்களும் வோக்ஸ் 52 ஓட்டங்களும் எடுத்து வெளியேறினர். அதன்பின் வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

இதனால் அந்த அணியால் 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 139 ஓட்டங்கள் மட்டுமே சேர்க்க முடிந்தது.

இதனால் 140 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி களமிறங்கியது. அந்த அணிக்கு தொடக்க வீரர்களாக ஸ்டாய்னிஸ், லூக் ரைட் ஆகியோர் ஆடினர். ரைட் (7) நிலைக்கவில்லை. அடுத்து வந்த கெவின் பீற்றர்சன் ஸ்டாய்னிஸ் உடன் ஜோடி சேர்ந்து அதிரடியாக விளையாடினார்.

கெவின் பீற்றர்சன் 36 பந்தில் 5 பவுண்டரி, 2 சிக்சருடன் 62 ஓட்டங்கள் குவித்தார். அதேபோல் ஸ்டாய்னிஸ் 44 ஓட்டங்கள் எடுத்தார்.

இதனால் மெல்பேர்ன் அணி 18.1 ஓவரிலே 3 விக்கெட் இழப்பிற்கு 140 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. ஹேண்ட்ஸ்காம்ப் (15), டேவிட் ஹசி (7) களத்தில் இருந்தனர்.

இதன் மூலம் மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது. எதிர்வரும் 24 ஆம் திகதி (இன்று) நடைபெறவிருக்கும் இறுதிப்போட்டியில் மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி, சிட்னி தண்டர் அணியுடன் மோதுகிறது. (க)

## றிபேக் தாரகை வெற்றி

சாவகச்சேரி றிபேக் தாரகை, திருநெல்வேலி YMHA அணிகள் மோதிக் கொண்ட கிரிக்கெட் போட்டி அண்மையில் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வென்ற சாவகச்சேரி றிபேக் தாரகை முதலில் துடுப்பெடுத்தாடியது. ஆரம்பத்தில் 15 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது. பின்வரிசை துடுப்பாட்ட வீரர்களின் நிதான ஆட்டத்தின் உதவியுடன் 36.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 156 ஓட்டங்களை பெற்றது. துடுப்பாட்டத்தில் தசிந்தன் 36 ஓட்டங்கள், கௌசிகன் 25ஓட்டங்கள், நிலான் 24 ஓட்டங்களை அதிக பட்சமாக பெற்றுக்கொடுத்தார்கள்.156 ஓட்டங்கள் என்ற சுலபமான வெற்றி இலக்கை நோக்கி துடுப்பாடிய திருநெல்வேலி YMHA ஒருகட்டத்தில் 135 ஓட்டங்களுக்கு 5விக்கெட்டுக்களை இழந்து வெற்றியின் விளிம்பில் இருந்தது. பின்னர் றிபேக் தாரகையின் சுழற்பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் 3ஓட்டங்களுக்கு இறுதி 5விக்கெட்டுக்களை இழந்து தோல்வியினை சந்தித்தது. சாவகச்சேரி றிபேக் தாரகையின் பந்து வீச்சு சார்பாக மார்க்சிங் 4விக்கெட்டுக்களையும் கௌசிகன் 2விக்கெட்டுக்களையும்கைப்பற்றினர். இதன்மூலம் JDCA தொடரில் விளையாடிய இரண்டு போட்டிகளிலும் றிபேக் தாரகை வெற்றிபெற்றுள்ளது. (க-29)





வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்திய 6 ஆவது வர்ண இரவு நிகழ்வு அண்மையில் நெல்லியடி மத்திய கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தேசிய ரீதியில் வெற்றிபெற்ற கிளி/முல்லை/யாழ் CSD கராத்தே அணியினருடன் வடமாகாண விளையாட்டுத்துறை செயலாளர் இ.ரவீந்திரன்,வடமாகாண விளையாட்டுத்துறை இணைப்பாளர் இ.ஆனல்டும் வடமாகாண உடற்கல்விப் பணிப்பாளர் ஜே.சத்தியபாலன் மற்றும் கராத்தே பொறுப்பாசிரியர் சென்சே ரஜிதரன், கராத்தே ஆசிரியர் சென்சே விஜயராஜ் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## ஆஸி ஓபன் டென்னிஸ்; 4வது சுற்றில் அசரென்கா



கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்பேர்ன் நகரில் நடைபெற்று வருகிறது.

ஸ்பெயினை சேர்ந்த உலகின் 3 ஆம் நிலை வீராங்கனையான கார்பின் முகுருசா 3 ஆவது சுற்றில் அதிர்ச்சிகரமாக தோற்றார்.

கடந்த விம்பிள்டன் போட்டியில் 2 ஆவது இடத்தை பிடித்த அவர் 3-6, 2-6 என்ற கணக்கில் பார்போராசிடம் (செக்குடியரசு) தோற்றார்.

14 ஆம் நிலை வீராங்கனையும், இரண்டு முறை சம்பியனுமான விக்டோரியா அசரென்கா (பெலாரஸ்) 4 ஆவது சுற்றுக்கு முன்னேறினார். அவர் 6-1, 6-1 என்ற நேர் செட் கணக்கில் நவ்மி ஒசாகாவை (ஜப்பான்) வீழ்த்தினார்.

21 ஆம் நிலை வீராங்கனை மகரோவா (ரஷ்யா) 3 ஆவது சுற்றில் செக்குடியரசைச் சேர்ந்த கரோலினாவை சந்தித்தார். இதில் மகரோவா 6-3, 6-2 என்ற நேர்செட் கணக்கில் வெற்றி பெற்றார். அவர் 4 ஆவது சுற்றில் இங்கிலாந்தை சேர்ந்த ஜோகன்னா சானடாவை எதிர் கொள்கிறார். ஜோகன்னா 3 ஆவது சுற்றில் 6-2, 6-2 என்ற கணக்கில் டெனிசாவை (செக்குடியரசு) வீழ்த்தினார்.

13 ஆம் நிலை வீரரான ரோனிக் (கனடா) 3 ஆவது சுற்றில் 6-2,6-3, 6-4 என்ற கணக்கில் டிரோசிக்கை (செர்பியா) வீழ்த்தி 4 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

இந்த சுற்றில் அவர் வாவ்ரிங்கா (சுவிட்சர்லாந்து) அல்லது லுகாசை (செக்குடியரசு) சந்திக்கிறார். (க)




யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர்களால் ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் அண்மையில் கல்லூரி சமூகத்திற்கு வழங்கப்படுவதை படத்தில் காணலாம்.

## திடீரென...

நடைபெற்ற இச்சம்பவத்தினால் அங்கு பெருமபதற்றம் நிலவி வருகின்றது. குறிப்பாக இதனை பல இடங்களில் இருந்து வந்த மக்கள் நேரில் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் சாதாரணமாக ஏற்பட்ட நிலவெடிப்பு சிறிது சிறிதாக 100 மீற்றர் தூர பரப்பளவில் பரவி பல வெடிப்புக்களை தொடராக ஏற்படுத்தியுள்ளது. நேற்று மாலை வரை அந்த வெடிப்பு தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்றதால் மக்கள் மத்தியில் தற்போது பெரும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. எனினும் இது தொடர்பில் பயப்பட தேவையில்லை என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

நிலவெடிப்பு சம்பவத்தை கேள்வியுற்ற அரச அதிகாரிகள் மற்றும் ஆய்வாளர்கள் அங்கு விரைந்துள்ளதுடன், கோப்பாய் பிரதேச செயலக அதிகாரிகள், பொலிஸார் ஆகியோரும் சம்பவ இடத்திற்குச் சென்று நிலைமையை அவதானித்துள்ளனர். வீட்டுக்கு வெளியே ஆரம்பமாகிய வெடிப்பு சிறிது சிறிதாக வீட்டுக்குள் பரவி வீட்டின் சுவர்களையும் ஊடறுத்து சென்றதாக வீட்டார் கூறுகின்றனர்.

வீட்டின் கீழ் நிலம் மற்றும் சுவர் ஆகியவற்றில் பலத்த வெடிப்புக்கள் காணப்படுகின்ற போதிலும், நிலத்தில் சாதாரண வெடிப்புக்களே காணப்படுகின்றன. ஆரம்பத்தில் வீட்டில் தான் ஏதேனும் வெடிப்பு ஏற்படுகின்றது என சாதாரணமாக கருதிய வீட்டார், பின்னர் அதே நிலவெடிப்பு நிலத்திலும் பரவவே உசார் அடைந்து நில அதிர்வு ஏற்பட்டுள்ளது என்பதனை தாம் உணர்ந்து கொண்டதாக கூறுகின்றனர்.

இதே வேளை, மேற்படி வெடிப்புக்கான நிலநடுக்கம் ஐந்து ரிக்டர் அளவிற்கும் குறைவானதாகவே உள்ளது எனவும், ஆகையால் பெரிதாக பாதிப்பு ஏற்படவில்லை எனவும், குறிப்பாக ஐந்து ரிக்டர் அளவிற்கு அதிகமாக நில அதிர்வு உணரப்பட்டாலே பாதிப்புக்கள் குறித்து அவதானமாக இருக்க வேண்டும். இருந்த போதிலும் இந்த நிலநடுக்கம் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்ள உள்ளோம்.

நிலம் அசையாமல் வெடிப்பு மட்டுமே நிகழ்ந்துள்ளது. சில வேளைகளில் நிலத்தில் ஏற்பட்டுள்ள விரிசல் மேலும் அதிகரிக்கலாம், அல்லது குறைவடைந்து ஒன்றுமே இல்லாமலும் போய்விடலாம். ஆகையால் இது தொடர்பில் எந்த நேரத்திலும் அவதானமாக இருக்க வேண்டும், பாரிய நிலநடுக்கம் ஏற்படும் பட்சத்தில் வெளியான ஒரு இடத்தினை நோக்கி செல்வது பாதுகாப்பானது என அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

யாழ்.குடாநாட்டின் நிலத்தடி சுண்ணாம்பு கற்களால் ஆனதனால், காலநிலை மாற்றத்தினால் இந்த நிலவெடிப்பு ஏற்பட்டிருக்கும் எனவும், உறுதியாக இந்த நிலவெடிப்பு சம்பவம் நில அதிர்வாக இருக்கும் என தம்மால் கூற முடியாது எனவும் அதிகாரிகள் கூறியுள்ளனர். (செ-4,5,60)

## பாணுக்குள் கஞ்சா...

பூங்காவடி பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் பருத்தித்துறையைச் சேர்ந்தவர் எனவும், 30 கிராம் கஞ்சாவினை ஒரு இறாத்தல் பாணிற்குள் வைத்து சிறைச்சாலைக்கு கொண்டு சென்றுள்ளார் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் தகவலறிந்த பொலிஸார் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன் இவரை கைது செய்துள்ளனர்.

குறித்த நபரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதன்பின்னர் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-12)

## சீமெந்து பிளாற்...

கூலி வேலையில் ஈடுபட்டிருந்த இளம் குடும்பஸ்தர் மீது வீட்டின் சீமெந்து பிளாற் உடைந்து வீழ்ந்ததில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முற்பகல் 9 மணியளவில் தெல்லிப்பழை பட்டிக்கடவைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தெல்லிப்பழை தந்தை செல்வாபுரத்தைச் சேர்ந்த இராசன் - மயூரன் (வயது-27) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வீடு ஒன்றினை முற்றாக இடிக்கும் வேலையில் மேற்படி நபர் உட்பட்ட 5 பேர் கொண்ட கூலித்தொழிலாளர்கள் நேற்றுக்காலை ஈடுபட்டிருந்துள்ளனர்.

அவ்வேளையில் குறித்த நபரின் தலை மீது சீமெந்து பிளாற் உடைந்து வீழ்ந்ததில் சம்பவ இடத்திலேயே அவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

உயிரிழந்தவரது சடலத்தை காங்கேசன்துறை பொலிஸார் நேரில் சென்று பார்வையிட்டதுடன் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது. (செ-5,30,25)

## இந்திய போர்க்...

முகத்தை கடந்த வியாழக்கிழமை வந்தடைந்த இந்திய விமானந்தாங்கிப் போர்க் கப்பலான ஐஎன்எஸ் விக்கிரமாதித்யாவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுச் சனிக்கிழமை பார்வையிட்டுள்ளார்.

இதன்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா மற்றும் இந்தியக் கடற்படை அதிகாரிகள் வரவேற்று, இந்தியக் கடற்படையினரின் அணி வகுப்பு மரியாதையும் அளிக்கப்பட்டது.

அத்துடன், ஐஎன்எஸ் விக்கிர மாதித்யாவை சுற்றிக் காண்பித்து அதன் செயற்திறன் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இந்தியக் கடற்படை அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளனர்.

இந்தியக் கடற்படையின் மிகப்பெரிய விமானந்தாங்கிப் போர்க்கப்பலான ஐஎன்எஸ் விக்கிரமாதித்யாவுக்குப் பயணம் மேற்கொண்ட முதல் வெளிநாட்டு அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

## சர்வதேசத்தின்...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிபிசிக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியின்போது தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் தென்னாபிரிக்காவை தளமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச உண்மை மற்றும் நீதி வேலைத்திட்டம் என்ற அமைப்பின் நிறைவேற்று இயக்குநர் யஸ்மின் சூக்கா இக் கருத்தை பதிவு செய்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான விசாரணைகளின் போது வெளிநாட்டு நீதிபதிகளை பங்கேற்க அனுமதிக்கப் போவதில்லை எனவும், இலங்கையின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வெளிநாடுகளிலிருந்து நிபுணர்களை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமும் இல்லை என்று பிபிசிக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார்.

இந்நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரத்தியேக செவ்வியில் கூறியிருந்த கருத்துக்கள் தொடர்பில் சர்வதேச உண்மை மற்றும் நீதி வேலைத்திட்டம் என்ற அமைப்பு பதில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையில், இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பிலான விசாரணைகளின் போது சர்வதேசத்தின் பங்களிப்பையும் உள்ளடக்குவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் ஏற்கெனவே அளித்திருந்த வாக்குறுதியில் இருந்து பின்வாங்கும் வகையில், அவர் பிபிசிக்கு தெரிவித்த கருத்துக்கள் அமைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்படும் படையினரின் பெயர் விபரங்களை ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழு வெளியிடவில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருப்பதையும் சர்வதேச உண்மை மற்றும் நீதி வேலைத்திட்டம் என்ற அமைப்பின் அறிக்கை விமர்சித்துள்ளது.

அதேவேளை, இலங்கையில் ஆட்களை தடுத்து வைத்து சித்திரவதை செய்யும் குற்றச்சம்பவங்கள் மற்றும் பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்கள் இலங்கையின் புதிய ஆட்சியிலும் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக அண்மைக்காலங்களில் வெளியான குற்றச்சாட்டுக்களை பிபிசிக்கு வழங்கிய செவ்வியில் மறுத்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, விடுதலைப் புலிகளுடன் நெருக்கமானவர்கள் தான் இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதாக தெரிவித்திருந்தார்.

ஆனால், 2015ஆம் ஆண்டில் இடம்பெற்றிருந்த இத்தகைய 20 சம்பவங்கள் தொடர்பில் தங்களிடம் ஆதாரங்கள் இருப்பதாகவும், சித்திரவதைகளில் இருந்து விடுதலை என்ற அமைப்பும் இவ்வாறான வேறு சில சம்பவங்களை பதிவு செய்துள்ளதாகவும் சர்வதேச உண்மை மற்றும் நீதி வேலைத்திட்டம் என்ற அமைப்பின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. (செ-12)

## 'ஒற்றையாட்சி...

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அண்மையில் தெரிவித்துள்ள கருத்துக்கு தென்பகுதி அரசியல் தலைமைகள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

இரா.சம்பந்தன் வெளியிட்டுள்ள கருத்து தொடர்பாக தென்பகுதி அரசியல் தலைவர்கள் பலரும் வெளியிட்டுள்ள கருத்துக்களின் தொகுப்பு வருமாறு,

**வாசுதேவ நாணயக்கார**

இலங்கையில் சமஷ்டி முறைமையில் அதிகாரப் பகிர்வு என்ற பேச்சுக்கே இடமில்லை. ஒற்றையாட்சிக்குள்ளேயே அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதற்குள் 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

அதேவேளை அரச திட்டமிடல், பாதுகாப்பு, நிதி, நிர்வாகம் உட்பட முக்கிய அதிகாரங்கள மத்திய அரசிடமே இருக்க வேண்டும். சம்பந்தனின் கூற்றை ஏற்றுக் கொள்ள முடியாது.

**தினேஸ் குணவர்த்தன**

ஒற்றையாட்சியை தாண்டி எவ்வாறான முறைமைக்கும் அரசாங்கம் செல்லாது. ஜனாதிபதியும் பிரதமரும் ஒற்றையாட்சி முறைமையை மீறி செல்லமாட்டோம் என கூறியுள்ளனர். அதனை அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்று நம்புகின்றோம்.

ஆனால் 16 ஆசனங்களை வைத்துக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கைகளை முன்வைப்பது நாட்டில் அரசியல் நெருக்கடிகளையே ஏற்படுத்தும். சம்பந்தனின் கோரிக்கைகள் நிறைவேறுவதற்கு நாங்கள் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்.

**அமைச்சர்• சம்பிக்க ரணவக்க**

ஒரு சிலர் நாட்டை பிரிக்கும் வகையில் கருத்துக்களை பரப்பினாலும் தமிழ் மக்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட பிரதான கட்சிகளின் பிரதிநிதிகளும் பிரிவினைக்கு எதிரான அரசியல் பயணத்தையே விரும்புகின்றனர்.

நாட்டை பிரிக்கும் செயற்பாடுகள் தமிழர் தரப்பில் இருந்து வராது என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.

அதேபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது அதி உச்ச அதிகாரப் பகிர்வு என்னவென தமது வரைபை முன்வைக்க வேண்டும். அவர்களின் நிலைப்பாடு எவ்வாறு என்பதை தெளிவாக அரசாங்கத்திடம் தெரிவிக்க வேண்டும்.

அவ்வாறு இல்லாது அதியுச்ச அதிகாரப் பகிர்வு என்ற கருத்தின் உட்பொருள் என்னவென்பது தெரியாது எதையும் எம்மால் தெரிவிக்க முடியாது.

**அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் வெளியிட்டுள்ள கருத்துக்கு நான் கருத்துக் கூற முடியாது. அவர் என்ன அடிப்படையில் இந்த விடயங்களை குறிப்பிட்டுள்ளார் என்று எனக்குத் தெரியவில்லை.

ஆனால் பொதுவான ஒரு விடயத்தை என்னால் குறிப்பிட முடியும். புதிய அரசியலமைப்பு மற்றும் அதில் உள்ளடக்கப்பட வேண்டிய தீர்வு முறைமை தொடர்பில் அரசாங்கம் சகல கட்சிகளுடனும் பேச்சு நடத்தி இணக்கப்பாட்டுக்கு வந்த பின்னரே இறுதி முடிவு எடுக்கும் என அவர் கருத்து தெரிவித்துள்ளார். (செ-12)

## கற்பாறைகளின்...

சிரியரும் புவிச்சரிதவியல் முனைவர் பட்டம் பெற்றவருமான பொ.பாலசுந்தரம் பிள்ளை கருத்து தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் அவர் நேற்று மாலை வலம்புரிக்கு கருத்து தெரிவிக்கையில்,

பொதுவாகவே யாழ்.மாவட்டத்தின் பெருமபகுதி நிலப்பரப்பு சுண்ணாம்பு கற்பாறைகளினாலேயே தாங்கப்பட்டுள்ளது. இப்பாறைகளின் இடைவெளிகள் மற்றும் பிளவுகள் ஊடகவே எமக்கான நீர்வளம் கிடைக்கப்பெறுகின்றது.

இங்குள்ள பல குளங்கள், ஏரிகள் மற்றும் கிணறுகளிற்கான நீரூற்றுகள் சுண்ணாம்பு கற்பாறைகளை ஊடறுத்தே பிறப்பெடுகின்றன.

இதனால் கால ஓட்டத்தில் நீரூற்றுக்களிற்கான வழிப்பாதைகள் விரிவு நிலையை அடைய எத்தனிக்கும். இவ்வேளையிலேயே மேலுள்ள சுண்ணாம்பு கற்பாறைகள் அரிப்படைந்து கோறலுக்குள்ளாகி கீழிறக்கமடைய எத்தனிப்புக்கள் நடக்கும். இதன் பாதிப்பு நிலமட்டத்தில் பிளவுகளை ஏற்படுத்தி விளைவை ஏற்படுத்தும்.

நிலாவரைக் கிணறும் இதுபோன்ற பாரிய சுண்ணாம்பு கற்பாறைகள் இடிந்து கீழிறங்கியமையினாலேயே உருவாகியுள்ளது.

கீரிமலை, காங்கேசன்துறை, ஊறணி, பொக்கணை, அட்டகிரி, வில்லூன்றி போன்ற பல பிரதேசங்களில் தரைக் கீழ் நீர் மேலே வந்து மிதக்கின்றது.

இப்படியான நீர் தோற்றப்பாடுகள் உருவாகும் போதும் பாறைகள் வலுவிழந்த நிலையிலே நிலத்தின் கீழ் காணப்படும்.

இருவகையான நீரோட்டத்தில் மழை நீர் கீழிறங்கும் மற்றுமொரு முறையிலும் பாறைக்கள் பிளவுபட்டு நில வெடிப்புக்கள் தோன்றும் என பேராசிரியர் விளக்கம் அளித்தார்.

மேலும் நவக்கிரிப் பகுதியில் ஏற்பட்ட நில வெடிப்பு பாரிய விளைவுகளை உருவாக்காது எனவும் அது நில நடுக்கமாக பதிவாகவில்லை என்பதையும் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை சுட்டிக்காட்டினார். (செ-12)

## போர்க்குற்ற...

குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, உள்நாட்டுப் பொறிமுறை ஒன்றை உருவாக்கும் இலங்கை அரசாங்கத்தின் முயற்சிக்கு உதவும் நோக்குடன் தனது சிறப்புப் பிரதிநிதியை ஜப்பான் இன்று கொழும்புக்கு அனுப்பி வைக்கவுள்ளது. (செ-12)

## பேரவையால்...

யால் தயாரிக்கப்படும் தீர்வுத்திட்ட வரைபு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தரப்படுமாயின்தாம் அதை பரிசீலிக்கத் தயாராக இருப்பதாக கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்த கருத்தை நாம் வரவேற்கின்றோம்.

21.01.2016 அன்று கிளிநொச்சியில் நடந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டத்தையடுத்து ஊடகவியலாளர் மாநாட்டை நடத்திய கூட்டமைப்பின் தலைவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில் இதனைத் தெரிவித்திருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரின் இந்த கருத்தை நாம் வரவேற்பதுடன் பேரவையின் உபகுழுவினால் தயாரிக்கப்படும் தீர்வுத்திட்ட வரைபானது கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடமும் கையளிக்கப்படும்.

தமிழ் மக்கள் பேரவை முன்னெடுத்துள்ள தீர்வுத்திட்ட வரைபு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமும் கையளிப்பது என்ற தீர்மானம் பேரவை ஆரம்பிக்கப்பட்ட போதே எடுக்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வழங்கப்பட்ட மக்கள் ஆணைக்குட்பட்ட விதத்தில் பேரவையால் தயாரிக்கப்பட்டு வரும் தீர்வுத்திட்டவரைபு தமிழ் மக்களிடம் கொண்டு செல்லப்பட்டு, அவர்களின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டு, இறுதிவடிவம் பெற்றுக் கொள்வதற்கான அனைத்து முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்று நாம் உறுதியாகக் கூறிக்கொள்ளகின்றோம் என தமிழ் மக்கள் பேரவை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (செ-12)

## ஜனாதிபதி...

அமைச்சர் ராஜித சேனாரத்ன உள்ளிட்டோரின் அழுத்தங்களுக்கு அமைய இந்தப் பேச்சுவார்த்தை நடைபெறவிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறிப்பாக இலஞ்ச ஊழல் விசாரணை, நிதிமோசடிப் பிரிவு விசாரணை, ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை எனப் பல்வேறு விசாரணைகள் இடம்பெற்றிருக்கின்ற போதிலும் இதுவரை குற்றவாளிகள் இனங்காணப்படாதது ஏன் என இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பிரதமர் நாடு திரும்பியவுடன் இது குறித்து மீண்டும் பேச்சு நடத்தவும், ஜனாதிபதியுடனும் சந்திப்பு நடத்தவும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் தீர்மானித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-12)

**AB விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் மென்பந்து சுற்றுப்போட்டி 2016**

- கிளிநொச்சி பிரதேசத்திற்குட்பட்ட அணிகள் 31/01/2016 க்கு முதல் கழகங்களின் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (போட்டிகள் கிளிநொச்சியில் நடைபெறும்)
- யாழ்ப்பாணப் பிரதேசத்தை அண்மித்த அணிகள் 07/02/2016 க்கு முதல் கழகங்களின் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:-
**0777632048**
(C-3541)

UK Australia Canada
EXPERIENCE 7 YEARS EXPERIENCE
எந்தவொரு நாட்டிலும், விரும்பிய எந்தத் துறையிலும் பட்டக்கல்வியைத் தொடர
**Student Visa**
With Work Permit & PR



**IELTS**
அவசியமில்லை
வங்கிக்கடன் வசதி
VISIT VISA – SPOUSE VISA – WORK VISA
DEPENDANT VISA – SKILLED MIGRATION
SIKARAM
Any Visa to Any Country
மேலதிக விபரங்களையும் ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றியும் அறிந்துகொள்ள
www.sikaram.lk
Tel: 0777 32 4004 , 021 222 00 11
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m
(C-3334)

**A/L பொருளியல்**
**MCQ BOOK -4**
ரூபா 110
பணம் வங்கி விலைமட்டம்
மூன்றாம் பதிப்பு
புதிய வினாத்தாள் அமைப்பில் மேலதிக மீட்டல் வினாக்களுடன்
வங்கியாளர் பரீட்சைக்கும் உதவும்
முழுப்பாடத்திட்டமும் அடங்கிய 2015 A/L பரீட்சையில் 99 புள்ளிகள் பெறுவதற்கு வழிவகுத்த மற்றும் பொருளியல் நூல்கள்
ஆசிரியர் : வே.கருணாகரன்
பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை
(3382)

CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
(C-3522)
CNR World wide Express
No.401 Clock tower road, Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)
அழையுங்கள் - 077 29 31 062

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

**@ DCM - Chunnakam**
(குதிரைமலை சிவன் ஆலயத்துக்கு முன்)
Commencement 24/01/2016 4.00 P.M
Young & Energetic Lecturer
**English Class**
- G.C.E (O/L)
- For Professionals
- For Housewifes
- IELTS

Call :- 0750475371
(3381)

# சாவு அறிவித்தல்

## திருமதி சங்கரப்பிள்ளை பரமேஸ்வரி



வல்வெட்டியை பிறப்பிடமாகவும், சுழிபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சங்கரப்பிள்ளை பரமேஸ்வரி 23-01-2016 நேற்று சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம்- தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைத்தியர் குணரத்தினம்-சங்கரப்பிள்ளையின் (வல்வெட்டி பள்ளியவத்தை பரிகாரியார்) அன்பு மனைவியும்,

திருமதி கோகிலாதேவி-நடராசா(கனடா), திருச்சிற்றம்பலம் (அவுஸ்ரேலியா), திருமதி செல்வலக்சுமி-செல்வானந்தம் (கனடா), விக்கினேஸ்வரமூர்த்தி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

காளுவன் சந்தி,
சுழிபுரம்.

தகவல் :-
குடும்பத்தினர்
திருமதி கோகிலாதேவி-நடராசா
0765371949

(3383)

**நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வு அவதானம்**

அதிகளவு சீனிப் பண்டங்களை உண்பதனால் நீரிழிவு நோய் ஏற்பட்டு விரைவாக மரணம் ஏற்படலாம்.
**Sugar Kills. Consume with care.**
அனுசரணை: அன்னை மரக்காலை 174 A, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் - 021 221 7544
(3310)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PAKED BY:
ROYAL Industries
T.P.: 0777277670 Colombo.13
அனைத்துப் பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.



சிவா
நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P 021 222 2567
ஏக விநியோகஸ்தர்கள்

- விளையாட்டுத் துறையில் வெற்றிபெறும் வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் வீறு கொண்டெழும் விசேட சக்தியை வழங்குவது றோயல் குளுக்கோஸ்.
- நோயுற்றவேளை சோர்வுற்று இருக்கும் உங்களுக்கு புத்துணர்வும் புதுத்தென்பும் தருவது றோயல் குளுக்கோஸ்.
- காலை முதல் மாலை வரை வேலை அதிகம் காரணமாக சோர்வுற்ற நிலை அடையும் போது புதிய உற்சாகம் பெற உங்கள் கையில் இருக்க வேண்டியது றோயல் குளுக்கோஸ்.
- மழலைகட்கும் மகப்பேற்றுத் தாய்மாருக்கும் விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கும் முதியோருக்கும் மூதாதையர் காலத்தில் இருந்து முன் நின்று உற்சாகம் தருவது றோயல் குளுக்கோஸ்.

உற்பத்தியாளர் : றோயல் இன்டஸ்றீஸ், வூல்வொண்டல் ஸ்றீற், கொழும்பு - 13.
சந்தைப்படுத்துவோர் : சிவா நறுமணப் பூங்கா,
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**பங்குதாரர்கள் தேவை**

எமது Blooming Buds பாடசாலை திறமையான நிர்வாகத்துடன் தெமட்டகொட, புத்தளம், சுதுமலை ஆகிய இடங்களில் சர்வதேச பாடசாலை, ஆசிரியர் பயிற்சிப் பாசறை, ஆங்கிலப்பேச்சு பயிற்சிப் பாசறை, சிறப்பு நிலைக் கல்விப்பயிற்சி நிறுவனம்,தொழில் வழிகாட்டல் பயிற்சிநெறி, மேலதிக வெளிநாட்டு பட்டப்படிப்பு, மேலதிக GAQ, BA பட்டப்படிப்பு போன்றன வெற்றிகர மாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும் எமது நிறுவனத்தின் புதிய கிளைகளை சுன்னாகம், சாவகச்சேரி, கிளிநொச்சி ஆகிய இடங்களில் ஸ்தாபிக்க இருப்பதால் ரூபா 5 லட்சம் முதலீடு செய்யக்கூடிய பங்குதாரர்கள் தேவை. முதலீடு செய்பவர்களுக்கு பங்கு இலாபமும் நிறுவனத்தில் நிர்வாகி பதவியும் வழுங்கப்படும். இந் நிறுவனத்தில் முதலீடு செய்ய விரும்புவோர் கீழ்வரும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

**Blooming Buds International School**
*390/2/1 Base Line Rd,*
*Dematagoda Colombo 09*
PV 94034
தொடர்புகளுக்கு: 071 566 9641/ 077 152 9731/ 0075 493 3349 /011 267 7641 / 021 225 6641

KGCC
**உள்நாடு, வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை**
அனுபவம் விரைவு நம்பிக்கை பாதுகாப்பு

3 - 5 நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்
உள்நாட்டு, வெளிநாட்டு பொதிகள் சேவைகளில் கடல் மற்றும் ஆகாய மார்க்கமான விரைவு பொதிகள் சேவையினை 25 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் முன்னணி நிறுவனத்தின் இணை நிறுவனம்.
கடல் உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் மற்றும் எண்ணெய் வகைகள் அனுப்பிடலாம்
5 Kgக்கு மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு.
PICK UP SERVICE - Door to Door உங்கள் இல்லங்களில் இருந்தவாறே பொதிகளைப் பொறுப்பேற்று உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்
Express:11Kg அனுப்பப்படும் அனைத்து பொதிகளுக்கும் விசேட விலைக் குறைப்பு:- UK 600/=, France 700/=. Germany 650/=, Italy 750/=, Swiss 800/=, Canada 950/=, Denmark 800/=, Norway 900/=
- UK, Canada, India போன்ற நாடுகளுக்கான Online Visa Application உட்பட சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து பெற்றுக் கொள்ளலாம்.
- அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்.

(C-3553)
தொடர்புகளுக்கு: **Kannathasan Global Cargo & Courier and Travels**
(DAMRO காட்சியறைக்கு அருகாமையில்) பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
Hotline:0766901516 T.P:021 222 7555 Email Id:kgccourier@gmail.com

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
சங்குநாதம்
Sankunatham
வள்ளுவர் ஆண்டு 2046 24.01.2016 தொலைபேசி : 021 222 3378
நாதம் 50



# கொள்கையை மாற்றிய கூட்டமைப்பு



# முல்லைத்தீவில் கவிப்பேரரசு

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. இறைவணக்கத்துடன் மாநாட்டை ஆரம்பிப்பம் என்று பண்டிதர் கூறியதும் விதானையார் விசுவலிங்கம் தேவாரம் பாட; மூப்பர் கிறிஸ்தவ கீதத்தைப் பாடினார்.

**பண்டிதர்:** தமிழ் மக்கள் பேரவை தயாரிக்கும் தீர்வுத் திட்டத்தால் பலருக்கும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

**விதானையார்:** அதனாலதான் தமிழ் மக்கள் பேரவையின் கழுத்தை நெரிக்கிற வேலையில சிலர் ஈடுபட்டிருந்தவியள்.வடக்கு மாகாண சபையைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் பேரவையில இருந்து முதலமைச்சர், பதவி விலக வேணும் எண்டு கோஷம் போட்டவியளாம்.

**மூப்பர்:** அவையள் கோசம் போடுவினம் தானே! கொழும்பில இருக்கிற ரிமோட்டை அழுத்த இவையள் இஞ்ச கிடந்து துடிப்பினம்.

இளம் பிள்ளைகள் பாவங்கள். தங்கட அரசியல் கட்சியில முக்கியமானவரைப் பந்தம் பிடிச்சால் தாங்கள் தொடர்ந்தும் அரசியல் ஆசனத்தில இருக்கலாம் எண்டு நினைக்கினம். என்ன செய்யிறது மக்கள் மனங்களில இடம்பிடித்தால்தான் தொடர்ந்தும் அரசியலில இருக்கலாம் என்பதை இந்தப் பிள்ளையள் அறியாமல் இருக்கினம்.

**கங்காணி:** ஏன் விதானையார் வாக்களிப்பு முடிந்து வாக்குகள் எண்ணிய பிறகு தோல்வி என்பது தெரிந்தால் வாக்குகளின்ர தொகையை மாற்றிப் பதிந்து பதவியைப் பிடிக்க முடியாதோ.

(மாநாட்டில் சிரிப்பு)

**விதானையார்:** அகப்பை பிடிக்கிற கை நம்ம கை எண்டால் அடிப்பந்தி என்ன நுனிப்பந்தி என்ன என்றொரு பழமொழி எங்கட தமிழ் மொழியில இருக்கல்லோ.

கச்சேரியில நல்ல அணைவு இருந்தால் எல்லாம் நடக்கும் எண்டு சொல்லுகினம். சில சம்பவங்கள் நடந்ததாகவும் கேள்வி.

**மூப்பர்:** இந்த வழியில பதவியைப் பெற்றால் சனங்கள் மதியாயினம் பாருங்கோ. ஏன் கூட இருக்கிற அரசியல்வாதிகளும் இவர் எப்படிப் பதவியைப் பெற்றவர் எண்டு எங்களுக்குத் தெரியாதோ என இரகசியம் பேசுவினம். இதுகளை விட்டிட்டு நேர்மையான பாதையில- மக்களின்ர ஆதரவோட பதவிக்கு வாறது நல்லது. வடக்கு மாகாண சபையில உறுப்பினர்களாக இருக்கிற எங்கட இளம் பிள்ளைகளுக்கு நான் சொல்லக் கூடியது மக்காள்! உங்களுக்கு நிறையக் காலம் காத்திருக்குது. முதலில மக்களுக்குச் சேவை செய்யுங்கள். மக்களின்ர ஆதரவைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

சண்டித்தனம்; நக்கல்; நளினம் கூட்டுச்சேர்ந்து கடிதம் தயாரிக்கிறது உந்த ஊத்த வேலையள அடியோடு கைவிடுங்க.வடக்கு முதலமைச்சருக்கு நீங்கள் பிள்ளையள் மாதிரி. பிறகேன் ஆற்றையம் கதையக் கேட்டு முதல்வருக்கு இடைஞ்சல் செய்யிறியள்.

வடக்கு முதல்வருக்கு தமிழ் மக்கள் மத்தியில நிறைய ஆதரவு உண்டு. இதைத் தெரிந்து கொள்ளாமல் அவரைக் கொச்சப்படுத்தினால் உங்கள் பெயர் பிசங்கிப் போய்விடும் கவனம். நீங்களும் எங்கட பிள்ளையள் தானே! ஏன் பொறுப்பில்லாமல் நடந்து கொள்ளுறியள்.

(மூப்பர் ஆவேசமாக உணர்ச்சிவசத்தோடு கதைக்க அதை இடைநிறுத்துவது போல வாத்தியார் வைத்திலிங்கம் குறுக்கிட்டார்)

**வாத்தியார்:** மூப்பர் நீங்கள் சொன்ன அவ்வளவும் உண்மை. வடக்கு மாகாண சபையில இருக்கிற இளம் உறுப்பினர்கள் ஒரு முஸ்லிம் உறுப்பினரோட சேர்ந்து வடக்கு முதல்வரை அவமதிக்க நினைக்கிறதென்பதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இதை எங்கட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்ர பாராளுமன்ற உறுப்பினர்கள் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருப்பதோ ஏனைய மாகாண சபை உறுப்பினர்கள் பேசாமல் இருப்பதோ அவ்வளவு நல்லதல்ல.

நான் கேட்கிறன் ஒரு முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய மாகாண சபை ஒன்றில் ஒரேயொரு தமிழ் இளைஞர் ஒருவர் உறுப்பினராக இருக்கிறார். முதலமைச்சர் உட்பட ஏனைய அனைவரும் முஸ்லிம்கள் என்றால் அந்தத் தமிழ் இளைஞர் அங்குள்ள இளம் முஸ்லிம் உறுப்பினர்களுடன் சேர்ந்து முஸ்லிம் முதலமைச்சரைக் கிண்டல் செய்ய முடியுமோ. செய்தால் வெட்டுத்தான் நடக்கும்.

ஆனால் இஞ்ச என்ன நடக்குது? அந்த முஸ்லிம் உறுப்பினர் எங்கட முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவை அவமதிக்கிறார். இதை எங்கட ஆட்கள் பார்த்துக் கொண்டிருக்கினம். இந்த இனவாதத்தை ஒருபோதும் மன்னிக்கமுடியாது.

(ஆலடி மாநாட்டில் வாத்தியார் வைத்திலிங்கம் கடுப்படைந்ததைக் கண்ட அனைவரும் அதிர்ந்து போயினர். வாத்தியார் கடுப்படைந்தால் அதன் விளைவு சாதாரணமாக முடிவதில்லை. அதாலதான் ஏதோ நடக்கப் போகுது என்ற பயம் மாநாட்டில் இருந்தவர்களைச் சூழ்ந்து கொண்டது)

**பண்டிதர்:** இந்த அநியாயத்திற்கு என்ன செய்யிறது? வாத்தியார்.

**வாத்தியார்:** பண்டிதர் இனியும் நாங்கள் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. சம்பந்தப்பட்ட முஸ்லிம் உறுப்பினர் மட்டக்களப்பில ஐக்கிய தேசியக் கட்சிய உறுப்பினர்.

எனவே அவர் எங்கட முதலமைச்சரை எதிர்ப்பதற்குள்ள ஏகப்பட்ட உள்நோக்கங்களும் சூத்திரங்களும் உள்ளன.

ஆகையால நியமன உறுப்பினராகிய அவரை கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் பதவியில இருந்து நீக்கவேணும் எண்டு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவம்.



(இப்படி வாத்தியார் சொன்னதும் ஆலடியில் இருந்த அனைவரும் எழுந்து நின்றனர். அதி முக்கியமான தீர்மானத்தை நிறைவேற்றுவதாக இருந்தால் ஆலடி மாநாட்டில இருக்கிற அத்தனை பேரும் எழுந்து நின்று தீர்மானத்தை நிறைவேற்றுகின்ற வழமை உண்டு. அந்த அடிப்படையில் தான் ஆலடி மாநாட்டில் இருந்தவர்கள் அனைவரும் எழுந்து நிற்க வாத்தியார் வைத்திலிங்கம் தீர்மானத்தை வாசித்தார்)

**வாத்தியார்:** அன்புக்குரிய முஸ்லிம் சகோதரர்களே! இங்கு நிறைவேற்றப்படும் தீர்மானம் எச்சந்தர்ப்பத்திலும் உங்களுக்கு எதிரானதல்ல. ஆனால் வடக்கு மாகாண சபையில இருக்கக்கூடிய தங்கள் இஸ்லாமிய சகோதரர் ஒருவர் எங்கள் முதலமைச்சரைப் பல இடங்களில் அவமானப்படுத்தியுள்ளதுடன் வடக்கு மாகாண சபையில் உள்ள- முதலமைச்சருக்கு எதிரான சில உறுப்பினர்களுடன் சேர்ந்து மாகாண சபையின் இயங்கு நிலைக்கு குந்தகம் விளைவிக்கின்றார் என்ற செய்தியை நீங்கள் அறியாமல் இருக்க முடியாது.

மக்களால் தெரிவு செய்யப்படாத ஒரு நியமன உறுப்பினராகிய இவர் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராகவும் இருப்பதாக அறியமுடிகின்றது.

இத்தகைய உறுப்பினர்களின் செயற்பாடுகள் தொடருமாயின் அது தமிழ் முஸ்லிம் சகோதரர்களின் ஒற்றுமைக்குப் பங்கமாக அமையும் எனக் கருதுகின்றோம்.

ஆகையால வடக்கு மாகாண சபையில் இருக்கக்கூடிய குறித்த முஸ்லிம் உறுப்பினரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் பதவி நீக்கம் செய்யவேண்டும் என்ற தீர்மானத்தை இங்கு நிறைவேற்றுகிறோம்.

(வாத்தியார் தீர்மானத்தை அறிவித்ததும் எழுந்து நின்ற ஆலடி மாநாட்டு உறுப்பினர்கள் கையை உயர்த்தி தீர்மானத்தை நிறைவேற்றுவோம். தீர்மானம் நடந்து முடியட்டும் என்று கோசம் எழுப்பி அமர்ந்தனர்)

**பண்டிதர்:** மேற்குறித்த தீர்மானத்தை சம்பந்தர் ஐயா நிறைவேற்றத் தவறினால் தமிழ்மக்கள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம் என்பவற்றை மேற்கொள்ள வேணும். இனியும் அந்த முஸ்லிம் உறுப்பினர்களின் அட்டகாசத்தை தமிழ்மக்கள் அனுமதிக்க முடியாது.

**கங்காணி:** முதலமைச்சருக்கு எவரும் இடைஞ்சல் கொடுக்கக்கூடாது என்ற கோரிக்கையை முன்வைத்து மீசாலையைச் சேர்ந்த நாகேந்திரன் துஷாந் என்ற இளைஞர் 22.01.2016 அன்று ஒருநாள் அடையாள உண்ணா விரதப் போராட்டத்தை நடத்துகிறார்கள். அந்த இளைஞனின் உணர்வை எவரும் அலட்சியம் செய்து விடக்கூடாது.

முதலமைச்சருக்கு எவரும் இடைஞ்சல் செய்யக் கூடாது எனக் கோரி தனிமனிதனாக உண்ணாவிரதம் இருக்கிற அளவில் முதலமைச்சருக்கு இனியும் யாரும் இடைஞ்சல் செய்தால் அதன் விளைவு என்னவாக இருக்கும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து தங்களைத் திருத்திக்கொண்டால் எல்லாம் நல்லதாக நடக்கும்.

இப்படி கங்காணி கூற ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் அதனை ஆமோதிப்பது போல ஒலிக்க மாநாட்டில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# தமிழ் மக்கள் பேரவையால் முடிவை மாற்றிய கூட்டமைப்பு



குருஷேத்திரம்

நீ எதை நினைக்கின்றயோ அதுவாகவே நீ ஆகிவிடுகிறாய் என்ற தத்துவம் சாதாரணமானதல்ல. எப்போதும் நல்லதை நினைக்கின்ற; நல்லதை எண்ணுகின்ற; நல்லதைச் செய்கின்ற சிந்தனைகள் எங்களை நன்னிலைக்குக் கொண்டு செல்லும்.

போட்டியும் பொறாமையும் எதிர்ப்புக் குணமும் தனக்கும் பிறர்க்கும் அழிவைத் தந்து மனித வாழ்வை அர்த்தமற்றதாக்கிவிடும்.

ஆகையால் எப்போதும் நல்லது செய்வதை நினைப்பதே எல்லோருக்கும் நன்மை தரும்.

கடந்த 19.12.2015 அன்று தமிழ்மக்கள் பேரவை என்ற மக்கள் அமைப்பு உதயமாகியதைத் தொடர்ந்து எங்கும் பேரவை பற்றிய பேச்சாக இருக்கிறது.

தமிழ்மக்கள் மத்தியிலும் புலம்பெயர் உறவுகளிடமும் பேரவைக்கு மிகுந்த ஆதரவு கிடைத்திருக்கிறது. இருந்தும் மிகச் சிலர் பேரவையை காரண காரியமின்றி எதிர்த்தனர்.


இந்த எதிர்ப்பில் ஈடுபட்ட பலர் பேரவையின் கொள்கை கண்டு தங்களை மாற்றிக்கொண்டதும் உண்டு.

மனம் திருந்தாத மனிதர்கள் இன்னமும் இருக்கிறார்கள் என்பதை நிரூபிப்பதாக ஒரு சிலர் தொட ர்ந்தும் பேரவைக்கு எதிரான கருத்துக்களை முன்வைத்துக் கொண்டேயிருக்கின்றனர். இவர்களும் இல்லையென் றால் பேரவையின் வளர்ச்சி பாதிக்கப்பட்டுவிடும் என்பதும் உண்மைதான். ஆகையால் எதிர்வாதம் வேண்டும் என்பதையும் நாம் புறந்தள்ளி விட முடியாது.

எதுவாயினும் தமிழ் மக்கள் பேரவையில் வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் இணைத் தலைவராக இருப்பதால் அவருக்கு எதிராகத் தீர்மானம் எடுக்கவேண்டும் என்ற வாதம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் நுழைந்தது உண்மையே.

அதிலும் குறிப்பாக முதலமைச்சர் விக்னேஸ்வரனை பல சந்தர்ப்பங்களில் எதிர்த்தவர்கள் இதனைத் தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு வடக்கின் முதல்வரை பதவியில் இருந்து நீக்க வேண்டும் எனக் கங்கணம் கட்டிக் கொண்டனர்.

இதற்காக வடக்கு மாகாண சபையில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தத் திட்டம் தீட்டப்பட்டது.



எங்கள் முதலமைச்சர் எங்களோடு இருக்கவேண்டும் என்ற கோசத்தை எழுப்பி பேரவையில் இருந்து முதல்வரை நீக்குவதற்கான முயற்சிகள் தொடங்கப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநாடு கிளிநொச்சியில் நடக்கும்போது அங்கு வைத்து சம்பந்தர் மூலம் முதலமைச்சர் விக்னேஸ்வரனை எதிர்ப்பதே இவர்களின் திட்டம். இத்திட்டத்தை நிறைவேற்றும் பணியில் வடக்கு மாகாண சபையின் ஒரு சில இளம் உறுப்பினர்களும் கொழும்பில் உள்ள ஒரு முக்கிய புள்ளியும் ஈடுபட்டனர்.

இதற்கு வடக்கு மாகாண சபையின் முக்கிய உறுப்பினர் ஒருவரும் மறைமுகமாகத் தனது ஆதரவை வழங்கி வந்தார்.

19.01.2016 அன்று சுவிட்சர்லாந்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் நடந்த கருத்தரங்கொன்றில் பங்குபற்றிய வடக்கு மாகாண சபை உறுப்பினர்களில் சிலர் 20.01.2016 இல் தம்மை முதலமைச்சர் சந்திக்க வேண்டும் என்ற கடிதம் ஒன்றைத் தயாரித்து ஒழுங்கற்ற முறையில் உறுப்பினர்களின் கையொப்பங்களைப் பெற்று முதல்வரிடம் கொடுத்தனர்.

உறுப்பினர்களின் கோரிக்கைக்கு அமைய 20.01.2016 அன்று மாலை 5.30 மணியளவில் முதலமைச்சர் கூட்டத்தை நடத்தினார்.

வடக்கு மாகாண சபையின் இளம் உறுப்பினர் ஒருவர் எழுந்து நின்று பேரவையில் இருந்து முதலமைச்சர் விலக வேண்டுமென கோசமிட்டார்.

முதலமைச்சரின் பதில் அனைவரையும் அமைதி கொள்ள வைத்தது. இந்த அமைதிக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சிவாஜிலிங்கம், சிவநேசன் (பவன்) ஆகியோரின் உரைகளும் உதவி புரிந்தன.

இதைவிட முதலமைச்சருடன் அதிகம் முரண்பட வேண்டாம் என்ற உத்தரவுகள் கொழும்பில் இருந்து வந்ததாகவும் தகவல்.

எதுவாயினும் 20.01.2016 இல் வடக்கு மாகாண சபையின் ஆளுந்தரப்பு உறுப்பினர்களுக்கும் முதலமைச்சர்களுக்குமிடையிலான சந்திப்பு சுமுகமாக நடந்து முடிந்தது.

விடிந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநாடு கிளிநொச்சியில் நடக்க ஏற்பாடு.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் முதல்வர் விக்னேஸ்வரன் மீது கடும் கோபம் கொண்டிருப்பார் என்பது பலரதும் எதிர்பார்ப்பு.

ஆனால் பழுத்த அரசியல்வாதியான சம்பந்தர் பேரவை தொடர்பில் கடும் போக்குக் கொண்டால் அது கூட்டமைப்பிற்கு பேராபத்தைத் தரும் என்ற உண்மையை உணர்ந்திருந்தார்.

அதனால் பேரவை தொடர்பில் மாநாட்டில் எதுவும் கதைத்திலர். அவரைப் பொறுத்தவரை முதல்வர் விக்னேஸ்வரன் அவர்கள் கிளிநொச்சியில் நடக்கும் கூட்டமைப்பின் கூட்டத்திற்கு வருகை தந்தால் அதுபோதும் என்பதாக இருந்தது.

வடக்கின் முதல்வர் கூட்டத்திற்குவராமல் இருந்தால் அது பேரவையின் எழுச்சிக்கு வழிவகுத்து விடும் என்றுணர்ந்த சம்பந்தர் எப்படியும் முதல்வர் விக்னேஸ்வரனை கூட்டத்திற்கு அழைக்க வேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தார். சம்பந்தருக்கு மதிப்பளித்து முதல்வர் விக்னேஸ்வரன் மாலை 4 மணியளவில் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

இரண்டே மணித்தியாலங்கள் மட்டுமே முதல்வர் விக்னேஸ்வரனின் பிரசன்னம் இருந்ததாயினும் அது இரா.சம்பந்தருக்கு மிகுந்த ஆறுதலையும் திருப்தியையும் கொடுத்திருக்க வேண்டும்.

## அதிரடியான அறிவிப்பு

கிளிநொச்சிக் கூட்டம் முடிந்ததும் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை சம்பந்தர் நடத்தினார். இங்குதான் தமிழ்மக்கள் பேரவையை அவர் உச்சரித்தார். தமிழ்மக்கள் பேரவை, மக்கள் அமைப்பு என்ற வகையில் அதனை நாம் வரவேற்க வேண்டும். பேரவையால் தயாரிக்கப்படும் அரசியல் தீர்வுத் திட்டவரைபு எங்களிடம் தரப்பட்டால் அது தொடர்பில் நாம் ஆராயவேண்டும் என்று குறிப்பிட்டார்.

இஃது எவரும் எதிர்பார்க்காத ஒரு அறிவிப்பு தமிழ் மக்கள் பேரவை தொடர்பில் தொடர்ச்சியாக எழுதி வந்த ஊடகங்களுக்கு விழுந்த பேரிடி.

அந்தோ கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் பேரவையை கடுமையாகத் தாக்குவார் என்று எதிர்பார்த்தவர்களுக்கு அவரின் அறிவிப்பு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

அதேவேளை சம்பந்தரின் மேற்போந்த அறிவிப்பு வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரனை தனது நல்ல நட்பாக- உறவாக அரசியல் தீர்வில் பேருதவி புரியக்கூடியவராகப் பயன்படுத்தவுள்ளார் என்ற செய்தியையும் சொல்லி நிற்கிறது.

இதற்கு மேலாக தன்னுடன் நெருங்கி நின்ற சிலரை அவர் எட்டவைக்க நினைக்கிறார் என்பதும் புரிகிறது.

இந்த முடிவுகளின் பின்னணிக்குக் காரணம் , சம்பந்தரின் பழுத்த அரசியல் அனுபவமா? அல்லது அண்டை நாட்டின் ஆலோசனையா? அல்லது இரண்டும் இணைந்ததான திருவருளின் திருவிளையாட்டா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

தமிழ்மக்கள் பேரவை தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் கூறிய கருத்துக்கள் அரசியல்வாதிகளுக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருந்தாலும் அதற்கு மேலாக சமஷ்டி, சுயாட்சி என்ற தீர்வுகளையே கூட்டமைப்பு ஏற்கும் என்று சாரப்பட சம்பந்தர் விடுத்த அதிரடியான அறிவிப்பு பலரையும் பேரதிர்ச்சிக்கு ஆளாக்கிவிட்டது.

ஒற்றையாட்சியை ஏற்று 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்திற்கு உட்பட்டு தீர்வு அடையப்படும். இதைக் கூட்டமைப்பு ஏற்கும் என்ற உண்மைகள் இருந்த போதிலும் கிளிநொச்சியில் வைத்து சம்பந்தர் சமஷ்டி என்று பொருள் பட கூறியதற்கு, தமிழ்மக்கள் பேரவையின் உதயமே முழுக்காரணம் என்றால் அதில் எந்தத் தவறும் இருக்க முடியாது.

விதுரன்




# எத்தனுக்கு எத்தன்!



பொன்னியூர் என்ற ஊரில் ஜனா, சுருதி என்ற இரு நண்பர்கள் இருந்தனர். அவர்கள் சிறுபராயத்திலிருந்தே இணைபிரியாத நண்பர்கள். ஜனா திறமையாகச் சம்பாதித்துக்கொண்டு வருவான். சுருதி அதை வாங்கி நிம்மதியாகச் சாப்பிடுவான்.

உள்ளூரில் பஞ்சம் ஏற்பட்டது. வருமானம் பொருட்களை வாங்குவதற்கு கட்டுப்படியாக வில்லை. ஆதலால் வெளியூர் சென்றுவியாபாரம்செய்துபிழைக்க இருவரும்முடிவுசெய்தனர்.

இருவரும் குதிரையில் ஏறிக்கொண்டு பல ஊர்களையும் கடந்து ஏமலூர் என்ற ஊரை அடைந்தனர். ஊர் எல்லையில் உள்ள சத்திரம் ஒன்றில்தங்கினர். ஜனாசாப்பிட்டுவிட்டுப்படுத்துக் கொண்டு, "சுருதி! நான் இங்கே சற்று ஓய்வெடுக்கிறேன். நீ ஊருக்குள் சென்று வியாபாரம் செய்துவிட்டு வா!" என்று கூறி நண்பனை அனுப்பி வைத்தான்.

சுருதி, மிகவும் வெகுளி. யார் எதைச் சொன்னாலும் நம்பி ஏமாந்துவிடுவான். இக்கட்டில் மாட்டிக்கொண்டு விழிப்பான். இருந்தாலும் வியாபாரம் செய்வதற்காக அவனிடம்தான் காசு இருந்தது.

ஆயிரம்பொற்காசுகளைகுதிரையின்சேணத்தில் மறைத்துக்கொண்டு குதிரையில் ஏறி நகரத்தை நோக்கிச் சென்றான்.

ஊருக்குள் சென்றதும் வீதியில் எதிரே ஒருவன் வந்தான் "இந்தக் குதிரை விலைக்குக் கிடைக்குமா?" என்று கேட்டான்.

"விலைக்குத் தரத் தயார். விலை மிக அதிகம். உன்னால் கொடுக்க முடியுமா? நீஎன்ன தொழில்செய்கிறாய்?" என்றுவினவினான்சுருதி.

"என் பெயர் வில்லன். ஆடுகளை வெட்டி இறைச்சி விற்கும் கசாப்புக்கடை நடத்துகிறேன். விலையைக் கூறு?" என்றான் வில்லன்.

"இதன் விலை ஐந்நூறு பொற்காசுகள்! என்றான் சுருதி."

"உயர்தரமான அரேபியக் குதிரைகளே இருநூறு பொற்காசுகளுக்குக் கிடைக்கின்றன. உன் குதிரை பெரிய அதிசயக் குதிரையா? சரி பரவாயில்லை. இதோ நீ கேட்ட ஐந்நூறு பொற்காசுகள். குதிரையைக் கொடு" என்றான். ஐந்நூறு பொற்காசுகளை எண்ணியும் கொடுத்தான் வில்லன்."

பொற்காசுகளைப் பெற்றுக்கொள்வதாற்காக சுருதி, குதிரையைவிட்டு இறங்கினான். பணத்தை எண்ணிப் பார்த்துக்கொண்டான். பிறகு குதிரையின் சேணத்தில், தான், வைத்திருந்த பணப்பையை எடுக்கச் சென்றான்.

"இந்தக் குதிரையைப் பணம் கொடுத்து வாங்கிவிட்டேன். இப்போது குதிரை எனக்குச் சொந்தம். குதிரையோடு உள்ள பொருட்கள் யாவும் எனக்கே சொந்தம் "என்று கூறிவிட்டு குதிரைமேல் ஏறிச் சென்றுவிட்டான் வில்லன்.

ஆயிரம் பொற்காசுகளை இழந்த சுருதி மிகுந்த ஏமாற்றத்துடன் சத்திரத்துக்கு வந்து நண்பனிடம் நடந்தவற்றைக் கூறினான். அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அவனுடைய சோகக் கதையைக் கேட்ட ஜனா, ஏளனமாகச் சிரித்து, "இந்த ஊரினர் பயங்கர எத்தர்களாக இருப்பர் போலும். இருக்கட்டும். உன்னிடம் குதிரையை வாங்கியவனின் பெயர் என்ன" என்று கேட்டான் ஜனா.

"கசாப்புக்கடை வில்லன்!" என்றான் சுருதி.

உடனே நண்பனிடம் இருபத்தி ஐந்து பொற்காசுகளை வாங்கிக்கொண்டு வில்லனின் கசாப்புக்கடையின் முன்பாக போய் நின்றான் ஜனா. கடையில் நான்கைந்து ஆட்டுத்தலைகள் தொங்கிக் கொண்டிருந்தன. கடைத் திண்டில் வில்லனின் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தன.

"ஒரு தலையின் விலை என்ன?" என்று கேட்டான் ஜனா.

"ஒருதலை ஒரு பொற்காசு."

"எத்தனை தலைகள் வேண்டுமானாலும் கிடைக்குமா?"

"ஆகா... தாராளமாகக் கிடைக்கும்!"

"இதோ இருபத்தி ஐந்து பொற்காசுகள். இருபத்தி ஐந்து தலைகள் கொடு!"

"இப்போ இங்கே இருக்கும் தலைகளை எடுத்துப் போ. மீதியை நீ இருக்குமிடத்தைச் சொல். அங்கே அனுப்பிவைக்கிறேன்."

"அதெல்லாம் முடியாது. இங்கு தொங்கும் தலைகளுடன் கடையில் உள்ள உன்குழந்தைகளின் தலையையும் வெட்டிக் கொடுக்க வேண்டும். தலைகள் என்றுதான் பேசினோம். ஆட்டுத் தலைகள் என்று கூறவே இல்லை. எனக்குக் குழந்தைகளின் தலைகளையும் கொடுக்க வேண்டும்!" என்றான்.

கசாப்புக்கடைக்காரன் அதிர்ச்சியில் நடுங்கினான். இவன் நம்மைவிடக் கில்லாடியாக இருக்கிறானே! எக்கச்சக்கமாக வாக்குக் கொடுத்து வசமாக மாட்டிக்கொண்டோமே! என்று மிகவும் புதறிப்போனான்.

"ஐயா! ஏதோ முட்டாள்த்தனமாக வாக்குக் கொடுத்துவிட்டேன். மன்னித்துக்கொள்." என்று கெஞ்சினான்.

"சேச்சே... நீ கூறுவது எதையும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. முதலில் தலைகளைக் கொண்டுவா!" என்று கடுமையாகக் கூறினான் ஜனா.

அப்போது, தான் காலையில் குதிரையை ஏமாற்றி வாங்கியது நினைவிற்கு வந்தது வில்லனுக்கு. ஏமாந்தவனின் நண்பன் இவன் என்பதை தெரிந்துகொண்டான். இவனிடம் தனது ஜம்பம் பலிக்காது என்பதைப் புரிந்துகொண்டு...

"ஐயா! என்னை மன்னித்து விடுங்கள். வெளியூர்க்காரர்தானே என்று நினைத்து குதிரைக்காரரான உமது நண்பரை ஏமாற்றிவிட்டேன். குதிரையையும் சேணத்தில் இருந்த ஆயிரம் பொற்காசுகளையும் தந்துவிடுகிறேன். என்னை இத்துடன் விட்டுவிடுங்கள்" என்று மன்றாடினான்.

சரியெனச் சம்மதித்து குதிரை மற்றும் பணப்பையுடன் ஜனா, சத்திரத்திற்குத் திரும்பினான். நண்பனின் ஆற்றலை எண்ணி வியந்த சுருதி, தானும் ஜனாவைப்போல் புத்திசாலியாக மாறத் தீர்மானித்தான்.

# இரு சூரியன்களுடன் கிரகம் – கெப்லர் 453b

விஞ்ஞானிகள் அண்மையில் இரண்டு சூரியன்களை உடைய புதிய ஒரு கிரகத்தை கண்டுபிடித்துள்ளனர்.

ஸ்டார் வோர்ஸ் ஆங்கிலத் திரைப் படத்திலும் கூட இரண்டு சூரியன்களையுடைய ஒரு கிரகமாகவே டாட்டுயூன் காண்பிக்கப்படுகிறது. இது படக்குழுவின் ஒரு நம்பிக்கையிலான கற்பனை மட்டும்தான்.

ஆனால், நிஜத்தில் இரண்டு நட்சத்திரங்களையுடைய கிரகம் கெப்பலர் 453b இப்பொழுது விஞ்ஞானிகளால் கண்டு பிடிக்கப்பட்டிருப்பது மகிழ்சிதரும் விடயமாகும்.

இது விஞ்ஞானிகளால் கண்டு பிடிக்கப்பட்ட பத்தாவது புதிய கிரகம். ஒரு நட்சத்திரத்தைக் கொண்ட கிரகங்கள் பற்றிய அமைப்பைக் கற்றுக்கொள்ள பூமி எப்படி ஆதாரமாகவுள்ளதோ அப்படி இந்த 453b பற்றிய ஆய்வு, ஒன்றுக்கு மேற்பட்ட சூரியன்களைக் கொண்ட கிரகங்களின் ஒரு பொதுவான அமைப்புப் பற்றிக் கற்றுக்கொள்ளக் கூடிய தகவல்களை வழங்கக் கூடியதாக இருக்கலாம் என்று வானியல் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

சோடி நட்சத்திரங்களையோ அல்லது பல நட்சத்திரங்களையோ கொண்ட கிரகங்கள் இருக்கலாம் என்று நீண்டகாலமாகவே விஞ்ஞானிகள் அறிந்திருந்தார்கள். இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்ட கிரகம் பல நட்சத்திரங்கள் உடையதாக அமைந்திருந்தால் இனும் வியப்பாக அமைந்திருக்கும்.


கெப்லர் விண்வெளித் தொலைக்காட்டியின் வரவுக்குப்பின்னர், வானியலாளர்கள், எமது சூரியக் குடும்பத்துக்கு வெளியே காணப்படுபவற்றை ஆய்வு செய்வதற்கான கருவிகளைப் பெற்றார்கள்.

அந்தப் புதிய கண்டுபிடிப்பான 453b எமது சூரியக் குடும்பத்துக்கு வெளியே உள்ள கிரகமாகும். இது பூமியிலிருந்து 1400 ஒளியாண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது. இது இரண்டு சுற்றுப்பாதைகளில் இயங்குகிறது. ஏனெனில் இதற்கு இரண்டு நட்சத்திரங்கள் (இரண்டு சூரியன்கள்) உள்ளன. அவையிரண்டையும் இது சுற்றுவதால் இரண்டு சுற்றுப்பாதைகளைக் கொண்டதாக அமைகிறது. இவ்வாறு இரண்டு சுற்றுப்பாதைகளிலான கோள்களின் இயக்கத்தை சுற்று இருமை இயக்கம் என்று அழைக்கப்படுகிறது.

இரண்டு நட்சத்திரங்களில் ஒன்றை, மற்றொன்று சுற்றிவருவதை அவானித்துக் கொண்டிருக்கையில்தான் இந்த புதிய கோளான 453b ஐ விஞ்ஞானிகள் கண்டு பிடித்தனர்.

அதாவது, சில சமயங்களில் அந்த நட்சத்திரங்களிலிருந்து வரும் ஒளியானது மங்கலடைந்து சென்றது (குறைவடைந்து சென்றது). இவ்வாறு திடீரென ஒளி குறைவடைவதற்கான காரணம் அந்த நட்சத்திரங்களுக்கு முன்னால், ஏதோவொன்று சென்றிருக்க வேண்டும். (மறைத்திருக்கவேண்டும்) அந்தக் கேள்விக்கு கிடைத்த விடைதான் கெப்லர்453b என ஹவாய் பல்கலைக் கழகத்தின் வானியல் ஆய்வாளர் ஹைஜ்ஜிப்பூர் தெரிவிக்கிறார்.




அவர், இதுபற்றிய விபரங்களை சர்வதேச வானியல் பொதுச்சங்கத்தில் (ஹவாயில்) கடந்தவருடம் ஆகஸ்ட் 14 ல் பகிர்ந்துகொண்டுள்ளார்.

மேலும், "அதிர்ஷ்டவசமாக அந்தக் கிரகத்தின் இருப்பை நாம்தெரிந்துவிட்டோம். சரியான நேரத்தில் அந்த நட்சத்திரங்கள் மங்கலடையும் அந்தச் சந்தர்ப்பத்தை கவனிக்கத் தவறியிருந்தால் இந்த சுற்று இருமை உள்ள கிரகத்தை நாம் தவறவிட்டிருப்போம்" என்று ஹைஜ்ஜிபூர் தெரிவித்திருந்ததோடு, தாங்கள் அறியத் தவறிய இன்னும் பல அமைப்புகள் வானவியலில் இருக்கலாம். அத்தோடு இத்தகைய கிரகங்களை கண்டு பிடிப்பதற்கான வழிமுறைகளை அறிந்து கொள்வது, வானியலாளர்கள் அடுத்த படியாகச் செய்யவேண்டிய வேலை.

இக்கிரகங்கள் பாரியகிரகங்களாக இருக்குமானால் அவற்றின் ஈர்ப்புத் தன்மை சட்சத்திரங்களின் சுற்றுப் பாதையை நிச்சயம் பாதிக்கும். இந்த வகையிலும் இவற்றைக் கண்டுபிடிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

கெப்பலர் 453b அதன் நட்சத்திரத்திலிருந்து அதிக தூரத்தில் இருப்பதால் அது, ஏனைய வெளிக்கிரகங்கள் போலல்லாது, ஒரு வாயுக்கிரகமாக இருக்கலாம். அங்கே அதிக சூடோ அதிக குளிரோ கூட காணப்படாமல் மித மானதாகவும் இருக்க லாம். ஆனால், இது கட்டாயம் சந்திரனை (நிலவை) கொண்டிருக்கலாம். அந்த நிலவு, உயிர்கள் வாழ்வதற்கு ஏதுவான அம்சங்களைக் கொண்டிருக்க வாய்ப்புள்ளதாகவும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர் ஆய்வாளர்கள்.




தமிழில் -பாமா






## வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள், இல.3,2 ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532




நடிகர் விஷாலின் அக்ஷன் எப்படி?

யாழ்ப்பாண கலாசாரம் வெளிநாட்டுப் பெண்களால் தான் காப்...

விஜயின் தெறி வெற்றி பெறுமா?

**அகிலன் — கனகராயன்குளம்**

ஐயா காதலிக்கும் மனைவிக்கும் என்ன வித்தியாசம்?

காதலி என்பது கரடியை நாங்கள் பிடிப்பது போன்றது. எப்ப வேண்டுமானாலும் விட்டு விட்டு வெளியேறலாம். மனைவி என்பது கரடி நம்மை பிடிப்பது போன்றது. கரடியா விட்டாலே தவிர ... ம்ம்ம் ... முடியாது. விளக்கம் போதுமா ராசா?

**இன்பா — சுழிபுரம்**

தானங்களில் சிறந்த தானம் எது?

சிலர் கண் தானம் என்பார், பலர் அன்னா தானம் என்பார், இன்னும் சிலர் இரத்ததானம் என்பார். என்னைப் பொறுத்தவரை மற்ற வருக்கு உதவி என்ற பெயரில் உபத்திரம் கொடுக்காமல் இருப்பதே மிகப்பெரிய தான மாகும். 60 ரூபாய் பெறுமதியுள்ள ஒரு கிலோ அரிசியைக் கொடுத்துவிட்டு 1000 ரூபாய் செலவு செய்து பேப்பரில் போடுவதை முதலில் நிறுத்துங்கடா.

**சாரு — யாழ்ப்பாணம்**

பெண்களுக்கு உண்மையாக காதலிக்கத் தெரியாதா?

தெரியும். ஆனாலும் ஆண்கள் அனைத்திலும் முந்திரிக்கொட்டை போல முந்திவிடுவார்களே... சாவிலும் கூட...

**கமல் — நெல்லியடி**

நான் தவறு செய்து திருந்திவிட்டேன். ஆனால் என்னை யாரும் நம்புகிறார்கள் இல்லையே?

அது உன் மனதிற்கு தெரிந்தால் போதும். நீ ஒன்றும் மற்றவர்களுக்காக வாழவில்லையே. எனது இதயம், எனது கை, எனது கால், எனது வாய் இப்படி உன்னில் உள்ள எல்லா வற்றையும் எனது எனச் சொல்லும் நீ வாழ்க்கையை மட்டும் ஏன் மற்றவருக்காக வாழ வேண்டும். வாழ்க்கை உன்னுடையது. அதைப் புரிந்துகொள் எல்லாம் சரிவரும்.

**வானுஜா — யாழ்ப்பாணம்**

விஜயின் தெறி வெற்றி பெறுமா?

புலியின் தோல்வியை ஈடு செய்ய விஜயும் ராஜா ராணி வெற்றியுடன் அடுத்த வெற்றியை ருசிக்க அட்லியும் கடுமையாக உழைக்கிறார்கள். சமீப காலத்தில் விஜயின் படங்களில் சில சறுக்கல்கள் அதை எல்லாம் ஒன்றாய் ஈடு கட்டிவே தெறி ரெடி ஆகிறது.



**கோபு — திடலூர்**

மாணவர்களைப் படிக்கவிடாமல் சத்தமாகப் பாட்டுப் போடுபவர்களை என்ன செய்ய?

கட்டி வைத்துப் பத்துக் கட்டெறும்பைக் காதுக்குள் விட்டால் திருந்துவார்கள். சமூக அக்கறை எனக் கூறிக் கொண்டு கோயில்களில் சத்தமாய்ப் பாடல்களைப் போடுவர்களுக்கு இன்னும் பத்து எறும்புகளை அதிகமாக விட்டால் எல்லாம் சரியாகிவிடும்.

**மதீசன் — நல்லூர்**

2016-ல் தமிழரின் பிரச்சினை தீருமா வியாசரே?

ஐயா தலைவர்களே! தமிழர் நாங்கள் ஒன்றும் பஞ்சுமிட்டாய்க்கு அழும் பிஞ்சுக் குழந்தை களில்லையையா. முதலில் அதைப் புரிந்து கொள்ளுங்கள். நல்லூர் திருவிழாவில் விளையாட்டுச் சாமனுக்கு அழும் குழந்தையிடம் அடுத்த வருடம் வாங்கித்தருகிறேன் எனச் சொல்லும் தாய்போல எங்களை ஏமாற்றிவிடலாம் என்று மட்டும் தயவுசெய்து நினைத்து விடாதீர்கள்.



"எங்க அம்மா முகத்துல பூச்சிமருந்தை அடிச்சியாமே.. ஏன்டா..!?

"அவங்க, கண்ணுல பூச்சி பறக்கறாப்புல இருக்குன்னு சொன்னாங்க.. அதான்..."

### அன்பு வாசகர்களே!

நீங்களும் வியாசர் பகுதிக்கு உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள். அரசியல், ஆன்மீகம், சமூகம், பொழுதுபோக்கு சார் கேள்விகளை மிக சுருக்கமாக உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பி வையுங்கள்.

குறுந்தகவல் (SMS) 021 567 1532

**பானு — கிளிநொச்சி**

நடிகர் விஷாலின் அக்ஷன் எப்படி?

ஆறடி உயரம் அதற்கேற்ப உடல் வாகை என அதிரடிக்கு ஏற்ற ஆள். பத்துப்பேரை அடிக்கிறார் என்றால் நம்பக்கூடியதாய் இருக்கும் கதகளியில் அக்ஷனில் கதகளி ஆடியிருக்கிறார்.

**கிருஷா — வரணி**

யாழ்ப்பாண கலாசாரம் வெளிநாட்டுப் பெண்களால் தான் காப்பாற்றப்படும் போல?

வெளிநாட்டுப் பெண்கள் சேலையுடுத்து கோலம் போட்டு கரும்பு கட்டி எம் பாரம்பரிய பொங்கலைப் பொங்க எங்கள் பெண்களோ பொங்கலைப் புறக்கணித்து அறைக்குள் இருந்து அரட்டை அடிக்கிறார்கள் எல்லாம் காலக் கொடுமையே.

**சமீதரன் — நயினாதீவு**

தைப்பொங்கல் எப்படி?

எல்லாம்வல்ல பரம்பொருளே! இந்த வருட மேனும் தமிழர் எம் தலைவிதி மாறி நிம்மதியும் சமாதானமும் நிலைக்க அருள்புரிவாய் என எண்ணிய படியே பொங்கல் பானை அடுப்பில் ஏற்றப்பட்டது. இப்படி பல வருடங்கள் பல பொங்கல் பானைகள் ஏற்றப்பட்டன பொங்கல் பொங்கியது தமிழர் வாழ்வு பொங்க வில்லையே.

**அரவிந்தன் — கோண்டாவில்**

தாயென்பவள்?

தன்பிள்ளைக்கு மட்டும் தாயாய் இருக்காமல் தன் சுற்றத்தில் உள்ள அனைவரையும் தன் பிள்ளைகளாய் மதிப்பவளே உண்மையான தாய் என்ற உன்னத பேற்றை அடைகிறாள். அதைவிடுத்து ஐந்து விரல்களில் பெரிதாக இருக்கும் நடுவிரலையும் அடுத்து இருக்கும் மோதிரவிரலையும் அணைத்துக் கொண்டு மற்றைய விரல்களை வெறுத்தொதுக்குபவள் தாய் அல்ல அதற்கு வேறு பதம் இருக்கிறது.

**வே.அகிலேஸ்வரன் — மருதங்கேணி**

முத்தத்தின் வகைகள் எத்தனை?

ஆழ்கடலிலே நன்றாக நீந்தக் கூடியவன் ஒருவனை நீந்துவது எப்படி என்று எழுதும் படி கேட்டார்களாம். அதற்கு அவன் சொன்னான் எனக்கு நீந்தத் தெரியுமே தவிர நீந்துவது எப்படி என எழுதத்தெரியாதென.

**வன்னிமகள்**

சாதிப்பிரிவினை பற்றி?

மிருகங்களுக்கு ஐந்தறிவு எனச் சொல்லும் மனிதனுக்கு நான்கறிவுகூட இல்லை என்பதை நிரூபித்துவிட்ட செயல்.

# கவிதைக் கலசம்



## கந்தா! கதிர்வேலா!

நம்பி நம்பி
நாங்கள் உங்களுக்கு
நம்பி நம்பி ஓட்டுப்போட
வம்பும் வஞ்சனையும்
வரம்பு மீறும் பேச்சும்
விதண்டாவாதச் செயலோடு
பஞ்சும் தலையணையும் போட்டு
பகட்டுலகில் வாழ்ந்து கொண்டு
கஞ்சிக்கே வழியில்லா எம்மை
கடுகாய் வறுக்கிறீரே

மாவை. நா.கஜேந்திரன்

## தலைத்தீவில் தண்ணீர் பஞ்சம்

நிலவு வந்து முகம் பார்க்க
நீரில்லை எங்கள் ஊரிலே
நான்கு பக்கம் நீர் கொண்ட
தீ வென்ற பெயரினிலே...
நேற்றிறைத்த தொட்டியைச் சுற்றி
நிறைகுடம்- அதை
நேர்ந்து விட்டதைப்போல்
நிரல்களாய் வைத்திருக்கு
எங்கள் உறவுகள்
காலியான குடத்தை
காலையிலே காட்சிப்படுத்த
சபிச்சது யாரோ?
எங்க ஊருக்கு
அது எங்க காலைக்கடனில்
ஒன்றாய் ஆகிடிச்சு
குலசாமி முன்றலிலே
முன்வரிசையை முத்தமிட
குடங்களுக்குள் நித்தம் சண்டை
குலசாமி கண்திறந்தால்
குடிநீருக்கு குறையுமில்லை
தலைத்தீவில் தண்ணீர் பஞ்சம்
என்ற தலைவிதியை சுமக்கின்றோம்
எம் பாரத்தைப் போக்கிடவே
அந்தப் பரந்தாமன் எழவேண்டும்

ஸ்ரீயோதா
மண்டைதீவு

## விஞ்ஞானமே உதவமாட்டாயா?

கருவறையில் அவன் இருந்தான்
கர்ப்பமாக நான் இருந்தேன்
அவ்வறையில் வைத்தே அவன்
அழகை நான் இரசித்தேன்
அவன் உடலில் உயிர் உண்டு
உடல் நலமோ குறைவில்லை
அங்கங்களோ குறைபாடில்லை
ஆரோக்கியத்தில் குறையுமில்லை
ஒவ்வொரு மாதமும் போய்
அவன் அழகைப் பார்த்தேன்
ஒழுங்காக ஸ்கானிங்
அகமகிழ்ந்து நான் இருக்க
அவதரித்த என் மகனோ-இன்று
சிறைபிடித்துச் சென்றவர்கள்
சிதைத்தார்களோ? வதைத்தார்களோ?
அவன் உயிரை எடுத்தார்களோ?
உடல் நலத்தைக் குறைத்தார்களோ
என் மனதை வாட்டுகின்றாய்...
எடுத்துரைப்பாய் விஞ்ஞானமே
கருவறையில் என் மகன் இருக்கும்போது
காட்டி என்னை மகிழ்வித்தாய்
எவ்வறையில் அவன் இருப்பான், எனக்கு
எடுத்துரைக்க மாட்டாயோ விஞ்ஞானமே?

மருதனூர்
தாயுமானவள்

## சுவடுகள்

பௌர்ணமி நாட்களிலே- அன்று
நிலவொளியால் நனைந்த வீதிகள் இன்று
சலனமற்றுக் கிடக்கின்றன...
விழித்திருந்தே விடிகின்றன இரவுகள்
வேலியற்ற துன்பத் தொடர்கதையால்
எல்லோரும் கோதுமைக்காய்
கண்ணீர் விட்ட காலங்கள்
பெருவெளியில் நடந்த சகல நினைவும்
இதயத்தை தைக்கின்றன
முட்கம்பிகள் ஊட்டிய அவநம்பிக்கையும்
சிதைக்கப்பட்ட மலர்களின் வாசனையும்
இன்று காட்சியுடன் கப்பல் ஏறுகிறன...

புகழ்கீர்த்தி
முள்ளியவளை

## ஏழை வானம்

வாழவைத்த கரங்களுக்கு
காலம் செய்த கோலமென்ன?
ஏர் பிடிச்ச கரங்களின்று
நீரிழந்து நிற்பதென்ன?
சேற்று நிலப்படுக்கையிலே
நாற்றுநட்ட வேந்தனவன்
காற்று. மண். வானம் நம்பி
கதியிழந்த ஏழையவன்
மனிதர் மனம் ஏமாற்றும்
மழைக்குமா இந்நிலைமை!
பூமி தன்னைச் சுழல வைக்கும்
வலிமை கொண்ட வேங்கையொன்று
வாய்திறந்த மண் மீது
வான் பார்த்து நிற்பதென்ன?

கு. விபூசணன்

# மௌனத்தின் தேடல்- 285



## மாறுமோ மனசு

தொட்டுத் தூங்கியங்கே
தோளோடு அணைத்து
சத்தமிடும் வளையில் கையில்
தடவித்தூங்க வைத்த மாது
பற்றி நின்றாள் பாசத்தை
பாரினில் பிள்ளை மீது

விமல்ராஜ்
மீசாலை

## உயர்வான சிந்தனை

ஓராயிரம் சுமைகளுள்
உன் சுமை எனக்கு சுமையல்ல
போதையிலும் புகையிலும்
புத்தி கெட்டு நிற்கும்
ஆண்கள் தரும் காவியம் இதுதானா
சந்தோசம் பாதி வேதனை பாதி
பலியாகிடும் பெண்களில் நானா
உனை ஆளாக்கி
உலகறிய உயர்ந்திடவே
உறுதியுடன் உனை காத்திடுவேன்

அணிஞ்சில் புவபாலன்

## மனதோரம்

மனதோரம் வேதனை மேகம்
மையம் கொள்ள
விழியோரம் கண்ணீர் மழை
சாரல் அடிக்க காணாமல்போன
கணவருக்காக காத்திருக்கும்
சிறகொடிந்த பறவை இங்கு

இடைக்காடு
க.மலர்

## யாரறிவார்

அமுதும் தேனும் எதற்கு
நீ அருகினில் இருக்கையிலே?
ஏழ்மையிலும் பெருமைப்படும்
அன்னையே!
பின்னையோர் நாளில் அவன்
தெருவில் விடுவானோ உன்னையே!
யாரறிவார்? தெரியலையே!

ஹோப் மேரிதாஸன்
வட்டுக்கோட்டை

## பாராள்வான்

எதிர்காலம் நோக்கி நிற்க
உன் பிள்ளை
இக்கலியுகத்தில் எப்படி
இவனை நான் வளர்க்க
ஏம்பிலிப்போடு நீ கலங்காதே
அறிவோடு கரத்திலேந்தியிருக்கும்
அன்பின் பிணைப்போடு
பண்புமூட்டி வளதாயே
பாராள்வான் உன் பிள்ளை
சங்கடத்தோடு கிலியெதற்கு
உன் முகத்தில்

அ.அச்சுநகர் முகி

## அன்பு

நான் சுவாசிப்பது
உனக்காகத்தான் என்று
விசுவாசிப்பது அன்னை
நான் நேசிப்பது உன்னைத்தான் என்று
யோசிப்பது குழந்தை
இவர்களிடமிருந்து
உண்மை அன்பைக் கற்று
உலகை வெல்வோம்

க.அபர்ணா, வட்டுக்கோட்டை

## விடுதலை வரம்

அன்னையின் கருவறையில்
எனக்கு உயிர் ஈந்தவரோ
தேசத்தின் சிறையறையில்
செய்யாத குற்றத்திற்காய்
அரசியல் கைதியாய்
தவமிருக்கின்றார்
விடுதலை வரம் வேண்டியே!
வரம் கொடுக்கும் சாமிகளோ
கருங்கல் சாமியாட்டம்
கண் திறக்காமலே ஊடகங்களுக்கு
வாய் மட்டும் திறக்கிறார்களே

அராலியூர்
சோ.சிவகுமாரன்

## உத்தமித்தாய்

உரியவன் அருகில் இல்லை
உடன் பிறந்தவர்களும் இல்லை
உதவிக்கரங்கள் இல்லை
உண்ண வழியில்லை
உறங்கவும் முடியவில்லை
உலகிலே தனித்துப் போனாலும்
உயிர் வாழத் துடிக்கின்றாள்
உத்தமி ஒருத்தி- தான்
பெற்ற ஒரே மகனுக்காய்


யோ.காண்டீபன்
மானிப்பாய்

## துணிவே துணை

கொத்துக் குண்டு வீச்சால்
செத்துப்போன கணவனையும்
சொத்து சுகங்களையுமிழந்து
சித்தங்கலங்கிச் சோகத்தோடு
எத்துணையுமின்றித்
தனிமையில்
பெத்த பிள்ளையுங்கொண்டு
எத்திக்கும் அலையாது துணிவோடு
வித்தைகள் பலவுங்
கற்றுக்கொடுத்து
எத்திக்கும் அவன் புகழ் ஓங்க
சத்தியம் செய்து முன்னேற்று தாயே
புத்தம் புதிய வாழ்வொன்று மலரும்

துரை
தென்மட்டுவில்

# மௌனத்தின் தேடல் -286



**அன்பு வாசகர்களே !**


உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 27.01.2016ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# பசங்க பசங்கதான்!






பசங்களாலே கெத்துதாம்பானு யாரும் சும்மா சொல்லிட்டுப் போகலை. ஏன்னா...

● பசங்க பிறந்ததும் 'ஆம்பளப் புள்ள வந்துட்டான், இனி என்ன கவலை. கட்டவண்டி இழுத்தாவது குடும்பத்துக்கு கஞ்சி ஊத்துவான்'னு கண்டிப்பா ஏதாவதொரு கிழவி கொளுத்திப் போட்டுப் போயிடும். அப்போ இருந்தே குடும்பத்தோட சுமையை சுமக்க ஆரம்பிச்சிடுவோம்.

● குழந்தையா இருக்கும்போது அம்மா-அப்பாகிட்ட அடி வாங்கி, ஸ்கூலுக்குப் போகும்போது டீச்சர் கிட்ட அடி வாங்கி, காலேஜுக்குப் போகும்போது சீனியர்கள்கிட்ட அடி வாங்கி, கல்யாணம் ஆன பிறகு மனைவி கிட்ட அடிவாங்கி... இப்படி அடி வாங்கி அடி வாங்கியே எவ்ளோ அடிச்சாலும் தாங்கும் நல்லவனா மாறிடுவோம்.

● பரீட்சைக்கு முதல் நாள் ராத்திரி கண் முழிச்செல்லாம் படிக்கவே மாட்டோம். மறுநாள் ஒரே ஒரு பேனாவோட போய் பரீட்சை எழுதுவோம். ஃபெயில் ஆனாலும் மார்ச் போனா என்ன மாங்காயா போச்சு, இருக்கவே இருக்கு ஆண்டவன் கொடுத்த ஒக்டோபர்னு நம்பக்கையோடு காத்திருப்போம்.

● பாத்திரக்கடை மாதிரி ரூமே கலைஞ்சு கண்றாவியா கிடந்தாலும், தம்மாத்துண்டு பென்டிரைவையும் தன்னம்பிக்கையோட தேடிக் கண்டுபிடிப்போம்.

● பேஸ்ட் தீர்ந்து போச்சுனா சோப் வெச்சு பல் விலக்குவோம். உடைஞ்ச தாழ்ப்பாளுக்கு பதிலா, அதில் பேனாவை செருகி மனேஜ் பண்ணுவோம். இப்படி புதுசு புதுசா கண்டுபிடிச்சாலும் நாங்க புத்திசாலினு வெளியே வெட்டி சீன் ஓட்ட மாட்டோம்.

● 9 மணி ஆபீஸுக்கு எட்டரை மணிக்கு எழுந்தாலும் டக்கென்று டைமுக்கு கிளம்பி நிற்போம். கை நிறைய காசு இருந்தாலும் கையேந்திபவன்லேயே கரைச்சல் பண்ணாம சாப்பிட்டு வந்துடுவோம்.

● பேஸ்புக்கில் மெசேஜ் அனுப்புவது பேக் ஐடியாக இருந்தாலும், மதிச்சு ரிப்ளை பண்ணுவோம். பொண்ணுங்க 'குட் மோர்னிங்'னு ஸ்டேட்டஸ் போட்டாலும் லைக் பட்டனை அழுத்தி, அதெல்லாம் ஒரு ஸ்டேட்டஸ்னு அதுக்கு 600 லைக் வர வெச்சிடுவோம். ஆனா எங்களுக்கு ஆறு லைக் வரவே அரை நாளாகும்னு தெரிஞ்சும் அசராம ஸ்டேட்டஸ் போடுவோம்.


● துணிக்கடைகளில் பெண்களுக்கான சேலைகள் தரை தளத்துலேயே கிடைக்கும். ஆனால், நாங்க ஒரு சட்டை வாங்கணும னாலும் மூணு மாடி ஏறணும். சட்டை வேணும்னு ஒரு தடவை முடிவு பண்ணிட்டா மூணு மாடி என்ன 30 மாடினாலும் சங்கடப்படாம ஏறுவோம்.

இதுமட்டுமில்லை... இனி எத்தனையோ விடயங்கள் இருக்கு, பசங்க கெத்துனு சொல்ல!

# எல்லாம் நினைப்புதான்!


ஒரு படத்தைப் பார்த்துட்டு தியேட்டரை விட்டு வெளியே வரும்போது நமக்கு 'ஜிவ்'வுனு இருந்திருக்கலாம் சில சமயம். அந்த பீல் எப்படில்லாம் 'டுஸ் கான்' ஆச்சுனு பார்க்குறீங்களா பாஸ்..?

**இந்தியன்**



இனிமே இலஞ்சம் கேட்கிறவனை ஓங்கி ஒரு அப்பு அப்பணும்னு கோபம் வரும். ரோங் சைடில பைக்கை விட்ட நம்மளை மடக்கின டிரபிக் பொலிஸ் கிட்ட 100 ரூபாய் கொடுத்துட்டு நைஸா கிளம்பி இருப்போம்.

**சாமி**



'பொலிஸ் ஆகுறோம். டிஎன்பிஎஸ்சி எழுதுறோம்'னு வெளியில விறைப்பா வருவோம். அரியர் பேப்பர் கண்ணுல வந்து போகும். அப்படியே மாடி வீட்டு ஷாகுல் அவங்க வீட்டுக்கு டுபாய்ல இருந்து கொடுத்துவிட்ட எலெக்ட்ரோனிக் பொருட்களைப் பார்த்ததும் 'டுபாய் போறோம். பரோட்டா கடையில பணத்தை அள்ளுறோம்' என யோசிச்சிருப்போம்.

**பொல்லாதவன்**



நல்ல பைக் வாங்குறோம். இப்படி ஒரு பொண்ணை ஏத்திட்டு ஈ.சி.ஆர்ல பறக்குறோம்னு நினைச்சிருப்போம். ஆனா, ஸ்ப்ளெண்டர் வாங்கி ஃபமிலியோட போயிட்டு இருப்போம்.

**வாரணம் ஆயிரம்**




'கிற்றார் வாசிக்கிறோம்... ஃபிகரை உஷார் பண்றோம்'னு வெளியில வருவோம். அப்புறம் அந்தப் பாட்டை சன் மியூசிக்ல பார்க்கிறப்போ மட்டும் கிற்றாருக்கு அஞ்சலி செலுத்துற மாதிரி கொஞ்சமா யோசிப்போம்.

**சிங்கம்:**



'பொலிஸ் ஆகுறோம்'னு சூர்யா மீசை வெச்சுட்டுத் திரிவோம். 'கறிக்கடையிலையா வேலை பார்க்கிறே'னு ஒரு ஆத்தா பாசமா கேட்கும். 'என்னடா மீசை இது? அவியாத முட்டய ஒழுக விட்ட மாதிரி'னு சித்தப்பா கலாய்ப்பார்.



**எஜமான்:** மீனா மாதிரி ஒரு பொண்ணைக் கல்யாணம் பண்ணி ரஜினி மாதிரி ரொமான்ஸ் பண்றோம்டானு வந்து மீனா படத்தை கட் பண்ணி நோட்டுல ஒட்டி கவிதை எழுதி வெச்சிருப்போம். 'முளைச்சு மூணு இலை விடலை அதுக்குள்ள லவ்வு?'னு வீட்டுல அப்பாகிட்ட குட்டு வாங்கி இருப்போம்.



**ஜென்டில்மேன்:**

இனிமே கெட்டவங்ககிட்ட இருந்து பணத்தை ஆட்டையைப் போட்டு ஏழைகளுக்குக் கொடுக்கணும்னு தோணும். கீழே ஒரு ரூபா கிடந்துச்சுனா யாரும் பார்க்கிறாங்களானு பார்த்துட்டு எடுத்து பொக்கெட்ல போட்டுக்குவோம். இப்பல்லாம் படம் பார்த்துட்டு சீட்டை விட்டு எழுந்திரிக்கிறப்பவே 'என்னாச்சு'னுதான் யோசிக்க வேண்டியிருக்கு!

# இலங்கைக்குள் ஏட்டிக்குப் போட்டியாக சீனா, இந்தியா





ஈழத்தில் விடுதலைப் புலிகள இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்ட பின்னரும் இலங்கை இந்திய அரசாங்கமானது எச்சரிக்கை கலந்த உணர்வோடு நடந்து கொள்வதாகவே பார்க்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகள் மூன்று தசாப்த கால போருக்குப் பின்னர் இலங்கை அரசாங்கத்தினால் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் முக்கிய உறுப்பினர்களும் கொல்லப்பட்டுள்ளனர். இதன் காரணமாக இலங்கை இதுவரை எதிர்கொண்ட பாதுகாப்பு அச்சுறுத்தல் முற்றாக நீங்கியுள்ளது.

எனினும் முன்னைய வருடங்களை விட இலங்கை இம்முறை பாதுகாப்புக்காக கூடுதல தொகையை ஒதுக்கியுள்ளது. எதிர்வரும் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக பாதுகாப்புக்கென 307 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் வான்பரப்பின் பாதுகாப்பை பலப்படுத்தும் வகையில் மிக் தாக்குதல் விமானங்களையும் கொள்வனவு செய்யவுள்ளது.வடகிழக்கில் ராணுவ முகாம்கள் பல்படுத்தப்பட்டு வருகின்றது. குறிப்பாக மட்டக்களப்பு, திருகோணமலை பகுதிகளில் புதிய ராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றது.

**காரணம் என்ன**

இதற்கான காரணம் இலங்கையில் உள்நாட்டில் இருந்து இனி எந்தவித பாதுகாப்பு அச்சுறுத்தல்களும் வராத போதிலும், வெளியிலிருந்து பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் ஏற்படலாம் என்ற அச்சம் பாதுகாப்புத் தரப்பின் பிரதானிகள் மற்றும் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களிடம் உள்ளது.

விடுதலைப் புலிகளின் வெளிநர்ட்டு செயற்பாட்டாளர்கள் மற்றும் இந்தியா போன்ற தரப்புகளில் இருந்து எதிர்காலத்தில் தாக்குதல்களை எதிர்கொள்ள நேரிடலாம் என்றும் இலங்கை எதிர்பார்கின்றது.

**பாகிஸ்தான் - இலங்கை ஒப்பந்தம்**

அண்மையில் சிறிலங்காவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் அண்மையில் கொழும்பில் நடத்தப்பட்ட உயர்மட்டப் பேச்சுக்களின் போது, எட்டு புரிந்துணர்வு உடன்பாடுகள் கையெழுத்திடப்பட்டுள்ளன. கொழும்புக்கு அணமையில் வருகை தந்திருந்த பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் தலைமையிலான குழுவினருக்கும், சிறிலங்கா அதிபர் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான குழுவினருக்கும் இடையில் அதிபர் செயலகத்தில் நடந்த பேச்சுக்களின் போதே இந்த உடன்பாடுகள் கையெழுத்திடப்பட்டுள்ளன.

சிறிலங்கா அதிபர், பிரதமர், பாகிஸ்தான் பிரதமர் ஆகியோர் முன்னிலையில், வர்த்தகம், நிதி புலனாய்வு, விஞ்ஞான, தொழில்நுட்பம், உடல்நலன் குறித்த எட்டு புரிந்துணர்வு உடன்பாடுகளில், இருநாடுகளினதும் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் கையெழுத்திட்டனர். பாகிஸ்தானுடன் சிறிலங்கா செய்து கொள்ளவுள்ள சுதந்திர வர்த்தக உடன்பாட்டில், “சேவைகள்” துறையை உள்ளடக்க இணங்கியுள்ளது இந்தியாவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இருதரப்பு சுதந்திர வர்த்தக உடன்பாட்டில் சேவைகள் மற்றும், முதலீடு ஆகிய விடயங்களை உள்ளடக்க இணக்கம் காணப்பட்டுள்ளதாக, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் கொழும்பில் அப்போது தெரிவித்திருந்தார்.

**இலங்கை மறுப்பு**

அதேவேளை, இந்தியாவுடன் விரிவான பொருளாதார ஒத்துழைப்பு உடன்பாட்டிலோ, அல்லது பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்பாட்டிலோ சேவைகள் துறையை உள்ளடக்க சிறிலங்கா தரப்பு மறுப்புத் தெரிவித்து வருகிறது. இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பு உடன்பாட்டில் சேவைகள் துறையை உள்ளடக்கினால், சாதாரண தொழிலாளி உள்ளிட்ட துறைசார் நிபுணர்கள் இந்தியாவில் இருந்து சிறிலங்காவுக்குப் படையெடுப்பர் என்று இலங்கையர்கள் அஞ்சுகின்றனர்.

அதேவேளை, சேவைகள் துறையை உள்ளடக்கியதாக பாகிஸ்தானுடன் சுதந்திர வர்த்தக உடன்பாட்டை செய்து கொள்ள கொழும்பு இணங்கியுள்ளது புதுடெல்லியை அதிர்ச்சியடையச் செய்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன்.

பாகிஸ்தானுடனான உடன்பாட்டில் சேவைகள் துறையை உள்ளடக்குவதற்கு சிறிலங்கா அவ்வளவாக அஞ்சவில்லை என்றும் கூறப்படுகிறது. காரணம் சிறிலங்காவில் இந்தியாவின் பொருளாதார தலையீடு பரந்துபட்டது என்றும், கனதியானது என்றும், ஆனால் பாகிஸ்தானின் பங்கு சிறிதளவே என்பதால் அந்த அச்சம் சிறிலங்காவுக்கு இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

**போர் விமானக் கொள்வனவில்லை**

இந்தியாவின் அழுத்தங்களுக்கு மத்தியில், பாகிஸ்தானிடம் இருந்து எட்டு, ஜே.எவ்-17 போர் விமானங்களை வாங்கும் உடன்பாட்டில் சிறிலங்கா கையெழுத்திட்டுள்ளது.

சிறிலங்காவுக்குப் பயணம் செய்துள்ள பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப், கடந்த வாரம் சிறிலங்கா அதிபர் தலைமையிலான குழுவினருடன் நடத்திய பேச்சுக்களின் போது, இந்த போர் விமானக் கொள்வனவு உள்ளிட்ட 8 உடன்பாடுகள் கையெழுத்திடப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறிலங்காவுடன், பாதுகாப்பு, தீவிரவாத எதிர்ப்பு வர்த்தகம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் சார்ந்த எட்டு உடன்பாடுகள் கையெழுத்திடப்பட்டுள்ளதாகவும், சிறிலங்காவுக்கு முதல் கட்டமாக எட்டு ஜே.எவ்-17 போர் விமானங்களை பாகிஸ்தான் வழங்கும் என்றும், பாகிஸ்தான் பிரதமரின் குழுவில் இடம்பெற்ற பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சீனாவின் தொழில்நுட்ப உதவியுடன் பாகிஸ்தான் தயாரித்து வரும், ஜே.எவ்-17 போர் விமானம் ஒற்றை இயந்திரத்தைக் கொண்டது என்பதுடன், தாக்குதல், இடைமறிப்பு மற்றும் கண்காணிப்பு என்று பலநோக்குப் பயன்பாடுகளுக்கு உகந்தவையாகும்.

**இந்தியா கடும் எதிர்ப்பு**

பாகிஸ்தானிடம் போர் விமானங்களை வாங்க சிறிலங்கா திட்டமிட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்த நிலையில், அதற்கு இந்தியத் தரப்பில் கடுமையான எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டிருந்தன. எனினும், தாம் இன்னும் எந்த போர் விமானங்களை வாங்குவது என்று முடிவு செய்யவில்லை என சிறிலங்கா விமானப்படை சில நாட்களுக்கு முன்னர் வரை கூறி வந்தது.


இந்தநிலையில், பாகிஸ்தானிடம் போர் விமானங்களைக் கொள்வனவு செய்யும் உடன்பாட்டில் சிறிலங்கா கையெழுத்திட்டுள்ளது. என்று சொல்லப்படுகின்றது. இதன்படி, எட்டு ஜே.எவ்-17 போர் விமானங்கள் அடுத்த ஆண்டுக்குள் சிறிலங்கா விமானப்படைக்கு வழங்கப்படும்.

**சீனாவின் போர்க் கப்பல்கள் கொழும்பில**

சீனக் கடற்படையின் வழிகாட்டல் ஏவுகணை போர்க்கப்பல்களான, லியூசோ, சன்யா ஆகியனவும், விரிவான விநியோக கப்பலான குயிங் ஹாய்/ஹவுமே கொழும்புத் துறைமுகம் வந்தன. இந்தப் போர்க்கப்பல்களை கொழும்பிலுள்ள சீனத் தூதுவர் யி ஜியான்லியாங் மற்றும் நூற்றுக்கும் அதிகமான சீன அதிகாரிகளும் மாலுமிகளும் வரவேற்றனர்.

நான்கு மாதங்களாக ஏடன் வளைகுடாவிலும், சோமாலியாவை ஒட்டிய கடற்பகுதியிலும், வணிகக் கப்பல்களுக்கான பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த இந்த சீனப் போர்க்கப்பல்கள், தமது பணியை முடித்துக் கொண்டு திரும்பும் வழியிலேயே சிறிலங்காவுக்கான நல்லெண்ணப் பயணத்தை மேற்கொண்டுள்ளன. இந்தப் போர்க்கப்பல்கள் பாகிஸ்தானின் கராச்சி துறைமுகத்தில் தரித்து நின்றுவிட்டே, கொழும்புத் துறைமுகம் வந்துள்ளன.

*நிலாமடீன்*



சிறுகதை



# தெய்வம்... நின்று கொல்லும்!

"ஐயோ... என்ரை பிள்ளையைக் கொல்லிப் போட்டாங்கள். அம்மா, அம்மா... எண்டு சொல்லி என்னட்டை வாங்கித் திண்டுபோட்டு என்ரை பிள்ளையையே கொல்லிப் போட்டாங்கள்... பாவியள்.. நீங்கள் நல்லாயிருப்பியளே... நாசமாப் போவாங்கள்.. உந்தச் சினேகிதம் வேண்டாமெண்டு சொன்னன். கேட்டானே பாவி?"

நிஷானின் இறுதிச் சடங்கில் தாய் விமலாவின் அலறல் அங்குள்ள அனைவரின் உள்ளங்களையும் கலங்கச் செய்தது. இறுதி ஊர்வலம் போகிறான் நிஷான். இருதயம் வெடிக்கத் தவிக்கிறாள் விமலா.

யாழிலே உள்ள கிராமங்களின் அழகிய கிராமங்களில் இதுவும் ஒன்று. பட்டினிகள் பலவேளை படலையைத் தட்டினாலும் பாசங்கள் அவள் வீட்டின் களஞ்சியமாக இருந்தது. வாழ்க்கைத் துணையைக் கரம் பிடித்த நாள் முதல் பணம் இல்லையே என்ற கவலை இருந்தாலும் அந்தக் கவலையை மறக்கடித்து விடுவான் அவளது கணவன். நகைச்சுவைக்கு அவனை தாண்ட யாராலும் முடியாது.

அவர்களது, ஆனந்தத்தின் அழகிய வடிவம் நிஷான். ஒரேயொரு பிள்ளையை இறைவன் கொடுத்தான். அவர்கள் ஓராயிரம் இன்பம் பெற்றனர். அவன் வளர்ச்சியில் கையிலும் கழுத்திலும் சேர்க்கவில்லை. அவர்கள் செல்வங்களை அவன் கல்வியில் சேர்த்தனர் தங்கள் சேமிப்புகளாக.

என்றுமே வாட்டம் காணாத விமலாவின் முகத்தில முதல் முதலாக கண்ணீரைக் கண்டான் நிஷான். தவித்துப் போனான். அப்பாவின் அவுஸ்திரேலியாப் பயணம், அம்மா வைத்தான் மூலையில் தள்ளியது. சென்றவரின் முடிவு இதுவரை தெரியாது.

வருடங்கள் செல்லச் செல்ல நிஷானின் நட்பு வட்டம் அதிகமானது. அம்மாவால் திருத்த முடியவில்லை. ஆனாலும் அம்மாமீது அளவற்ற பாசம். வீட்டிலே இருக்கும்போது தாய்க்குரிய பணிவிடைகளையும் வீட்டிலுள்ள சிறு சிறு வேலைகளையும் செய்து கொடுப்பான்.

அன்றொரு நாள் அம்மா மடிமேல் நிஷான் படுத்திருந்தான். விரல்களால் அவன் தலைமுடியைக் கோதியவாறே அவனுடன் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தாள் விமலா.

வாசலில் வேகமாக வந்த மோர்ட்டார் சைக்கிள்களில் வந்திறங்கினார்கள் அவனது நண்பர்கள்.

உடனே துள்ளியெழும்பினான் நிஷான். தாயின் கையாலே நால்வரும் உணவை முடித்துக்கொண்டு புறப்பட்டார்கள்.

இரவு பன்னிரண்டு மணியாகியும் மகன் வரவில்லை. காத்திருந்து காத்திருந்து கண்ணயர்ந்த விமலா, விடிகாலை விழித்தபோது, அருகிலே மகன் உறங்கிக்கொண்டிருந்தான். நீண்டதொரு பெருமூச்சை விட்டபடி எழ முற்பட்டவளை அயலிலே கேட்ட ஒப்பாரி திடுக்கிட வைத்தது. ஓடினாள்... ஓடினாள்...

தெருவிலே...எல்லோரும் அழுகையொலி கேட்டதிசை நோக்கி ஓடினார்கள். அந்தக் கூட்டத்தின் நடுவே விமலாவும் ஓடிச்சேர்ந்தாள்.

அடர்ந்த பற்றைகள் நிறைந்த காணியொன்றிலே, அவ்வூர் மக்கள் அனைவரும் திரண்டிருந்தனர்... அங்கே விமலாவின் மருமகளாக வரவேண்டியவள், அவளது அண்ணன் மகள் பிறந்த மேனியாய்...!!

அருகிலே அவளது ஆடைகள் கிழிந்த துண்டுகளாய்...! ஈயும் எறும்பும் மொய்க்க அவளுடல் அலங் கோலமாய்...

ஊரே திரண்டழுதது. விமலாவால் பேசமுடியவில்லை; அழ முடியவில்லை. அதிர்ந்துபோய் அடிசாய்ந்தாள்.

மருமகளாய் நினைக்கவில்லை அவளை; மகளாய் வளர்த்தாள். அழகி என்று சொல்லமுடியாது பேரழகியாய் உலவியவள். இன்று துர்நாற்றம் வர மல்லாக்க படுக்கப் போடப்பட்டிருந்தாள்...

அவள், வீட்டில் மூத்தவள், மற்றவர்கள் இளையவர்தான், ஒரு ஆணும் ஒரு பெண்ணும். விமலாவையும் தன் தாய்போல் தான் அவளும் கருதினாள். ஏனெனில் விமலாவின் தமையனார்தான் அவளின் தந்தை. அவரை அவர்கள், கடற்றொழிலுக்குச் சென்றபோது கடலன்னையிடம் பறிகொடுத்துவிட்டார்கள். அன்றிலிருந்து விமலாவின் மச்சாள் கூலிவேலைக்குச் சென்று பிள்ளைகளை வளர்த்துவருகிறார். மூத்தவளின் படிப்பு முடிய அவளை விமலாவின் மகனுக்கு கட்டிக் கொடுத்துவிட்டால், ஒரு பெரிய பொறுப்பு முடிந்துவிடும் என்று கருதிக்கொண்டிருந்தாள்.

கையில் பணம் கிடைக்கிற போதெல்லாம் தனது அண்ணன் பிள்ளைகள் நல்லாயிருக்க வேண்டும் என்று கருதி உதவி செய்துகொண்டிருப்பாள் விமலா. அவ்வாறு எண்ணியே தன் மகனுக்கு அண்ணனின் மூத்த மகளை நிர்ணயித்து வைத்திருந் திருந்தாள் அவள்.

நிஷாந் அவளது இறப்பிலிருந்து ஒரு மாதமாய் தனித்திருந்தான்...

பிறந்துவிட்ட நாளிலிருந்து அவனுக்கென நிச்சயிக்கப்பட்டவள், பல பேரின் கைபட்டு... கண்பட்டு... சிதைக்கப்பட்டு... சீரழிந்து இறந்துவிட்டாளே...!

நாட்டில் இப்போ இதுதானே நடக்கிறது..!

குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள்..பெண்கள் மீதான கூட்டுவன்புணர்வு..!

மனிதர்களை அரக்கர்களாக மாற்றிக் கொண்டிருக்கிறது போதைவஸ்து...*பார்லிமென்றில* இருக்கிற சிலருக்கு... ஊதியம் போதாதென்று... பின் பக்கத்தாலே இந்தத் தொழில் வேறு.., தனித்தனிக் குழு வைத்து சம்பாதிக்கிறதென்றால் நாடு எப்படி உருப்படும்.

விமலாவால் உண்ணவோ உறங்கவோ முடியவில்லை... மருமகளின் நினைப்பில் உருகிக் கருகினாள்...

இந்தப் பாதகச் செயல் எப்படி நடந்தது..! இதைச் செய்யத் துணிந்தவர்கள்...? எப்படி இருப்பார்கள்..? எங்கேயிருப்பார்கள்...? மண்டையைக் குடைந்தன கேள்விகள்.

அவளையும் அறியாமல் அவளது சந்தேகங்கள் வலுக்கத் தொடங்கின...

அவற்றை ஊர்ஜிதப்படுத்துவதற்காக மட்டும்தான் அவளது உடல், இயங்கியது. வேறெந்த வேலையும் அவளுக்கு இப்ப இல்லை... அவளால் வேறு எதையும் செய்ய முடியவில்லை... அவள் மனதிலுள்ள கேள்விகளுக்கு விடைகிடைத்தாலேயொழிய அவளால் நிதானமடைய முடியாது என்ற மனநிலையிலேயே இப்போ அவள்; ஒரு பைத்தியக்காரிபோல அலைந்தாள்..!

நாட்கள் ஓடிச்செல்ல நிஷானும் மாறுதலடைந்தான். வழமைபோல் நண்பர்கள் வருவதும் நிஷான் அவர்களுடன் செல்வதும் தொடர்ந்தது. பல பொழுதுகளில் அவன் இரவினில் வருவதில்லை. சிலவேளைகளில் இரண்டு நாட்கள் கழித்தும் வந்தான். ஏதோ ஒரு பெரிய மாறுதலை மகன் அடைந்துவிட்டான் என்பதுமட்டும் விமாலாவிற்குப் புரிந்தது. ஆனால், அவனது நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்தாள். கல்வி நடவடிக்கைகள் எல்லாம் கைவிடப்பட்டதை உணர்ந்தாள். அவன், முன்னைய அவளின் பிள்ளையில்லை இப்போ...

இது தனது மருமகளின் பிரிவாலா..? அல்லது அவனது தந்தையைப் பிரிந்திருப்பதாலா..? தெளிவான விடையைத் தேடினாள்...!

கிடைத்த விடையோ அவளுக்கு அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி..கொடுத்தது...!

இந்த நாட்களில்தான் விமலா அவனையும் அழைத்துக் கொண்டு, அந்தக் கடற்கரை அம்மன் கோவிலுக்குச் சென்றாள். அவனது நண்பர்களும் உடன் சென்றனர். நீராடிவிட்டு அம்மனை வணங்கச் செல்வதற்காக நிஷானையும் வரும்படி அழைக்கிறாள். அவனது நண்பர்கள் வந்தார்களே தவிர நிஷானைக் காணவில்லை. அவனது நண்பர்கள் மீண்டும் கடலில் குதித்தனர் அவனைத் தேடுவதற்காக.

விமலா கடற்கரையில் அழுதுகொண்டிருந்தாள். நண்பர்கள், அவனது உயிரற்ற உடலுடன் மேலே வந்தனர்..!

விமலா கடற்கரை மணலில் புரண்டழுதாள்.

அவள், கடலுக்குள் இறங்கியிருக்கவில்லை. அவள், நந்நீரில் முழுகித்தான் அம்மனை வழிபட ஆயத்தமாய் மகனை அழைத்தாள். ஆனால், நிஷானோ கடலில் இருந்து வெளியே வரவில்லை...?

அவனது நீச்சல்பலம் அங்கேயே முடிந்துவிட்டது. அவனது மரணத்துக்கு கடலன்னை தற்காலிகமாகப் பொறுப்பெடுத்துக்கொண்டாள்...

திடீர் மரணவிசாரணைக்குப் பிறகு பொலிசார் சந்தேகத்தின் பேரில் அவனது நண்பர்களைக் கைது செய்தனர்.

விமலாவுடன் சுற்றம் நின்று ஆகவேண்டிய காரங்களைச் செய்து முடித்தது. நிஷானின் உடல் தீயுடன் சங்கமமானது.

பெற்றவளுக்கு இப்போ பைத்தியம் தெளிந்தாலும்... உடலிலோ மனதிலோ தெம்பில்லை... எழுந்து நடக்க. அயலவர், கொடுக்கும் உணவுடன் உயிரைப் பிடித்துக் கொண்டிருந்த விமலாவின் வீட்டின் முன்னே பொலிஸ் ஜீப்.

கை, விலங்கிடப்பட்டு விமலா கைது செய்யப்பட்டாள்.

ஊரவரும் உறவினரும் திகைத்து நிற்க, விமலா மட்டும் புன்னகையோடு கைதியாய்ச் செல்கின்றாள்.

நண்பர்களுடன் சேர்ந்து போதைப்பொருள் உட்கொள்வது மட்டுமின்றி, போதைப் பொருள் வியாபாரத்திலும் ஈடுபட்ட நிஷான், தன்னிலை இழந்து, தன் நண்பர்களுடன் கூடி, தனக்கு நிச்சயிக்கப்பட்டவளின் வாழ்வையே அழித்தவன்..!

விமலாவின் மருமகளை ஏமாற்றிக் கூட்டிச்சென்று கூட்டுப்பசி தீர்த்ததை மோப்பம் பிடித்த விமலா, தாயெனும் தன்மை மறந்து, பெண்ணென்ற நிலையில், நின்று கண்களைக் கட்ட மறுத்த நீதிதேவதையாய் நிலைத்தாள்.

ஆம், தன் முலைப்பால் கொடுத்து வளர்த்த குழந்தை, இன்று வளர்ந்து-வஞ்சகம், சூது, வாது, பெண்பாவம்... கொலை... என கொடிய பாதகச் செயலில் வீழ்ந்ததை அவளால் ஜீரணிக்க முடியவில்லை. ஒரு சமூகவிரோதியை தன் சொத்தாய் இம் மண்ணுலகில் விட்டுச்செல்ல அவள் மனம் இடங்கொடுக்கவில்லை.

அவள் முடிவு செய்துவிட்டாள்.. இப்படியொரு மகன் நம்மிருவருக்கும் இருக்கவில்லை... என்று உலகம் பேசட்டும்...

இதனால்தான், கடற்கரை அம்மனைத் தனக்குத் துணைக் கழைத்தாள். கடல்குளிக்குமுன் அவள் மகனுக்குக் கொடுத்த பால் மிக இனிப் பானது... ஆனால் அது, அவனைத் தண்ணீருக்குள் தலாட்டிவிட்டது. அவன் நீந்தவில்லை... கடல்நீருக்குள் உறக்கம், ஆட்கொள்ள, அயர்ச்சியடைந்தான். அவனால் எழ முடியவில்லை.. நீருக்குள் முக்குளித்துக் கொண்டிருந்தான். ஈற்றில் கடலன்னை அவனைத் தாங்கிக் கொண்டாள்...!

இரா. நவதர்சினி

# வெந்த புண்ணில் வேல்பாய்ச்சும் அரசு

போரால் சொல்லொணாத் துன்ப துயரங்களை அனுபவித்த தமிழினம் இன்னும் பல துன்பங்களை அனுபவித்தாக வேண்டும் என்று எழுதப்படாத சட்டம் அமுல்படுத்தப்பட்டது போன்று அரசின் செயற்பாடுகளும் அரச தலைவர்களின் அறிக்கைகளும் அமைந்துள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தைப்பொங்கல் (15.01.2016) தினத்தன்று யாழ்ப் பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இந்த விஜயம் தமிழரின் எதிர்பார்ப்புக்களை முற்றாக சிதைத்து விடும் என்று முன்பு எவரும் அறிந்திருக்கவில்லை. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில், முன்னாள் ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் உள்ளிட்டவர்கள் கொழும்பிலிருந்து வரும் முக்கிய விருந்தினர்களாக அறிவிக்கப்பட்ட போதும் இறுதியில் ஜனாதிபதி நிகழ்வில் பங்கேற்கவில்லை.

ஜனாதிபதி பங்கேற்கும் தைப்பொங்கல் நிகழ்வு என்றும் இம்முறை யாழ்ப்பாணத்தில் தேசிய பொங்கல் விழா நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டதால் எதிர்பார்ப்பு சற்று மேலோங்கியிருந்தது.

அதேவேளை அரச தரப்பினரால் தேசிய தைப்பொங்கலை முன்னிட்டு பல எதிர்பார்ப்புக்கள் திட்டமிட்டு பரப்பப்பட்டிருந்தால் ''தை பிறந்தால் வழி பிறக்கும்'' என்ற நம்பிக்கையில் காத்திருந்தனர்.

மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் தமிழரின் உணர்வுகள் முற்றாக நசுக்கப்பட்டதை உணர்ந்து அதையே காரணம் காட்டி ஆட்சிக்கு வந்தவர்கள் நல்லாட்சி என்று நாமம் சூட்டியதால் இந்த எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் மக்களிடையே அதிகரித்தது.

தைப்பொங்கல் தினத்தன்று காணி விடுவிப்பு; காணாமற் போனவர்கள் தொடர்பான தகவல்கள் வெளியீடு; சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை என்றவாறான அறிவிப்புக்கள் வரும் என்ற எதிர்பார்ப்பில் இருந்தவர்களுக்கு ஏமாற்றம்; அதிருப்தி; அலைச்சல்; மனவேதனை; கண்ணீர் என்பவற்றையே அரசு வழங்கியது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற தைப்பொங்கல் விழாவில் பிரதம விருந்தினராக பங்கேற்ற போது நல்லாட்சி நமக்கு விடிவைத் தரும் என்று நம்பியவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

காணாமற் போனவர்களைக் கண்டறியக்கோரி வெயிலிலும் மழையிலும் கண்ணீருடன் கதறி போராட்டம் நடத்தி வரும் உறவினர்களுக்கு ஆறுதல் அளிக்கும் வார்த்தைகளைக் கூறி ஆசுவாசப்படுத்த வேண்டிய பிரதமர் தைப்பொங்கல் செய்தியாக மரணச் செய்தியை வாய் கூசாமல் கூறினார்.

காணாமற்போனவர்கள் உயிருடன் இல்லை என்று அவர்கள் உதிர்த்த வார்த்தைகள் ''வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போன்று'' தமிழினத்தின் மீது பேரிடியாக வந்து வீழ்ந்தது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்தபோது கூட இத்தகைய வார்த்தைகளைக் கூற முற்படவில்லை. மாறாக காணாமற்போனவர்களைக் கண்டறிய ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமித்து விசாரணைகளை முன்னெடுத்திருந்தார்.

காலம் தாழ்த்தும் நடவடிக்கை இதுவென்று தமிழ் அரசியல்வாதிகளும் பொதுமக்களும் விமர்சனங்களையும் எதிர்ப்புக்களையும் முன்வைத்தபோதும் தமது பிள்ளைகளையும் உறவுகளையும் எப்படியாவது உயிருடன் பார்த்துவிட வேண்டும் என்ற ஏக்கத்துடன் காணாமற்போனவர்களின் உறவினர்கள் சாட்சியமளித்திருந்தனர்.

இராணுவத்துக்கு எதிராக சாட்சியமளித்தால் தாமும் காணாமற்போய் விடுவோம் நிம்மதியாக வாழ விடமாட்டார்கள் என்ற அச்சத்துக்கு மத் தியிலும் துணிந்து சாட்சியமளித்த உறவினர்களுக்கு அரசின் பதில் மரணச் சான்றிதழ்.

மரணச் சான்றிதழ் பெறும் எண்ணம் காணாமற் போனவர்களின் உறவினர்களிடம் இருந்திருந்தால் ஆணைக்குழு விசாரணைகளின் போதே அதற்கு ஆமாம் போட்டிருப்பார்கள்.

காணாமற்போனவர்களின் உறவினர்களின் ஒரேநோக்கு தமது உறவுகளை உயிருடன் விரைவாக மீட்க வேண்டும் என்பதே. அதற்காகவே இன்றும் அவர்கள் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் வைத்து கூறிய கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த 21 ஆம் திகதிநடத்திய ஆர்ப்பாட்டத்தின்போதும் இதனை மிகவும் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளனர்.

அதுமட்டுமன்றி பொது எதிரணியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன போட்டியிட்ட போது நிபந்தனைகள் எதுவுமின்றி தமது சுய நலன்களை மட்டும் முன்னி லைப்படுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமைகள் ஆதரவு தெரிவித்ததையும் கேள்விக்குட்படுத்தியிருந்தனர்.

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் கடந்த (21.01.2016) வியாழக்கிழமை நடத்திய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் கூட்டத்தினை மையப்படுத்தி ஏற்பாடு செய்யப்பட்ட இந்த போராட்டத்தில் கூட்ட மைப்பே எமது பிள்ளைகளின் விடு தலையை தாமதம் செய்யாதே!, அரசியல் கைதிகளின் விடயத்தில் இரட்டை முகம் காட்டாதே, கூட்ட மைப்பே ஐ.நாவின் நீதிக் கதவு களை திறக்க விடாமல் தடுப்பது ஏன்? கூட்டமைப்பே வாக்குக்கா எங்கள் பிள்ளைகளின் தியாகம் வேண்டும்? கூட்டமைப்பே தமிழ் மக்களை மாற்றானிடம் கையேந்தும் இனமாக மாற்றாதே! இவ்வாறு பல எதிர்ப்புத் பதாகைகளை தாங்கியிருந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக கிளிநொச்சியில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டம் அரசுடன் இணைந்து செயற்படுபவர்களுக்கு மக்கள் நலன் முக்கியப்படுத்தப்பட வேண்டும் என்பதை நன்கு உணர்த்தியிருக்கும்.



தனிக்காட்டு ராஜாவாக வலம் வந்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பு வடக்கில் தேர்தல் காலத்தில் மக்களை ஏமாற்ற பல உத்திகளை கையாள்வது வழக்கம்.அதில் இது வரை காலமும் கூட்டமைப்பு வெற்றியும் பெற்றுள்ளது.

கூட்டமைப்பின் வெற்றியில் அக்கட்சிக்கு எவ்வளவுதூரம்பங்குண்டோ அதைவிட அரசின் சார்பில் போட்டியிடுபவர்களின் பங்களிப்பும் உண்டு. அரச தரப்பில் போட்டியிடுபவர்களை ஆதரிக்க மறுக்கும் தரப்பினர் கூட்டமைப்புக்கு அளிக்கும் வாக்குகள் அக்கட்சிக்கு மக்கள் ஆதரவு உள்ளது என்ற மாயையை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட கட்சி என்பதால் அதற்கான ஆதரவு முன்பு மேலோங்கிக் காணப்பட்டது. ஆனால் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் அண்மைக்கால அறிக்கைகள் அக் கட்சிக்கு எதிரான போக்கை மேலும் அதிகரித்துள்ளது.

மக்களிடம் வாக்கு கேட்டு செல்லும் போது ஒரு கொள்கை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ளும் பதவிகள் கிடைத்தவுடன் ஒரு கொள்கை இதனை எதிர்த்தே கிளிநொச்சியில் காணாமற்போனவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து போராட்டம் நடத்தினர்.

கூட்டமைப்பில் போட்டியிடும் அனைவரும் வெற்றி பெறவில்லை. வெற்றி பெற்றவர்களில் அனை வரும் கூட்டமைப்பு கொள்கையை பின்பற்றவில்லை. இதில் அதன் தலைவர் பேச்சாளர் எனக் கூறிக் கொள்பவர்களும் விதிவிலக்கல்ல.

கூட்டமைப்பில் குறுகிய கால இடைவெளிக்குள் நுழைந்தவர்கள் மக்கள் ஆதரவை அமோகமாக பெற்றுள்ளனர்.

நீண்டகாலம் அக்கட்சியுடன் இணைந்து பயணித்த பலர் பிரதேச சபை உறுப்பினர்களாகக் கூட வர முடியவில்லை.

சிலர் கட்சிக்கு கிடைத்த வாக்குகள் மூலம் ஆசனம் பெற்ற போதும் மக்கள் ஆணையை பெருவாரியாக வழங்கியவர்களை மதிக்கும் நற்பண்புகளையும் கொண்டிருக்கவில்லை.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் மட்டும் ஒரு இலட்சத்து 32 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்று நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் முதலமைச்சரானார்.

அவர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டதால் தான் 30 ஆசனங்களைப் பெறும் வல்லமையை அக்கட்சி பெற்றது என்ற உண்மையும் தேர்தலில் தோல்வியுற்றாலும் தேசியப்பட்டியலில் உள்நுழைய சந்தர்ப்பம் கிடைத்ததையும் உணராது அவரிடமே கேள்வியெழுப்ப முற்படுவர்களும் உண்டு.

கட்சி வாக்குகளை கெஞ்சி கேட்டு ஆசனம் பிடித்தவர்களும் வாக்கு மோசடியில் ஈடுபட்டவர்களும் மக்கள் பிரதிநிதிகளாக கருதப்பட முடியாதவர்கள்.

அத்தகையவர்களுக்கு பின் செல்பவர்களும் அவர்களுக்காக வக்காளத்து வாங்குபவர்களும் வடக்கு மாகாண முதலமைச்சரை அவமதிப்பு செய்வதை அனுமதிக்க தமிழர்கள் தயாராக இல்லை.

கொடும்பாவி எரிக்கப்பட்டவர்கள் துண்டுப்பிரசுரங்கள் ஊடாக தூற்றப்பட்டவர்கள் தனது இனத்துக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட அநீதிகளை தட்டிக்கேட்கவும் அதற்கு எதிராகப் போராடவும் வக்கில்லாதவர்கள் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதை இன அழிப்பு என்றனர்.

முஸ்லிம்கள் வெளியேற்றப் பட்டது. இன அழிப்பு என்று ஒத்துக் கொள்பவர்கள் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொன்றழிக்கப்படும் போது மௌன விரதம் இருந்தார்களா?

இவர்களை எதிர்த்து தமிழர்கள் போராட முற்பட்டுவிட்டார்கள். கிளிநொச்சியில் இடம்பெற்ற காணாமற்போனவர்களின் உறவினர்களின் போராட்டமும் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் வரணி இயற்றாலை பகுதியைச் சேர்ந்த நாகேந்திரன் துஷாந்தன் என்பவரால் முன்னெடுக்கப்பட்ட போராட்டமும் வெளிப்படுத்தியுள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை அவமதிப்போரை எதிர்க்கத் துணியும் தமிழர்கள் சுமந்திரன் எம்.பியை அவுஸ்திரேலியாவில் வைத்து புலம்பெயர் தமிழர் முற்றுகையிட்டது போன்று செயற்பட முற்பட மாட்டார்கள்.

ஆனால் எமது இனத்தை படுகுழியில் தள்ளி அதன் ஊடாக தமது சுயநலன்களை எப்படியாவது பூர்த்தி செய்துவிட வேண்டும் என்று அலையும் கூட்டம் விஷமப் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றது.

காணாமற்போனவர்களின் உற வினர்கள் முதலமைச்சரை சந்தித்து கண்ணீர்விட்டு கதறியழுது தமது பிள்ளைகளை மீட்டுத்தர மார்க்கம் கோரியதை மறந்து அவரை எதிர்த்ததாக அபகீர்த்தி ஏற்படுத்த முற்படுகின்றது.

வடக்கு மாகாண முதலமைச்சரை அபகீர்த்திக்கு உள்ளாக்கும் முயற்சிகள் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வேட்பாளராக அவர் அறிவிக்கப்பட்டதிலிருந்து ஒரு தரப்பினரால் திட்டமிட்டு பரப்பப்பட்டு வருகின்றது.

தந்தை செல்வாவுக்கு பின்பு தமிழருக்கு நம்பிக்கையூட்டிய தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைத் தொடர்ந்து தமிழரின் அதிகூடிய நம்பிக்கைக்குரியவர் சி.வி.விக்னேஸ்வரன் என்பதை மக்களின் வாக்குகள் வெளிப்படுத்தியுள்ளன.

பாராளுமன்றத்தேர்தலின் பின்னர் வடக்கு மாகாண முதலமைச்சரை கட்சியை விட்டு நீக்கும் முயற்சியில் சுமந்திரன் ஈடுபட்ட போதும் அதனை அவுஸ்திரேலியாவில் வைத்து வெளிப்படுத்திய போதும் அக்கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் எதிர்த்திருந்தார்.

அதுமட்டுமின்றி வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் யாழ். மாவட்டத்தில் மட் டும் போட்டியிட்டு ஒரு இலட்சத்து 32 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்றிருந்தார்.

இதன் ஊடாக அவருக்கு தமிழ் மக்களின் ஆதரவு அபரிமிதமாகவு ள்ளது என்பதை சிறீதரன் வெளிப்படுத்தியிருந்தார்.

ஆண்டாண்டு காலமாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடனேயே பின்னிப்பிணைந்திருந்தார்கள். எல்லாம் பின் தள்ளப்பட்டு புதிதாக தேர்தலில் போட்டியிட்டவர்கள் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொண்டனர்.

திருமதி. அன ந்தி சசிதரனை அவமதிப்போர் கூட இதனை அறியவில்லை. அவர் யாழ். மாவட்டத்தில் 89 ஆயிரம் விருப்பு வாக்குகளைப் பெற்று முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு அடுத்த நிலையிலுள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக கிளிநொச்சியில் காணாமற்போனவர்களின் உறவினர்கள் முன்னெடுத்த போராட்டத்தில் அனந்தியை கட்டித் தழுவி கண்ணீர்விட்ட காணாமற் போனவர்களின் உறவினர்கள் வடக்கு முதலமைச்சருக்கு கொடுக்கும் முன்னுரிமையை அனந்திக்கும் கொடுக்க தலைப்பட்டுள்ளனர்.

பாராளுமன்றத் தேர்தலில் அனந்தி சசிதரன் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டால் தமது ஆசனங்களுக்கு ஆபத்து வந்துவிடும் என்ற அச்சத்தில் பதறிப்போனவர்கள் அவர் போட்டியிடுவதைத் தடுக்க பகீரதப்பிரயத்தனம் மேற்கொண்டனர்.

மக்கள் பிரதிநிதிகளை தாமே தெரிவு செய்ய சந்தர்ப்பம் வழங்க மறுப்பவர்களும் மக்களின் ஆணைக்கு மாறாக செயற்பட முற்படுவர்களும் பிரதமர் ரணில் போன்ற சிங்களத் தலைவர்களுடன் கூட்டுச் சேர்ந்து தமிழினத்தை மாற்றானிடம் மண்டியிட் வைக்கத் துடிப்பவர்களும் தாமாக மாற வேண்டும். இல்லையேல் மக்கள் மிக விரைவாக இனம் கண்டு மாற்ற வேண்டும்.

காண்டீபன்

# குழப்பமா டோனி?




'வெற்றிகரமாக தொடர்ந்து நான்காவது ஒருநாள் தொடரிலும் தோல்வியைச் சந்தித்திருககிறது டோனி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி. கடந்த 26 ஆண்டுகளில் போட்டியே இல்லாமல் முதல் நான்கு போட்டிகளிலுமே தோற்று, ஒருநாள் தொடரை இந்திய அணி இழப்பது இதுவே முதல் முறை.

வங்கதேசம், தென்னாபிரிக்கா, இப்போது அவுஸ்திரேலியா என மூன்று தொடர் தோல்விகளுக்கும் டோனிதான் காரணம்' என கோஷங்கள் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்திருக்கின்றன.

டோனியிடம் வெற்றிக்கான வேகம் இல்லை' என்கிறார்கள் விமர்சகர்கள்.

கோஹ்லி தலைமையிலான இந்திய டெஸ்ட் அணி உலகின் நம்பர் 1 இடத்தைப் பிடித்துவிட்டது. டோனி தலைமையிலான ஒருநாள் அணி தோல்வி மேல் தோல்விகளைச் சந்தித்துக்கொண்டிருக்கிறது" என்கிற ஒப்பீடுகள் அதிகமாகி விட்டன. ஏற்கனவே டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுவிட்ட டோனி, ஒரு நாள் போட்டிகளில் இருந்து மட்டும் அல்ல, கிரிக்கெட்டில் இருந்தே ஓய்வுபெறும் காலம் நெருங்கிவிட்டது.

பந்துவீச்சாளர்களைக் காணவில்லை!

அவுஸ்திரேலிய மண்ணில முதல் மூன்று போட்டிகளிலும் முதலில் ஆடிய இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கை 309, 308, 295... முதல் இரண்டு போட்டிகளிலும் ரோஹித் ஷர்மா சதம், மூன்றாவது போட்டியில் கோலி சதம் என பட்டிங் பட்டையைக் கிளப்பியது. ஆனால் பந்துவீச்சு வழக்கத்தைவிடவும் சொதப்பல்.

ஸ்ட்ரைக் பௌலர் என்கிற ஒரு வார்த்தையே இந்திய அணிக்குத் தெரியாமல் போய்விட்டது. வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமான அவுஸ்திரேலிய மண்ணில் இஷாந்த் ஷர்மாவும் உமேஷ் யாதவும்தான் சீனியர்கள். ஆனால், இருவரின் பந்துவீச்சும் படுமோசம். முதல் இரண்டு ஒருநாள் போட்டிகளிலும் தோல்வியைத் தழுவியதால், மூன்றாவது ஒருநாள் போட்டிக்கு உலகின் நம்பர் 1 பந்துவீச்சாளரான ரவிச்சந்திரன் அஸ்வினையே வெளியே உட்காரவைத்தார் டோனி.

2015-ம் ஆண்டில் இதே அவுஸ்திரேலியாவில் நடந்த உலகக்கோப்பை தோல்விக்குக்கூட சரியான வேகப் பந்து வீச்சாளர்கள் இல்லாததுதான் காரணம். மீண்டும் அதே ஊருக்கு, அசுர பலம்கொண்ட அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக, பார்மிலேயே இல்லாத பந்துவீச்சாளர்களைக் கொண்டுபோனது யார் தவறு? கடந்த ஐந்து ஆண்டுகளாக ஓர் ஒழுங்கற்ற, சரியான பந்து வீச்சாளர்கள் இல்லாத மோசமான அணியை வழி நடத்திவந்த டோனிதானே இந்தத் தோல்விக்குப் பொறுப்பேற்கவேண்டியவர்? இப்போதும் பந்துவீச்சாளர்களுக்குப் போதுமான அனுபவம் இல்லை' என இஷாந்த் ஷர்மாவையும் உமேஷ் யாதவையும் காப்பாற்றுகிறார் டோனி. 100, 50 போட்டிகளுக்கும் மேல் ஆடியிருக்கும் இஷாந்த் ஷர்மா, உமேஷ் யாதவை அனுபவம் இல்லாதவர்கள்' எனச் சொல்லி யாரைக் காப்பாற்றப்பார்க்கிறார் டோனி? தன் அணிக்கான திறமையான பந்துவீச்சாளர்களை ஏன் அவரால் கேட்டு வாங்க முடியவில்லை.

இந்தியாவில் போட்டிகள் நடக்கும்போது இளம் வீரர்களுக்கு எந்தப் போட்டியிலும் விளையாட வாய்ப்பு தராமல், ஸ்பின் பிட்ச்சுகளை மட்டுமே வைத்துக்கொண்டு வெற்றிபற்றுவிட்டால் போதும் என்கிற பி.சி.சி.ஐ பிரதிநிதி போலவே ஏன் டோனியும் யோசிக்க வேண்டும்?

"ஹார்ஸஸ் ஃபார் கோர்ஸஸ்' தியரியைப் பின்பற்றுகிறேன்' என்பார் டோனி. 'போட்டி நடைபெறும் நாள் அன்று பிட்ச்சின் தன்மை, தட்டவெப்பச் சூழல் இவற்றைப் பொறுத்துதான் அணியைத் தேர்ந்தெடுக்க முடியும். எல்லோரும் எல்லா போட்டிகளிலும் இருக்க முடியாது'"என்பதுதான் டோனியின் வாதம். ஆனால், இப்படிச் சொன்ன டோனியே தொடர்ந்து சரியாக பட் செய்யவில்லை என்பதுதான் உண்மை.

டூடௌன் பட்ஸ்மேனாக களம் இறங்குவதா, ஐந்தாவது வீரராக களம் இறங்குவதா அல்லது ஆறாவது வீரராகவா என தான் மட்டும் குழம்பாமல், அணியின் பட்டிங் ஓடரையே குழப்பிக் கொண்டிருக்கிறார் டோனி.

'டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடவில்லை என்றாலே ஒருவரால் முழுமையான கிரிக்கெட் வீரராக இருக்க முடியாது. ஒரு போர்மேட்டில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டாலே, அது ஒரு வீரருக்குப் பின்னடைவுதான்' என டோனியை விமர்சித்திருக்கிறார் முன்னாள் கப்டன் கபில்தேவ்.

2014-ம் ஆண்டு இறுதியில் அவுஸ்திரேலியாவில்தான் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார் டோனி. மீண்டும் அதே அவுஸ்திரேலியாவில் அப்படி ஒரு நிலைமையில்தான் வந்து நின்றிருக்கிறார் டோனி.

பல விக்கெட் கீப்பர்கள் வருவதும் போவதுமாக இருந்த இந்திய அணியில், சட்டென உள்ளே புகுந்து கவனத்தை ஈர்த்தவர் மகேந்திர சிங் டோனி. எந்தக் கிரிக்கெட் பின்புலமும் இல்லாத, கிரிக்கெட்டுக்கு சற்றும் சம்பந்தம் இல்லாத ஜார்கண்ட் மாநிலத்தில் இருந்து வந்தவர், இந்திய அணிக்கு கப்டனாக மாறியது யாருமே எதிர்பார்க்காத ட்விஸ்ட். 20-20 உலகக் கோப்பை, 2011-ம் ஆண்டு ஒருநாள் உலகக்கோப்பை என கப்டனாக அவர் படைத்தது சாதனை சகாப்தம். ஆனால், 2011 உலகக்கோப்பைக்குப் பிறகு அவர் தலைமையிலான அணி சந்தித்தது அனை த்துமே மோசமான தோல்விகளே. ஒரு நிலையில்லாத அணிக்குத் தலைவனாகத் தொடர்ந்து பொறுப்பேற்று வந்திருக்கிறார் டோனி.

20-20 உலகக் கோப்பை டோனிக்கு வாழ்வா... சாவா போராட்டம். உலகக் கோப்பையில் சொதப்பினால், கப்டனாக மட்டும் அல்ல ஒரு வீரராகக் கூட டோனி இந்திய அணிக்குள் தொடர்வாரா என்பது சந்தேகமே.

இந்தியாவுக்கு இரண்டு உலகக்கோப்பைகளை வென்றுதந்த கப்டன், கௌரவ விலகலுக்குத் தயாராகி வருகிறார் என்பது இப்போது அவரது பேச்சுகளில் இருந்தும் தெரிகிறது!

**நன்றி: விகடன்**

# காலத்தால் அழியாத கானங்கள் ...

படம் : இதயக் கனி
பாடியவர்: ரி.எம்.சௌந்தரராஜன், பி.சுசீலா
வரிகள் : புலமைப்பித்தன்
இசை : எம்.எஸ்.வி




இன்பமே உந்தன் பேர் பெண்மையோ
என் இதயக்கனி நீ
சொல்லும் சொல்லில் மழலைக் கிளி
என் நெஞ்சில் ஆடும் பருவக் கொடி

இன்பமே உந்தன் பேர் வள்ளலோ... ஓ...
இன்பமே உந்தன் பேர் வள்ளலோ
உன் இதயக்கனி நான்
சொல்லும் சொல்லில் மழ்லைக் கிளி
உன் நெஞ்சில் ஆடும் பருவக் கொடி

இன்பமே உந்தன் பேர் வள்ளலோ... ஓ...
சக்கரை பந்தல் நான் தேன் மழை சிந்த வா
சக்கரை பந்தல் நான் தேன் மழை சிந்த வா
சந்தன மேடையும் இங்கே சாகச நாடகம் எங்கே
தேனொடு பால் தரும் செவ்விள நீர்களை
ஓரிரு வாழைகள் தாங்கும்
தேவதை போல் எழில் மேவிட நீ வர
நாளும் என் மனம் ஏங்கும்
இன்பமே உந்தன் பேர் பெண்மையோ... ஓ...

பஞ்சணை வேண்டுமோ நெஞ்சணை போதுமே
பஞ்சணை வேண்டுமோ நெஞ்சணை போதுமே
கை விரல் ஓவியம் காண
காலையில் பூ முகம் நாண
பொன்னொளி சிந்திடும் மெல்லிய தீபத்தில்
போரிடும் மேனிகள் துள்ள
புன்னகையோடொரு கண் தரும் ஜாடையில்
பேசும் மந்திரம் என்ன

இன்பமே உந்தன் பேர் வள்ளலோ... ஓ...
மல்லிகைத் தோட்டமோ வெண் பனி கூட்டமோ
மல்லிகைத் தோட்டமோ வெண் பனி கூட்டமோ
மா மலை மேல் விளையாடும்
மார்பினில் பூந்துகில் ஆகும்
மங்கல வாத்தியம் பொங்கிடும் ஓசையில்
மேகமும் வாழ்த்திசை பாடும்
மாளிகை வாசலில் ஆடிய தோரணம்
வான வீதியில் ஆடும்
இன்பமே உந்தன் பேர் பெண்மையோ
என் இதயக்கனி நீ
சொல்லும் சொல்லில் மழலைக் கிளி
என் நெஞ்சில் ஆடும் பருவக் கொடி
இன்பமே உந்தன் பேர் வள்ளலோ... ஓ...

**இப்பாடலை**
**SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**
செல்வகுமார் குடும்பம், வீரசிங்கம் குடும்பம் - அரியாலை, ஸ்ரீபற்மராசா குடும்பம்- தெல்லிப் பழை, கந்தசாமி, சந்திரகுமார், இந்திரன், விமல்ராஜ், சிவராசா குடும்பம், மானிப்பாய்.

*அன்பு வாசகர்களே!*
காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்
**021 567 1543**
எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.


# ஈழத்து சினிமா

## Jaffna-குறும்பட விமர்சனம்

Jaffna என்ற பெயரில் குறும்படம் ஒன்று வெளியாகி இருக்கின்றது. இக் குறும்படத்தை பார்த்தபின் இப்படத்திற்கும் குறும்படத்திற்கும் இடையில் என்ன தொடர்பு என்ற ஐயம் உங்களுக்கு வரலாம். அதற்கு விடை கண்டுபிடிக்கவும் முடியாமலும் உங்களால் போகலாம்.

கவிமாறன் சிவா எழுதி இயக்கி நடித்து வெளிவந்திருக்கும் படம் இது. Jaffna என்ற நகரத்தைக்காட்டுகின்றார்கள்.அந்த நகரத்தில் சட்டவிரோத செயல்கள் செய்து கட்டப்பஞ்சாயத்து நடத்தும் ஒருவருக்கு கீழ் இரண்டு முக்கிய இணைபிரியா நண்பர்கள் அடியாட்களாக இருக்கிறார்கள். அவர்கள் அசால்டாக கொலைகள் புரிந்து கொண்டு எஜமானுக்கு விசுவாசமாக இருக்கிறார்கள். இவர்களில் ஒருவர் ஒரு பெண்ணைக் காதலித்து திருமணம் செய்து கொள்கிறார். அப்பெண் மீது எஜமானுக்கு மோகம் ஏற்படுகின்றது. அவளின் கணவனையும் நண்பனையும் பிரித்து வேறுவேறு இடங்களுக்கு அனுப்பிவிட்டு, அப்பெண்ணை வல்லுறவுக்கு உட்படுத்துவதோடும், அப்பெண்ணின் கணவனான தன் விசுவாசத்துக்குரிய தன் அடியாளையும் தன் தமபியின் உதவியுடன் தீர்த்துக்கட்டிவிடுகின்றார். இதற்குப்பின் நீங்கள் ஊகிப்பதுதான் மிகுதிக்கதையாக இருகின்றது, மற்றைய நண்பர் பழிவேண்டப் புறப்பட்டுகின்றார். பின் சுபம்.

கதாநாயகர்கள் துப்பாக்கியை எடுக்கிறார்கள், சுடுகிறார்கள். காரில் இருந்து இறங்கும்போது கால் நிலத்தில் வைக்குமநொடியில் புழுதி பறக்கின்றது. முழுக்க முழுக்க தென்னிந்திய பாணியை ஒட்டி இருக்கின்றது. இவ்வாறான காட்சிகள் வைப்பதற்கு காரணம் வர்த்தக சினிமாவிற்கான முயற்சி என்று சொல்லப்படுவது மிகுந்த அபத்தமான ஒன்றாக இருக்கின்றது. வர்த்தக சினிமா என்றால் குளிர்கண்ணாடியை மாறிமாறி அணிவதும் பத்துப்பேரை ஒரு நேரத்தில் அடித்து சாய்ப்பதுமாக மட்டும் நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். வர்த்தக சினிமா என்பது ஒரு திரைக்கதையில் உள்ள மாஸ்தனத்தல் தங்கியில்லை. அதற்கு முக்கிய இரண்டு விடயங்கள் முக்கியமானவை. முதலில் வர்த்தகம் தெரிந்திருக்க வேண்டும். அடுத்தது சினிமாவை எப்படி அந்த வர்த்தகத்தோடு இணைப்பது




என்று தெரிந்திருக்க வேண்டும். இந்த இரண்டுமே புறவயமான ஒன்று, இவற்றின் போதாமைகள் பற்றி கவனிக்கமுதல் அகவயமான அபத்தமான திரைக்கதையை வைத்துக்கொண்டு நகர்வது பிற்போக்குத்தனமானது. திரையில் அடிக்கடி முகத்தைக்காட்டி மக்களின் நினை வடுக்கில் நுழைந்தபின் அதீதமான கதாநாயக விம்பத்தை கட்டமைத்தல் மாஸ்தனத்தை கொண்டுவரும். பார்வையாளர்களும் ஏற்றுக் கொள்ளத் தொடங்குவார்கள். இவை இல் லாமல் திரையில் வரும் கதாநாயர்கள் சுலோமோஷன் காட்சிகளில் நடந்து வருவதும், மாறிமாறி கண்ணாடியை அணிவது பார்வையாளருக்கு சிரிப்பை ஏற்படுத்தி விடும் அபாயத்தைக் கொண்டிருக்கின்றன. இவ்வாறான காட்சிகளுக்கும் திரைப்படத்துக்கும் பின்னுள்ள ஒரே நோக்கம் 'கவனம் ஈர்ப்பது' ( Attention Creation ) மாத்திரமே. பிறரை தம்பக்கம் திரும்பி பார்க்க வைப்பதும், குறுகிய காலத்தில் தமக்குத் தெரிந்தவர்கள் மத்தியில் அதீத கதாநாயக விம்பம் ஒன்றை கட்டமைத்துக் கொள்ளல் என்பதே அவர்களின் நோக்கமாக இருக்கிறது.

இக்குறும்படத்தின் கதையும் திரைக்கதையும் மிகுந்த பலவீனமானதாக இருப்பதோடு புதிதாக எதனையும் சொல்லி விடவில்லை. உள்ளடக்கம் சார்ந்த அபத்தங்கள் உருவம் சார்ந்த கவனிப்புக்களை நீர்ந்துபோகவைக்கிறது. சிங்கள சினிமாவுக்கு ஒரு அடையாளம் இருக்கிறது. அதேபோல, மலையாள சினிமாவுக்கும் ஒரு அடையாளம் இருக்கிறது. ஈரான் சினிமா, ஹிந்தி சினிமா இவை எல்லாமே தமக்கான சுய அடையாளங்களுடன் இருக்கின்றன. ஆனால் ஈழச்சினிமாவுக்கு எனற அடையாளம் இன்னும் உருவாகவில்லை. இந்த அடையாளங்கள் தென்னிந்திய சாயலில் புகுத்தப்படுகின்றது.

தென்னிந்திய சினிமாவின் பிடிக்குள் இருந்து முதலில் மக்களை மீட்க வேண்டும் என்பதற்காக தென்னிந்திய திரைப்படப் பாணியிலேயே, ஈழ சினிமாக்கள் உருவாக்க வேண்டும் என்றும் சில கருத்துக்களும் இருகின்றன. அது அறிவிலித்தனமான கருத்து. கற்பனையில் சுயமான ஒரு கதையின் பின்னணியை படம்பிடிக்க முடியாதவர்களின் அசட்டுக்கருத்துக்கள் அவை. மக்கள் புத்திசாலிகள். அவர்கள் நல்ல படங்களை எப்போதுமே வெற்றியடையச் செய்தே வருகிறார்கள். அதற்கான வர்த்தக வெற்றியையும் உருவாக்கித் தருகிறார்கள். இது எல்லாமே இயக்குநரின் கையில்தான் இருக்கிறது. எமது பாணியிலே நல்ல சினிமாவைக் கொடுத்தால் போதுமானது. மிகுதி தானாக நடக்கும்.

-அனோஜன் பாலகிருஷ்ணன்-

# ஈழத்துக் கவிதைகள்

## நல்லம்மாவின் நெருப்புச் சட்டி

இன்றுமிந்தப் பின்னிரவில்
அலாம் அலறி ஓய்கையிலே
திகைச் செழுந்த நல்லம்மாள் பாயிருந்து
சோம்பல் முறிக்கையிலே
எங்கிருந்தோ நாயொன்று
ஊளையிட்டுக் கேட்கிறது....!
எழும்பு பிள்ள...!
மணி அடிச்சுப் போட்டு...து.
நேரம் போகு...து தட்டிவிட எழுந்த மகள்
பின் தொடரத் தான் நடந்து
குசினிக்குப் போகின்றாள்
சிரட்டை உடை அடுப்பு மூட்டு
தேங்காயுடை பாலைப் பிழி மணி
இரண்டடிச்சுப் போட்டு...து.
சந்திக்கடை ராசதுரை
கடைதிறக்க நாலுமணி
ஆகும். அதுக்கு முன்னம்
அப்பஞ் சுட்டுப் போடோணும்
பால் பிழிஞ்சு மாக்கரைச்சு
அடுப்பூட்டி முடிச்ச மகள்
தூங்கிவிழ: போய்ப்படுக்கச் சொல்லியவள்-
தனியிருந்து அப்பம் சுடுகின்றாள்
பற்றியெரி சிரட்டைத்தணல்
கரிபற்றத் தணல் நிறைந்த
நெருப்புச் சட்டிகள்
வீசுகிற பெரு வெக்கை
நெஞ்சினிலும் முகத்தினிலும்
முன்னெழுந்து தாக்கித்
தன்னுடலைத் தின்கையிலும்
குந்தியிருந்தபடி அவள் அப்பம் சுடுகின்றாள்.
ஓம்...!
பின்னிரவின் இரண்டு மணிப் போதிருந்து முற்பகலின்
எட்டுமணிப் பொழுதுவரை
அவள் அப்பம் சுடவேண்டும்.
மூத்தமகன் பள்ளியில்
பத்துப் படிக்கிறான்.
சின்னவனும் இன்னும் இரண்டு
பிள்ளைகளும் கூட
பள்ளிக்குப் போகின்றார்.
கடலுக்குப் போற அவள்
புருஷன் பின்னேரம்
கொண்டுவரும் நாலைந்து ரூபாய்களே?

**அ.யேசுராசா**

## நாள் தொடங்குகிறது...!

காலை விடிகிறது....!
எழுந்து வருகிறாள்
இருள் இன்னும் குலையவில்லை
சிறுதொலைவுக் கப்பால் ஒன்றுந்தெரியவில்லை.
பனிமூட்டம் ஒளி சிறுவட்டம் போட்டுள்ளது.
காலடியில் நின்றும்முன்
போகிறது றெயில்பாதை
பாலத் தடியில் ரோர்ச்சின் ஒளி பட்டு
பாம்பொன்று மெல்ல அசைகிறது...
விலத்தி வருகின்றான்! இருளில் தனிமைகொண்டு
ஸ்ரேஷன் நின்றுள்ளது முன்கிடந்த வாங்குகளில்
ஆரோ சிலபேர்கள் படுத்தும் கிடக்கிறார்.
சிறுதொலைவில்
கண்ணில் பட்டபடி போஸ்ற் ஒவ்வீஸ்
டேற்ஸ்ராம்பை யாரோ ஓங்கிக் குத்துகிறார்.
விட்டுவிட்டுச் சத்தம் வருகிறது...!
குட்மோணிங் மாஸ்ரர் மோணிங்
மோணிங் ரேண் காரரெல்லாம் வந்து குழுமியுள்ளார்.
மெயில்வான் வருகிறது....!
சென்ற மெயில் பாக்சை விரைந்து இறக்கிறார்
மெயில்காா்ட்டின் புத்தகத்தில் கையொப்பம் இடுகின்றான்
உறுமி மெயில்வானும் ஓடிச் செல்கிறது...!
வெட்டுவமா மாஸ்ரர் குணவங்ஸ கேட்கத்
தலையாட்ட வெட்டத் தொடங்கிறார்.
எக்ஸ்பிரஸ் லெற்றர் சேமிப்புப் புத்தகங்கள்
றெஜிஸ்ரர் பாக்ஸ்
புத்தகத்தில் விரைந்து எழுதத் தொடங்குகிறான்
கடிதக் கட்டுக்களைச் சோர்ட்டர் பிரித்தபடி..
வெற்றுப் பைகளினை றணர் அடுக்குகிறான்
இயந்திரமாய் மனிதர் இயங்கத் தொடங்கியதும்
உயிர்ப்புக் கொண்ட நான்
நீளத் தொடங்கியது...!

**1984 ஆம் ஆண்டு வெளியான அழியப்படாத நினைவுகள் எனும் கவிதை நூலில் இருந்து..**

# கதகளி

## திரைவிமர்சனம்

அண்ணன் மீதான ஆத்திரத்தில் குடும்பத்தைக் கெடுத்த வில்லனை, காத்திருந்து பழிதீர்க்கும் இன்னொரு தம்பியின் கதை.



'தம்பாவைக் கொன்றது யார்?' - என்பதுதான் ஒன்லைன்.

கடலூரையே தன் மீசைக்குள் புதைத்து வைத்திருக்கும் முரட்டு வில்லன் தம்பா. விஷால் குடும்பம், முன்னாள் எம்.எல்.ஏ., தொழிலதிபர்... என தெருவுக்கு நான்கு எதிரிகள்.

கூலிப்படை ஒன்று தம்பாவை ஸ்கெட்ச் போட்டுத் தூக்கிவிட, வெறியாட்டம் ஆடுகிறது அவனது கும்பல். நான்கு நாட்களில் விஷாலுக்குத் திருமணம். இந்தச் சூழலில் பொலிஸ் விஷாலை பலியாடு ஆக்க நினைக்கிறது.


விஷால் தப்பிப்பதும், உண்மைக் கொலைகாரன் யார் என்ற ட்விஸ்ட்டுமே கொலவெறி கதகளி!

யூ.எஸ் ரிட்டர்ன் பாலீஷ் விஷால்... கேத்ரீன் தெரெசாவுடன் லவ்வுவது, அண்ணனுக்கு ஹெல்ப்புவது, நண்பர்களுடன் டான்ஸாடுவது... என எல்லாமே தெரிஞ்ச ஸ்டேட்டஸ்தான்.

இருந்தாலும் லைக்ஸ் போடலாம். கொஞ்சம் குண்டாகி வந்திருக்கிறார் 'மெட்ராஸ்' கேத்ரீன் தெரெசா.

அண்ணனாக மைம் கோபியும், அந்த டெரர் இன்ஸ்பெக்டரும் நச் நடிப்பு. மெசேஜ் சொல்வதற்காகவே நேந்து விடப்பட்ட சமுத்திரக்கனிக்கு இப்போது வில்லன் அவதார சீஸன்போல. இதில் தம்பாவுக்கு டப்பிங் தந்து மிரட்டுகிறார்.

மதுரைக்கு பதில் கடலூர். ஆனாலும் கடலூரின் முதுகிலும் அரிவாளைச் செருகியிருக்கிறார்கள். ரொமான்ஸ் ரூட்டில் போகும் படம், இடைவேளைக்கு முன்னர் டேக் ஆஃப் ஆகிறது. தம்பாவின் கொலை, விஷாலைத் துரத்துவது என எமோஷனலாகவும் ஆக்‌ஷனாகவும் பக்கா இன்டர்வல் ப்ளாட்.




ஆனால், தெறிக்கவேண்டிய இடைவேளைக்குப் பின்னரான இரண்டாம் பாதியைப் போகிபோல எரிக்கவாவிடுவது? ஒருகட்டத்தில் நாமே சென்று ஸ்கிரீனில் யாரையாவது அடிக்கலாமா என யோசிக்கும் அளவுக்குப் பேசியே கொல்கிறார்கள்.

முதல் முறையாக ஆக்‌ஷன் கதை எடுத்த பாண்டிராஜுக்கு, இன்னும் கொஞ்சம் பயிற்சி தேவை.


இரண்டே பாடல்கள் என்பதால், 'கதகளி" தீமில் மட்டுமே ஓவர்டைம் பார்த்திருக்கிறார் ஹிப்ஹாப் ஆதி. திரைக்கதையில் இல்லாத பதற்றத்தை பாலசுப்ரமணியெமின் கமரா தந்துவிடுகிறது.

பஸ் ஏறி பிரச்சினை செய்த விஷாலை, குடும்பத்துக்காகப் பழிதீர்க்கும் விஷால் மாற்றினார். இப்போது இந்த விஷாலை மீட்க இன்னொருவர் வந்தே ஆக வேண்டும்!








## பிரபல கருத்துக்கணிப்பில் ரஜினியை முந்தி முதல் இடத்திற்கு வந்த அஜித்



தமிழ் சினிமாவை பொறுத்தவரை யாருக்கு முதலிடம் என்பது நீண்ட நாட்களாக நடந்து வரும் ஒரு போட்டி. இதில் எப்போதும் ரஜினியே சிம்மாசனம் போட்டு அமர்ந்துள்ளார். இந்நிலையில் சமீபத்தில் சென்னையின் பிரபல கல்லூரி ஒன்று, தமிழகத்தில் பலருக்கும் பிடித்த நடிகர் யார்? என்று ஒரு கருத்துக்கணிப்பை நடத்தியது.இதில் அஜித் 16% வாக்குகள் பெற்று முதலிடத்திலும், ரஜினிகாந்த் 15.9% வாக்குகள் பெற்று இரண்டாம் இடத்திலும் உள்ளனர். இதை தொடர்ந்து விஜய் 9.2 % வாக்குகளும், கமல் 5.9 வாக்குகளும், சூர்யா 4.3% வாக்குகளும் பெற்றுள்ளனர்.

# ஆக்கிரமிப்பின் குறியீடாகிவிட்ட- முல்லையின் வட்டுவாகல் நிலம்




முல்லைத்தீவு மாவட்டத்தில் ஈழ இறுதிப்போர் நடந்த கிராமங்களில் ஒன்று வட்டுவாகல். இன்னமும் போரின் வடுக்கள் ஆறாதிருக்கும் அந்தக் கிராமத்தின் ஒரு பகுதி இராணுவ அடையாளத்தோடு காணப்படுகிறது மாபெரும் இராணுவ முகாம். அதன் பெயர் ***இலங்கை கடற்படை கப்பல் கோத்தபாய.*** மிகப் பெரும் ஆக்கிரமிப்பாய் இருக்கும் இந்த முகாமினால் இப் பிரதேசம் உறங்கிக்கிடக்கிறது.

முல்லைத்தீவு மாவட்டம் முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் அடங்கும் வட்டுவாகல் 2004 சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதி. பின்னர் அது யுத்தத்ததால் மேலும் பாதிக்கப் பட்டது. யுத்தம் என்றால் இறுதி யுத்தம். ஈழத் தமிழ் இனம் சந்தித்த மாபெரும் இனப் படுகொலை யுத்தம். பேரு ழியின் இரத்தக்கறை படிந்த பல்வேறு குரல்களின் சாட்சியே வட்டுவாகல்.

**சுனாமியினாலும் போரினாலும் காயப்பட்ட வட்டுவாகல் பாலத்தை கடந்து செல்லும் ஒவ்வொரு மனிதருக்கும் ஒவ் முறைமுறையும் நெஞ்சை உலுக்கும் சம்பவங்கள் ஞாபகத்தில் எழும். அதன் வட்டு வாகல் பாலம் நந்திக்கடல் என்ற மாபெரும் துயரம் படிந்த கடலை கடந்து செல்லும் பாலம்.**

இன அழிப்பில் கொன்று வீசப்பட்டவர்கள் மதிந்த கடல் நந்திக்கடல். இன அழிப்புச் செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் என்பதை அறிந்த கடல். ஈழத் தமிழினம் இன அழிப்பு வேட்டையாடப்பட்ட, இன அழிப் புப் போரின் ஈற்றில் தோற்றுப் போனவர்களாக, யாவற்றையும் இழந்தவர்களாக ஈழச் சனம் கடந்த பாலமும் கடலும் அது.

யுத்தம் முடிந்து, நிலங்களை பிடித்து, இப்போது ஆறு வருடங்களும் கடக்கின்றன. ஏன் இந்த யுத்தம் நடந்தது? யுத்தத்தில் என்ன நடத்தது? யுத்தத்தின் பின்னர் சனங்களும் அவர்களின் நிலத்திற்கும் என்ன நடந்தது என்பதற்கும் இப்போதும் சாட்சியாக இருக்கிறது வட்டுவாகல்.

வட்டுவாகல் பாலத்தின் இரு முனைகளிலும் இராணுவ முகாங்கள். வட்டுவாகல் பாலத்திலிருந்து முள்ளிவாய்ககால் வரை இலங்கை கடற்படைக்காய் நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன. முள்வேலிகள் அமைக்கப்பட்டு இலங்கை கடற்படையின் **பாதுகாப்பு இடப்பட்டு அந்த நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன.**

**இராணுவத்தின் முள் வேலிக்குள் பற்றை மண்டி பாழடைந்து காட்சியளிக்கிறது வட்டுவாகல் கிராமத்தின் ஒரு பகுதி. தனியாருக்குச் சொந்தமான 379 ஏக்கர் நிலமும் மக்கள் வசித்த அரச காணிகள் 379 ஏக்கர் காணியுமாக மொத்தம் 626 ஏக்கர் நிலத்தில்** இலங்கை கடற்படையின் கோத்தபாய முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

இதனால் சுமார் 500 குடும்பங்கள் தங்கள் வாழிடத்தை இழந்து தவிக்கின்றனர். இந்தக் காணிகளை விடுவிக்குமாறு மக்கள் பலமுறை கோரிக்கை விடுத்தனர். இந்தக் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று கோரி வடக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. அது ஒரு பதிவாக மாத்திரமே இருக்கிறது. இலங்கை அரச படைகளால் அபகரிக்கப்பட்ட நிலங்களை மீட்கும் அதிகாரம் வடக்கு மாகாண சபைக்கு இல்லையே?

வட்டுவாகல் சூழல் இலங்கை இராணுவத்திரால் ஆக் கிரமிக்கப்பட்டுள்ள நிலையில் அந்தப் பகுதியில் சுதந்திரமாக தொழிலில் ஈடுபட முடியாத நிலையே அங்கு காணப்படுகிறது. நாலாபுறமும் இராணுவமுகாம் என்றால் எப்படி மீனவர்கள் தமது தொழிலை முன்னெடுப்பது? தமது வாழ்வை மேம்படுத்துவது? **அந்த மக்கள் வசிக்க அவர்களின் நிலமும் அவர்களிடம் இல்லை. மறுபுறம் அவர்களின் வாழ்வை நடத்த அவர்களால் தொழிலையும் செய்ய முடியாத நிலை.**

மக்களும் இல்லை, அவர்களின் தொழிலையும் முன்னெடுக்க முடியாத நிலை காணப்பட புத்தர் மாத்திரம் மாபெரும் விகாரையுடன் குடியேற்றப்பட்டுள்ளார். இந்தப் பகுதியில் மக்களின் கடுமையான எதிர்ப்பை மீறி மக்களின் காணியில் கடற்படை முகாம் சூழலில் பாரிய விகாரை ஒன்றை இராணுவத்தினர் அமைத்தள்ளனர். மக்களை குடியெழுப்பவும் புத்தரை குடியமர்த்துவதுமாக இராணுவத்தினர் நிலங்களை அபகரிக்கின்றனர்?

வட்டுவாகலின் நில அபகரிப்பு விடயத்தில் இன்னொரு அதிர்ச்சி நல்லாட்சி எனும் அரசின் காலத்தில்தான் நடந்துள்ளது. இராணுவத்தினர் அபகரித்துள்ள காணிகளை நிரந்தரமாகவே பிடுங்கி எடுக்கும் கூட்டம் ஒன்று, சில தினங்களின் முன்னர் முல்லைத்தீவு அரச செயலகத்தில் நடைபெற்றது. இதில் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி வசந்த பெரேரா கலந்து கொண்டு சனங்களின் காணிகளை கடற்படைக்கு வழங்கும படி கேட்டிருக்கிறார்.

வட்டுவாகல் பகுதி மக்கள் தமது நிலத்தை ஒருபோதும் விட்டுக்கொடுக்கப் போவ **தில்லை என்று சொல்கிறார்கள். தாம் காலங்காலமாக பண்பாடாக, பாரம்பரியமாக வசித்து வந்த நிலத்தை விட்டுக கொடுத்து தம்மை அழித்துக் கொள்ள தயாரில்லை என்றும் கூறுகிறார்கள்.** அந்தப் பகுதியிலிருந்து விரையில் கடற்படை முகாமை அகற்றி தாம் இழந்த வாழ்வை மீட்டுத்தரவேண்டும் என்றும் கோருகிறார்கள்.


காணிகளை தமிழ் மக்களிடம் கொடுத்துக் கொண்டே இருக்கிறோம் என்று குறிப்பிடும் இலங்கையின் புதிய அரசு வட்டு வாகல் போன்ற இடங்களில் இராணுவம் அபகரித்திருக்கும் கா.ணிகளை பிடுங்கி எடுத்து நிரந்தரமாக ஆக்கிரமிக்க எடுக்கும் முயற்சிகள் உண்மையில் காணி விவகாரத்தில் இலங்கையின் புதிய அரசு எப்படி நடக்கிறது என்பதை வெளிப்படுத்தும் செயற்பாடுகள் என்பது நிரூபணமாகிறது.

வட்டுவாகலில் கடற்படை முகாமை நிரந்ரமாக்க நினைக்கும் இலங்கை அரசு அந்த நிலத்தில் காலம் காலமாக வாழ்ந்துவந்த மக்களின் வாழ்வை திருப்பிக் கொடுக்க மறுக்கிறது என்பதை தெரிந்தே செய்கிறதா? அந்த மக்களின் தொழிலை, வாழ்வை, வரலாற்றை, நிம்மதியை, கனவை **கெடுத்து அதில் ஒரு இராணுவ முகாமை நிரந்தரமாக்கினால் அது எதன் வெளிப்பாடு என்பதையும் அது என்ன விளைவை உருவாக்கும் என்பதையும் அரசு உணரவேண்டும்.**

**வட்டுவாகல், வடுவின் சின்னமாக வடுவின் குரலாக, வடுவின் சாட்சியாக மட்டுமல்ல ஆக்கிரமிப்பின் சின்னமாகவும் இருக்கிறது.**

***பார்த்தீபன்***





# facebook

# கருநாகமும் காகமும்



அது ஒரு அழகிய கிராமம். அக்கிராமத்தில் ஆலமரம் ஒன்று இருந்தது. அந்த ஆலமரத்தில் இரு காகங்கள் கூடுகட்டி வாழ்ந்து வந்தன. அந்த ஆலமரத்தின் கீழ் பகுதியில் பெரிய பொந்து ஒன்று இருந்தது. அந்தப் பொந்தை ஒரு கரும்பாம்பு உறைவிடமாகக் கொண்டிருந்தது.

பெண் காகம் தனது கூட்டில் முட்டைகள் இட்டுக் குஞ்சுகள் பொறிக்கும். ஆண் காகமும், பெண் காகமும் இரைதேடச் செல்லும் நேரம் பார்த்து பொந்தில் இருக்கும் அந்த பாம்பு மரத்தின் மீதுஏறி காக முட்டைகளை தின்றுவிட்டு இறங்கி விடும்.

திரும்பி வந்து பார்க்கும் போது முட்டைகள் காணாமல் போய் விட்டது கண்டு காகங்கள் மிகவும் மன வேதனை அடையும். ஒவ்வொரு தடவையும் பெண காகம் குஞ்சு பொரிப்பதும், அவற்றை கருநாகம் உண்பதும் வழக்கமான நிகழ்ச்சியாகி விட்டன.

ஒருநாள் அந்த பாம்பு முட்டைகளை சாப்பிட போகும் நேரத்தில் கூட்டிற்கு வந்த பெண்காகம் பார்த்துவிட்டது. காகத்தை பார்த்த பாம்பு முட்டைகளை சாப்பிடாமல் சென்று விட்டது. குஞ்சுகள் காணாமல் போவதற்கு மரத்தடிப் பொந்தில் வாழும் கருநாகந்தான் காரணம் என்பதைக் காகங்கள் கண்டு கொண்டன.

ஆனால் காகங்களால் கருநாகத்தை என்ன செய்ய முடியும்? தலைவிதியே எனச் சில காலத்தை ஓட்டின. திரும்பத் திரும்ப தன் குஞ்சுகளை இழக்கும் அவலத்தைப் பெண் காகத்தால் சகித்துக் கொள்ள இயலவில்லை.

ஒருநாள் பெண் காகம் ஆண் காகத்தை பார்த்து, நமது குஞ்சுகளையெல்லாம் ஒவ்வொரு தடவையும் கருநாகம் தின்று விடுகின்றதே! இனியும் இதை என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது. இந்த மரத்தை விட்டு விட்டு வேறு ஒரு பாதுகாப்பு நிறைந்த மரத்திற்குக் குடிபோய் நிம்மதியாக வாழ்க்கை நடத்துவோம்" என்று கண்ணீருடன் கதறியது.

பெண் காகம் கூறியதைக் கேட்டு மன வேதனையுற்ற ஆண் காகம் தன் மனைவியை நோக்கி உன் மனக்குமறல் எனக்கு புரிகிறது! சில விடயங்களை நாம் எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கின்றது. நீண்ட காலமாக வசித்து வரும் இந்த இடத்தைவிட்டு வேறு இடத்திற்குச் செல்ல என் மனம் கேட்கவில்லை. ஆனால் அதற்காகக் கரும்பாம்பின் அட்டூழியத்தைப் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று நான் கூற மாட்டேன். ஏதாவது ஒரு உபாயம் செய்து இந்த பாம்பைக் கொன்றாகவேண்டும் என்று ஆண் காகம் கூறியது.

இந்தக்கொடிய விஷ கருநாகதை நம்மால் கொல்ல முடியுமா? என்று சந்தேகத்தோடு பெண் காகம் கேட்டது. கருநாகத்தைக் கொல்லும் அளவுக்கு வலிமையோ வல்லமையோ எனக்கு இல்லை என்பது உண்மைதான்.

ஆனால் நல்ல அறிவாற்றல் மிக்க நல்ல நண்பர்கள் பலர் எனக்கு இருக்கிறார்கள். அவர்களிடம் யோசனை கலந்து இந்தக் கருநாகத்தை நிச்சயமாக என்னால் ஒழித்துக் கட்ட முடியும் என்று ஆவேசத்துடன் கூறியது ஆண் காகம். பிறகு பெண் காகத்தை பார்த்து, பாம்பைக் கொல்ல உடனடியாக நடவடிக்கை மேற் கொண்டாக வேண்டும். நீ பத்திரமாக இரு. நான் நண்பன் ஒருவனைச் சென்று பார்த்துவிட்டு விரைவில் திரும்பி வருகிறேன் என்று கூறிவிட்டு புறப்பட்டது.

சிறிது தொலைவில் வசித்து வந்த ஒரு நரி காகத்தின் நெருக்கமான நண்பன். நல்ல அறிவாற்றலும் தந்திர சுபாவமும் படைத்த அந்த நரியைத் தேடிக்கொண்டு காகம் அங்கு போய்ச் சேர்ந்தது.

நரி தன் நண்பன் காகத்தை மகிழ்சியுடன்வரவேற்றது. நண்பனே, நான் வாழும் மரத்தடியில் வசிக்கும் கருநாகம் செய்யும் அட்டூழியத்தை எல்லாம் மன வேதனையுடன் நரியிடம் எடுத்துக் கூறி, அதை கொல்வதற்கு நீதான் எனக்கு ஏதாவது ஒரு உதவி கூற வேண்டும் என்று கேட்டுக் கொண்டது. நரியும் நல்ல உபாயம் ஒன்றைக் காகததிற்குக் கூறி, நண்பனே, இந்த யோசனையைச் செயற்படுத்து, கருநாகத்தின் ஆயுள் முடிந்து விடும்என்று சொல்லியது. காகம் நண்பன் நரியிடம் விடைபெற்றுக் கொண்டு உடனே அதன் யோசனையைச் செயற்படுத்தும் முயற்சியினைத் தொடங்கியது. அந்த நாட்டின் அரசி வழக்கமாக நீராடும் குளக்கரைக்குச் சென்று காகம் ஒரு மரத்தில் மறைவாக அமர்ந்து அரசியின் வருகைக் காகக் காத்துக் கொண்டிருந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் அரசி தனது தோழிகளுடன் குளத்திற்கு வந்து சேர்ந்தாள். தன்னுடைய விலை உயர்ந்த ஆபரணங்களையெல்லாம் கழற்றிக் கூரைமீது வைத்துவிட்டு அரசி நீராடுவதற்காக குளத்தில் இறங்கினாள்.

காகம் உடனே பறந்து வந்து மிகவும் மதிப்புமிக்க முத்து மாலை ஒன்றைத் தனது அலகால் கொத்தி எடுத்துக் கொண்டு பறந்தோடியது. அந்த எதிர்பாராத நிகழ்ச்சியைக் கண்டு அதிர்ச்சி அடைந்த அரசியும் தோழிகளும் கூக்குரலிட்டனர். உடனே சில தோழிகள் சென்று காவலர்களிடம் நடந்த நிகழ்ச்சியைக் கூறினார்கள்.

காவலர்கள் பறந்து செல்லும் காகத்தைத் துரத்திக் கொண்டு கூச்சலிட்டவாறு பின் தொடர்ந்து சென்றார்கள். காகம் பறந்தவாறு நேராகத் தான் குடியிருக்கும் ஆலமரத்திற்குச் சென்றது.


அதற்குள் காவலர்கள் அந்த மரத்தருகே வந்து சேர்ந்தார்கள். காகம் தனது அலகில் கொத்திப் பிடித்திருந்த அரசியின் அணிகலனை காவலர்கள் கண் பார்வையில் படும் விதமாக கருநாகத்தின் பொந்துக்குள் போட்டு விட்டது. காவலர்கள் கரும் பாம்புப் புற்றை இடித்து நகையைத் தேடினார்கள்.

புற்றுக்குள் இருந்த கருநாகம் சீறிக்கொண்டு வெளியே வந்தது. காவலர்கள் அந்தக் கருநாகத்தைக் தடியால் அடித்துக் கொன்றனர். பிறகு புற்றை நன்றாக இடித்துப் பெயர்த்து அரசியின் அணிகலனைத் தேடி எடுத்துக் கொணடு சென்று விட்டனர். அதன் பிறகு அந்தக் காகக் குடும்பம் நிம்மதியாகவும், மகிழ்ச்சியுடனும் வாழ்க்கை நடத்த தொடங்கியது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 612

Search for people, places and things  Nagendram  Home

குருபரன்





தயாரீ




சுஜிகரன்





சிவம் நல்லையா



ரீகன்




நந்தன்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 17

## விற்றமின் குளிசைகளைப் போல கல்சியக் குளிசைகளைப் பாவிப்பது பாதுகாப்பானதா?

பலர் சத்துக்காகவும் நோவுக்காகவும் அதிக கல்சியக் குளிசைகளை பாவித்து வருகின்றனர். மேலைத்தேய நாடுகளிலே கல்சியக் குறைபாடு ஒரு பெரும் பிரச்சினையாக இருந்து வருகிறது. அதன் காரணமாகப் பல நோய்களும் ஏற்படுகின்றன.இதனால் அந்த நாடுகளிலே கல்சியக் குளிசைகள் பெருமளவில் பாவிக்கப்பட்டு வருகின்றன.

மேலைத்தேசங்களிலே வசிக்கும் எமது உறவினர்கள் நல்ல நோக்கத்துடன் இந்தக் கல்சியம் கொண்ட சத்துக் குளிசைகள் நிரம்பிய போத்தல்களை இங்கு இருக்கும் தமது உறவினர்களுக்கு அனுப்பி வைக்கின்றனர். அந்தக் குளிசைகளை யாழ்ப்பாணத்தில் வசிக்கும் எமது மக்களும் பெருமளவில் பாவித்து வருகின்றனர். அத்துடன் பலர் கல்சியக் குளிசைகள் என்று கேட்டு வாங்கியும் பாவித்து வருகின்றார்கள்.

யாழ்ப்பாணத்திலே எமது குடிதண்ணீரில் பெருமளவு கல்சியம் இருக்கின்றது. இந்த அதிகரித்த கல்சியத்தின் அளவால் ஏதாவது பிரச்சினைகள் தோன்றி விடுமோ என்ற ஏக்கமும் இருக்கிறது. அத்துடன் யாழ்ப்பாண உணவிலும் போதியளவு கல்சியம் இருக்கிறது. இந்த நிலையில் எமக்கு மேலதிக கல்சியக் குளிசைகள் தேவைதானா என்ற கேள்விஎழுகிறது.

நீரைக் கொதிக்கவைப்பதன் மூலம் நீரிலுள்ள கல்சியத்தை அகற்றிவிடமுடியும் என்ற ஒருதப்பான கருத்தும் நிலவுகிறது. கொதித்து ஆறிய நீரிலும் கொதிக்க வைக்காத கிணற்று நீரிலும் உள்ள கல்சியத்தின் அளவின் வித்தியாசம் சிறியதாகும். எமது நீரிலும் அன்றாட உணவிலும் இருக்கும் கல்சியும் எமக்குபோதுமானதாகவே இருக்கின்றது.

இதற்கும் மேலதிகமாக கல்சியக் குளிசைகளை உட்கொண்டால் பல சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன.மேலதிக கல்சியம் இரத்தக் குழாய்களில் படிவதால் மாரடைப்பு, பாரிசவாதம் போன்ற நோய்கள் ஏற்படும் ஆபத்து அதிகரிக்கும்.

சில நோய் நிலைகளிலே எமக்கு மேலதிகமான கல்சியக் குளிசைகள் பாவிக்க வேண்டிய தேவை இருக்கிறது. உதாரணமாக எலும்பு சம்பந்தமான சில நோய்கள் சிறுநீரகத் தொழிற்பாடு குறைவடைந்த நிலைசில குடல் சம்பந்தமான நோய்கள், சிலவகை மூட்டுநோய்கள் போன்ற நோய்நிலைகளில் வைத்தியரின் ஆலோசனைக்கு அமைய இந்தக் கல்சியக் குளிசைகளைப் பாவிக்க முடியும்.வைத்திய ஆலோசனை இன்றிக் கல்சியக் குளிசைகள் பாவிப்பதைக் தவிர்த்துக் கொள்வது நல்லது.


Dr.சி.சிவன்சுதன்
பொதுவைத்தியநிபுணர்

## முடி உதிர்தலுக்கு புதிய சிகிச்சைமுறை



உலக அளவில் ஆண்கள் மத்தியில் மிகப் பெரியபிரச்சினைகளில் ஒன்றாக வழுக்கைத் தலை மிக முக்கிய காணப்படுகிறது.

வழுக்கையைத் தடுக்கும் மருந்துகள், முடி உதிராமல் தடுக்கும் மருந்துகள், உதிர்ந்த முடி வளர்க்கும் மருந்துகள் கடைசியாக முடி மாற்று அறுவைச் சிகிச்சை முறை என்று



பல வகைமருத்துவதீர்வுகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும் இவை நிரந்தரத் தீர்வைத் தரவில்லை என்றே பார்க்கப்படுகின்றது.

ஐக்கிய இராச்சியத்தில் இருக்கும் டர்ரம் பல்கலைக்கழகமும் அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக்கழக மருத்துவமையமும் இணைந்து செய்த ஆய்வின் முடிவில் மனிதர்களின் முடியை செயற்கையாக வளர்ப்பதற்கான புதிய உத்தி கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மனிதர்களின் முடியின் அடிப்பகுதியில் இருக்கும் நுண்ணிய திசுக்களை எடுத்து அவற்றை பரிசோதனைக் கூடத்தில் ஊட்டச்சத்து மிக்க சூழலில் வளர்த்து வழுக்கையான பகுதியில் இருக்கும் தோலுக்கு அடியில் வைத்தால் அந்தப் பகுதியில் இருந்து புதிதாக முடிவளர்க்க முடியும் என்று விஞ்ஞானிகள் நிரூபித்திருக்கிறார்கள்.

மொத்தம் ஏழு பேரிடம் செய்தபரிசோதனைகளில் ஐந்து பேருக்கு ஆறு வாரங்களில் புதிய முடிவளர்வதை இவர்கள் கண்டிருப்பார்கள்.

இந்த ஆய்வின் முடிவில் வழுக்கையை முழுமையாக, நிரந்தரமாககுணப்படுத்தமுடியும் என்பதற்கான சாத்தியக் கூற்றை நிகழ்த்திக் காட்டியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தசிகிச்சைமுறை எதிர்காலத்தில் வழுக்கைப் பிரச்சினைக்குநிரந்தரத் தீர்வாகஅமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அகத்தியா

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் 0782075424 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.